427

The "NAVEENA BHARATI" Reg. No. M. 2645.

OFFICE OF THE ... 14 MAR 1931 ... MA...

பிரமோதூத தை—மாசி
பிப்ரவரி—1931.

# நவீன பாரதி




மாலை 3. மணி 2.

## ஓர் தேசிய மாதப் பத்திரிகை

இனிமையும் அழகும் கருத்தும்
விஷயமும் பொதிந்தது.

பிரசுராலயம்:
உத்தமபாளையம்,
மதுரை ஜில்லா.

JL
ை211, N29Bh
N31.32
198534

## போஷகர்கள்

1. Messrs. மச்சா முனுஸ்வாமி செட்டியார் & பிரதர்ஸ்,
சென்னை.

2. ஸ்ரீமான் நாகையஸ்வாமி அவர்கள், மானேஜர்,
தேவாரம் ஜமீன், தேவாரம்.

3. ,, T. A. K. அழகர் ராஜா அவர்கள்,
சொந்தக்காரர், மஹேஸ்வரி விலாஸ் ராஜா
எஸ்டேட், தேவாரம்.

4. ,, C. சங்கரலிங்கம் அவர்கள், சொந்தக்காரர்,
ஆனந்த விலாஸ் எஸ்டேட், தேவாரம்.

5. ,, சி. ராமலிங்கம் செட்டியார் அவர்கள்,
மிராஸ்தார், தேவாரம்.

6. ,, S. ராமலிங்கம் செட்டியார் அவர்கள்,
மிராஸ்தார், கூடலூர்.

7. ,, ப. ச. வேலுச்சாமி அவர்கள்,
ஜவுளி வியாபாரம், கூடலூர்.

8. ,, V. S. சுப்ரமண்யம் அவர்கள், மிராஸ்தார்,
சித்தயங்கோட்டை.

9. ,, பெயர் தெரிவிக்க இஷ்டமில்லாதவர்.

10. ,, ஜான் அந்தோணி ஆஜா அவர்கள்,
பைசன்வாலி, தேவிகுளம், திருவாங்கூர்.

OFFICE ... MADRAS 14 MAR 1931



## போஷகர்கள்.

(தொடர்ச்சி.)

11. ஸ்ரீமான் T. V. K. காமராஜ பாண்டிய நாயக்கர் அவர்கள்,
ஜமீன்தார், முனிசிபல் சேர்மன் & M. L. C.,
போடிநாயக்கனூர்.

12. ,, உ. ம. சே. முகியித்தீன்பிள்ளை ராவுத்தர்
அவர்கள், மானேஜர், T. C. P. A. ஏலச் சரக்கு
விற்பனைக் கம்பெனி, Ltd., கோம்பை.

13. ,, ந. ராமராஜ் அவர்கள், மிராஸ்தார், தேவாரம்.

14. ,, K. பண்டார் அவர்கள், மானேஜர், T. C. P. A.
ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனி, Ltd.,
பிராஞ்ச், போடிநாயக்கனூர்.

15. ,, K. M. அகமது மீரா அவர்கள், மிராஸ்தார்,
உத்தமபாளையம்.

16. ,, ராவ்சாகிப் A. S. அழகணன் செட்டியார்
அவர்கள், மிராஸ்தார், மெம்பர், ராமேஸ்வரம்
தேவஸ்தானக் கமிட்டி & M. L. C.,
போடிநாயக்கனூர்.

17. ,, C. A. A. அப்துல் ரஹீம் ராவுத்தர் அவர்கள்,
மிராஸ்தார் & ஜில்லா போர்டு மெம்பர், கம்பம்.

18. ,, K. முத்துச்சாமி செட்டியார் அவர்கள்,
மிராஸ்தார், லக்ஷ்மிநாயக்கன்பட்டி,
தேவாரம் P. O.

19. ,, ஆ. ஆத. இராமனுதத் தேவர் அவர்கள்,
மிராஸ்தார், ஆதியாகுடி, புளியால் P. O,
தேவகோட்டை.

20. ,, நா. பூ. வேலுத் தேவர் அவர்கள், மிராஸ்தார்.
சிறுகல்லூர், திருவேகம்பத்து P. O.,
தேவகோட்டை.


21. ,, பி. மு. முத்துவேல் உடையார் அவர்கள்,
மிராஸ்தார், அதங்குடி, புளியால் P. O.,
தேவகோட்டை.

22. மெஸ்ஸர்ஸ் V. S. ராமலிங்கம் செட்டியார் & பிரதர்ஸ்,
கோம்பை.

---

போஷக சந்தா—குறைந்தது ரூபாய் 100.

நவீன



படங்களுடன் வெளிவந் துலவும் தேசீய மாஸிகை

## பொருள் அடக்கம்.

மாலை 3. 1931 பிப்ரவரி மணி 2.

தொடர் எண். பக்கம்.

1. மௌலானா முகம்மது அலி—
திரு. என் வேங்கடரமணன் அவர்கள் ... 97
2. பர்மாவில் இந்தியர் நிலை—
திரு. **K. G.** கிருஷ்ணன் அவர்கள், **B. Sc., (Hons.)** 109
3. ஐரோப்பிய நாடுகளில் போர் வேட்கை—
திரு. வி. எ. பெருமாள் அவர்கள் ... 119
4. ஏல விவசாயிகளுக்கோர் எச்சரிக்கை—
திரு. ரா. சுப்ரமண்யம் அவர்கள் ... 131
5. தேசீயக் கல்வி—திரு. **K.** கணேசன் அவர்கள் ... 141
6. பத்திரிகை உலகம் ... ... 146
1. ருஷியாவின் உண்மை நிலை, 2. அமெரிக்கா அடையும் பெருமை, 3. அமெரிக்காவின் செல்வ மதிப்பும் கலாசாலைகளின் செலவும், 4. பாரசீகப் பெண்கள் சங்கம், 5. ஜப்பானில் மருத்துவத் தொழில்.
7. ஆசிரியர் குறிப்புகள் ... ... 153
1. இலங்கை செல்லும் நமது பிரதிநிதி, 2. 'பாரதி'யின் புதிய போஷகர், 3. மகாத்மா—வைசிராய் ராஜிப் பேச்சு, 4. புதிய தபால் விதியும் பத்திரிகைகளின் கஷ்டமும், 5. பண்டிதரைத் தோற்றேம்.

படம்.

மௌலானா முகம்மதலி.



## போஷகர்கள்.

(தொடர்ச்சி.)

11. ஸ்ரீமான் T. V. K. காமராஜ பாண்டிய நாயக்கர் அவர்கள், ஜமீன்தார், முனிசிபல் சேர்மன் & M. L. C., போடிநாயக்கனூர்.

12. ,, உ. ம. சே. முகியித்தீன்பிள்ளை ராவுத்தர் அவர்கள், மானேஜர், T. C. P. A. ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனி, Ltd., கோம்பை.

13. ,, ந. ராமராஜ் அவர்கள், மிராஸ்தார், தேவாரம்.

14. ,, K. பண்டார் அவர்கள், மானேஜர், T. C. P. A. ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனி, Ltd., பிராஞ்ச், போடிநாயக்கனூர்.

15. ,, K. M. அகமது மீரா அவர்கள், மிராஸ்தார், உத்தமபாளையம்.

16. ,, ராவ்சாகிப் A. S. அழகணன் செட்டியார் அவர்கள், மிராஸ்தார், மெம்பர், ராமேஸ்வரம் தேவஸ்தானக் கமிட்டி & M. L. C., போடிநாயக்கனூர்.

17. ,, C. A. A. அப்துல் ரஹீம் ராவுத்தர் அவர்கள், மிராஸ்தார் & ஜில்லா போர்டு மெம்பர், கம்பம்.

18. ,, K. முத்துச்சாமி ரெட்டியார் அவர்கள், மிராஸ்தார், லக்ஷ்மிநாயக்கன்பட்டி, தேவாரம் P. O.

19. ,, ஆ. ஆத. இராமனுதத் தேவர் அவர்கள், மிராஸ்தார், ஆதியாகுடி, புளியால் P. O, தேவகோட்டை.

20. ,, நா. பூ. வேலுத் தேவர் அவர்கள், மிராஸ்தார், சிறுநல்லூர், திருவேகம்பத்து P. O., தேவகோட்டை.


21. ,, பி. மு. முத்துவேல் உடையார் அவர்கள், மிராஸ்தார், அதங்குடி, புளியால் P. O., தேவகோட்டை.

22. மெஸ்ஸர்ஸ் V. S. ராமலிங்கம் செட்டியார் & பிரதர்ஸ், கோம்பை.

---

குறிப்பு:— போஷக சந்தா குறைந்தது ரூபாய் 100.

நவீன



படங்களுடன் வெளிவந் துலவும் தேசீய மாஸிகை

## பொருள் அடக்கம்.

மாலை 3. 1931 பிப்ரவரி மணி 2.


| தொடர் எண். | | பக்கம். |
|---|---|---|
| 1. | மௌலானா முகம்மது அலி—<br>திரு. என் வேங்கடாமணன் அவர்கள் ... | 97 |
| 2. | பர்மாவில் இந்தியர் நிலை—<br>திரு. K. G. கிருஷ்ணன் அவர்கள், B. Sc., (Hons.) | 109 |
| 3. | ஐரோப்பிய நாடுகளில் போர் வேட்கை—<br>திரு. வி. எ. பெருமாள் அவர்கள் ... | 119 |
| 4. | ஏல விவசாயிகளுக்கோர் எச்சரிக்கை—<br>திரு. ரா. சுப்ரமண்யம் அவர்கள் ... | 131 |
| 5. | தேசீயக் கல்வி—திரு. K. கணேசன் அவர்கள் ... | 141 |
| 6. | பத்திரிகை உலகம் ... ...<br>1. ருஷியாவின் உண்மை நிலை, 2. அமெரிக்கா அடையும் பெருமை, 3. அமெரிக்காவின் செல்வ மதிப்பும் கலாசாலைகளின் செலவும், 4. பாரசீகப் பெண்கள் சங்கம், 5. ஜப்பானில் மருத்துவத் தொழில். | 146 |
| 7. | ஆசிரியர் குறிப்புகள் ... ...<br>1. இலங்கை செல்லும் நமது பிரதிநிதி, 2. 'பாரதி'யின் புதிய போஷகர், 3. மகாத்மா—வைசிராய் ராஜிப் பேச்சு, 4. புதிய தபால் விதியும் பத்திரிகைகளின் கஷ்டமும், 5. பண்டிதரைத் தோற்றோம். | 153 |


## படம்.

மௌலானா முகம்மதலி.





மௌலானா முகம்மது அலி.

நவீன

பாரதி

ஓர் தேசிய மாதப் பத்திரிகை.

"எந்தையுந் தாயு மகிழ்ந்து குலாவி யிருந்தது மிந்நாடே—அதன்
முந்தைய ராயிரம் ஆண்டுகள் வாழ்ந்து முடிந்தது மிந்நாடே—அவர்
சிந்தையி லாயிர மெண்ணம் வளர்ந்து சிறந்தது மிந்நாடே—இதை
வந்தனை கூறி மனதி லிருத்தி யென் வாயுற வாழ்த்தேனோ—இதை
வந்தே மாதரம், வந்தே-மாதரம் என்று வணங்கேனோ?"—பாரதி.

ஆசிரியர் : ரா. சுப்ரமண்யம்

Copy Right] உத்தமபாளையம். [Registered.

| மாலை 3 | பிரமோதூத, தை–மாசி 1931-ஹு பிப்ரவரிமீ | மணி 2 |
|---|---|---|

# மௌலானா முகம்மது அலி.

**திரு. என். வேங்கடரமணன் அவர்கள்:**

இந்திய முஸ்லீம் அரசியல் வானத்தில் இரண்டு உதய தாரகைகளென விளங்கி, முஸ்லீம் மக்களைக் கவர்ந்து நின்ற அஞ்ஞான விருளை யோட்டி, இந்து முஸ்லீம்க ளிடையிலிருந்த பிணக்குகளை வீழ்த்தி, முஸ்லீம்களுக்கு மத பக்தியுடன் இந்திய தேச பக்தியையும் ஊட்டி, பொதுவாக இந்தியர்களையும், சிறப்பாக மகம்மதியர்களையும் விழிக்கச் செய்து, நாட்டு நன்மைக்கும், சமய மேன்மைக்கும் அவர்களை உழைக்குமாறு

விரைந்து தூண்டி, பாரத தேசத்தின் முடிசூடா மன்னராம் மகாத்மாஜி யவர்களின் இரு புஜங்களெனத் திகழ்ந்து, தேசப் பணியியற்றி வந்த அலி சகோதரர்களைப் பற்றி இந்தியாவில் அறியாதார் யார்? இவ்விரண்டு சகோதரர்களின் உண்மையான பெயர்கள் முறையே சௌக்கத் அலி, முகம்மது அலி என்பவையாகும். ஆயினும் இவ்விருவரும் இந்தியப் பொது ஜனங்களால் அலி சகோதரர்களென்று ஒன்றாகவே அழைக்கப்பட்டு வந்தார்கள். அதற்கேற்பவே அவர்கள் ஒருவர்க் கொருவர் இணை பிரியா சகோதரர்களாக ஒவ்வொரு காரியத்திலும் முன்னின்று ஒருங்கே யுழைத்து வந்தார்கள். இந்திய முஸ்லீம்கள் இந் நாட்டு விடுதலைக்கு முட்டுக் கட்டைப் போடுபவர்களென்ற ஒரு தீய எண்ணம் எப்படியோ இந்தியரிடையிலும், பிரிட்டிஷாரின் உள்ளத்திலும் இருந்து வந்தது. அதனால் இந்தியர்கள் சிலர் முஸ்லீம்களை வெறுத்து வரவும், பிரிட்டிஷ் அதிகாரிகள் சிலர் இதுவே சமயமெனக் கொண்டு மகம்மதியர்களை இந் நாட்டு விடுதலைக்கு விரோதமாகத் தூண்டிப் பிரித்தாளும் முறையை யனுசரித்து வரவும் முற்படலாயினர். அந்த நிலையில் நம் அலி சகோதரர்கள் இந்தியாவில் தோன்றி, முஸ்லீம்கள் இந் நாட்டு விடுதலைக்கு விரோதிகளல்ல வென்பதை விளக்கிக் காட்டி, மேலும் நாட்டு விடுதலைக்கு சாத்வீகப் போரின் முன்னணியில் நின்று உழைப்பதற்கு முஸ்லீம்கள் பின்னடையார்களென்பதைத் தங்கள் செய்கையால் நிலைநாட்டி, சுதந்திர வீர கர்ஜனையை உலகெங்கும் ஒலிக்கச் செய்தனர். இன்று இந்தியாவில் இந்திய மக்களால் தேச பக்தர்களெனவும், தேசத் தலைவர்களெனவும் போற்றப்படும் ஒரு சில பெரியோர்களில் அலி சகோதரர்களும் சேர்ந்திருப்பதொன்றே அவர்களின் பெருமையை விளக்குவதாகும். அத்தகைய இரு சகோதர முஸ்லீம் வீர கேசரிகளி லொருவராகிய மௌலானா முகம்மது அலி யவர்கள் சமீபத்தில், லண்டன்மா நகரில் திடீரென்று காலஞ் சென்று சென்ற செய்தியைக் கேட்டு இது போழ்து பொதுவாக முஸ்லீம் உலகமும், சிறப்பாக இந்திய நாடும் ஆறாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கிறது. எனவே இச் சமயத்தில் மௌலானா அவர்களின் ஜீவிய சரித்திர வரலாற்றினை எவரும் அறிய விரும்புவர். ஆகவே நமது "நவீன பாரதி" வாசகர்களுக்கு அதைச் சுருக்கித் தருகின்றோம்.



## பிறப்பும் படிப்பும்

மௌலானா முகம்மது அலி யவர்கள் இராம்பூர் என்ற சுதேச சமஸ்தானத்தில் 1878-ம் ஆண்டில் ஒரு பழமையான முஸ்லீம் குலத்திற் பிறந்தார். அவரது தந்தையார் சமயப் பற்றும், ஒழுக்கமும் உடையவராய்ச் சாமானிய ஜீவனம் நடத்தி வந்தார். எனினும் முகம்மது அலி யவர்களின் பாட்டனார் 1857-ம் ஆண்டில் இந்தியாவில் நடைபெற்ற சுதந்திர யுத்த காலத்தில், ஆங்கில அரசாங்கத்தின் சார்பில் நின்று உதவி புரிந்தமைக்காக அரசாங்கத்தார் தீர்வையின்றி அனுபவிக்குமாறு அவருக்குச் சில பூமிகளைப் பரிசு அளித்தனர். அதுவே அவர்களுடைய பிதுரார்ஜிதமாகிய ஆஸ்தியாகும். முகம்மது அலி யவர்களின் தந்தையார் இராம்பூர் சமஸ்தானத்தில் வேலையிலிருந்த நிலையில் காலராவினால் தாக்குண்டு காலமாயினார். எனவே அது முதல் தமது அன்னையாராகிய பீகம் சாகிபு அவர்களின் மேற்பார்வையினாலேயே நமது மௌலானா அவர்கள் சிறு வயதிலிருந்து வளர்ந்து வரலானார். பீகம் சாகிபு அவர்கள் ஒழுக்கமும், மதப் பற்றும், கடவுள் பக்தியும் வாய்ந்த மாது சிரோமணியாதலால், அவரால் வளர்க்கப் பெற்ற இவரது புதல்வரும் மேற் கூறிய நலன்கள் வாய்க்கப் பெற்று, உத்தமராக விளங்கியதில் அதிசயமொன்றில்லை.

முகம்மது அலி யவர்கள் சிறு வயதில் தமது அன்னையாரின் முயற்சியால் அலிகார் கலா சாலையிற் கல்வி கற்க அனுப்பப்பட்டார். அவர் சிறு வயதினின்றே ஒழுக்கமும், உண்மையு முடையவராய்ப் பள்ளியில் கல்வி பயின்று வந்ததோடு, பள்ளி மாணவர்களுடன் கூடி பொது நலத்திற்கான இயக்கங்களில் அப்பொழுதே புகுந்து வேலை செய்து வந்தார். அவ்வாறு அலிகார் கலாசாலையிற் படித்துப் பட்டமும் பெற்று வெளியேறினார். அதன் பின்னர் குடும்ப நிர்வாகத்திற்குத் துணையாகத் தமது அன்னையாருடன் தமது சகோதரரை இருக்கச் செய்து தாம் இங்கிலாந்து சென்று, "ஆக்ஸ் போர்டு" சர்வ கலா சாலையிற் சேர்ந்து படிக்க ஆரம்பித்தார். இங்கிலாந்தில் சுதந்திர மக்களிடையில் வசித்த அந்த நாட்களில் சுதந்திரத்தின் சுவையை அவர் நேரில் உணரலானார். 1898-ம் ஆண்டு முதல் 1902-ம் ஆண்டு வரையில் நான்கு ஆண்டுகள் பாரிஸ்டர் பரீக்ஷைக்

குப் படித்ததோடு, இந்தியன் சிவில் சர்வீஸ் என்ற பரீக்ஷையிலும் ஜெயம் பெற முயற்சித்தார். ஆயினும் அவர் சதா பொது நலத்திற்கான விஷயங்களிலும், அது சம்பந்தமான படிப்புகளிலும் தமது பெரும் பொழுதைச் செலவிட்டு வந்தமையால் அவர் ஐ. ஸி. எஸ். பரீக்ஷையில் தவறி விட்டார். அதுவும் நந்தேச நலத்திற் கெனவே முடிந்தது. ஏனெனில், அப் பரீக்ஷையிற் றேறி இந்தியாவுக்கு வந்து பொறுப்புள்ள ஒருயர்தர உத்தியோகத்தில் அமர்ந்திருப்பாராயின், அவரது பொது ஜன சேவை இவ்வளவு தூரம் நாட்டின் நலத்திற்குப் பயன்பட் டிருக்கு மென்று யாரே எதிர் பார்க்க முடியும்? எனவே முகம்மது அலி யவர்கள் தமது இங்கிலாந்து படிப்பினை ஒருவாறு முடித்துக் கொண்டு தாயகம் வந்து சேர்ந்தார். இங்கு வந்தவுடன் பரோடா ராஜ்யத்தில் அபினி இலாகாவில் ஓர் உத்தியோகத்தி லமர்ந்தார். ஆயினும் அவ் வுத்தியோகம் அவரது கருத்துக்கு இசைந்ததாக விராமையினால் விரைவில் அதை விட்டு வெளியேறினார்.

## பத்திரிகாதிபத்யமும் பாரோர் புகழ்ச்சியும்

முகம்மது அலி யவர்களுக்கு ஆரம்பத்தி னின்றும் பத்திரிகைத் தொழிலில் ஆர்வம் அதிகம். அதற்கேற்பச் சிறந்த கட்டுரைகள் எழுதுவதில் அவர் வல்லவராக விருந்தார். அப்பொழுது "ஸ்பெக்டேட்டர்," "ஹிந்துஸ்தான் ரிவ்யூ," "டைம்ஸ் ஆப் இந்தியா", முதலிய பிரபலமான பல பத்திரிகைகளில் அவர் வியாசங்கள் பலவற்றை எழுதிவரலானார். தேச நலத்திற் கேற்ற பொது விஷயங்களைப் பற்றி அவர் எழுதிய கருத்துக்களின் உயர்வை முன்னிட்டுப் பொது மக்கள் பலரும் அவரை அதிகமாக நேசிக்க ஆரம்பித்தனர். அச் சமயத்தில் இந்தியாவில் இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையீடின்றி விரோதங்களும், அப்படியே இந் நாட்டை ஆளுவோராகிய அதிகார வர்க்கத்தாருக்கும் ஆளப்படுபவராகிய இந்தியப் பொது மக்களுக்கும் இடையில் மனக் கசப்பும் வளர்ந்து வந்தன. அந் நிலையைச் சீர்திருத்தக் கருதி "காம்ரேட்" என்ற பெயரால் ஆங்கிலத்தில் வாரப் பத்திரிகை யொன்றைத் தாமே நடத்த ஆரம்பித்தார். அவர் அப் பத்திரிகையில் உண்மையுடனும், உறுதியுடனும், வன்மையாகக் குற்றங்களைக் கண்டித்து, இந்து முஸ்லீம் சமூகங்களிடையில்



ஒற்றுமையை நாட்டவும், அதிகாரிகளுக்கும் பொது மக்களுக்கு மிடையில் பரஸ்பர நம்பிக்கைகளை யுண்டாக்கவும் வெகு தீவிரமாக எழுதி வந்தார். அதனால் அவரது பத்திரிகை நாட்டில் யாவராலும் ஒருங்கே ஆதரிக்கப் பெற்றது. பொது ஜனங்களே யன்றி அதிகாரிகளும் அவரிடத்து அபிமானங் கொண்டனர்.

அதுகாலை நாட்டில் முஸ்லீம் சமூகத்தார் சுய உணர்ச்சி யின்றி, நாட்டின் பொது நல நிகழ்ச்சிகளில் அசிரத்தைக் காட்டி வந்தனர். அதைக் கவனித்த முகம்மது அலி யவர்கள் 1906-ம் ஆண்டில் முஸ்லீம்களின் நன்மைக்கென அகில இந்திய முஸ்லீம் லீக் என்ற மகா சபையை ஸ்தாபித்து இந்திய முஸ்லீம்களுக்கு உற்சாக மளிக்க முற்பட்டார். அவரது அரிய உழைப்பாலேயே முஸ்லீம் லீக் இந்தியாவில் இவ்வளவு தூரம் பிரபல மடைந்து முஸ்லீம் சமூகத்தாரி னுடையவும், இந்தியாவி னுடையவும் பொது நன்மைக்கு ஓர் ஊன்றுகோலாக இருந்து வருகிறது. முஸ்லீம்களுக்கு இராஜ பக்தியையும், தேச பக்தியையும் ஒருங்கே ஊட்டிய அவரது முயற்சி பாராட்டற் பாலதாகும் அவரது முயற்சியாலேயே அம் முஸ்லீம் லீக் மகா சபையானது 1913-ம் ஆண்டில் "ஏனைய தொகுதிகள் பலவற்றோடு குடியரசு பெறுவதே தனது நோக்கம்" என்று தீர்மானிக்கலாயிற்று. முகம்மது அலி யவர்கள் சிறுவயதிற் படித்த அலிகார் கலாசாலை அதுகாறும் சாதாரண கலாசாலையாகவே இருந்து வந்ததைக் கண்டு அதை ஒரு சர்வ கலாசாலை யாக்கவேண்டு மென்று எண்ணி அதற்கான பிரயத்தனங்களி லீடுபட்டார். கனம் மிக்க ஆகாகான் அவர்களோடு கூடி அக் காரியத்தைச் சாதிக்கத் தலைப்பட்டார். தமது கருத்தின் வெற்றிக்காக "ஹாம்ராட்" என்ற பெயரால் உருதுவிலும் ஒரு பத்திரிகையை நடத்தத் தொடங்கினார். அதுகாலை "கேசரி" முதலிய பத்திரிகைகளைப் போலவே இதுவும் நாட்டில் பிரபலமடைய லாயிற்று. மௌலானா அவர்கள் முயற்சியில் தளர்வுறாது பொது மக்களிடையில் பணம் வசூலித்து, விரைவில் அலிகார் கலா சாலையைச் சர்வ கலாசாலை யாக்கி முடித்தார். இந்திய நாட்டில் கற்பிக்கப்படுங் கல்வி வெறும் ஏட்டுக் கல்வியாகவும், அடிமைக் கல்வியாகவு மிருப்பதைக் கண்ட முகம்மதலியார் அதையும் சீர்திருத்தக் கருதினார். பொது விஷயங்

களைப் பற்றி அவர் நிகழ்த்திய சொற்பொழிவுகள் பல. அவர் ஆங்கிலம் பேசும் அரிய திறனை ஆங்கிலேயர் பலரும் அதிசயமாகப் புகழுவாராம். இவ்வாறு அவர் பொது ஜன சேவை செய்து வருகையில் கான்பூரில் நடந்த ஒரு சம்பவம் அவரது கருத்தை அதிகாரிகளின் மீது செலுத்தச் செய்தது.

## மதத்திற் குழைத்தலும் மாபெருங் கீர்த்தியும்.

கான்பூர் நகரில் முஸ்லீம்களுக்குச் சொந்தமான ஒரு பள்ளிவாசலின் ஒரு பாகத்தில் அவ்வூர் முனிசிபாலிடியார் பாதை போட ஆரம்பித்தனர். அஃது தங்கள் மதத்தைப் பாதிக்கக் கூடியதென முஸ்லீம்கள் அபிப்பிராயப்பட்டு, அவ்விடிக்கப்பட்ட பாகத்தில் மீண்டும் பழமைபோல் கட்டிடம் எழுப்ப முயன்றனர். அதில் முஸ்லீம்களுக்கு விரோதமாகப் போலீசார் பிரவேசித்துத் துப்பாக்கிப் பிரயோகமும் செய்தனர். அச்சம்பவத்தில் நமது மௌலானா அவர்களும் முஸ்லீம்களின் சார்பில் நின்று வேலை செய்தவரானதால், உடனே அது பற்றி இங்கிலாந்திற்கும் இந்திய ராஜப் பிரதிநிதியாரிடத்திற்கும் தூது போக்கினார். அதன் மேல் இராஜப் பிரதிநிதியாரே அவ்விடத்தை நேரிற் பார்வையிட்டு முஸ்லீம்களுக்கு நியாயம் வழங்கினார்.

1912-ம் ஆண்டில் பால்கன் நாட்டுக்கும் துருக்கி தேசத்திற்கும் யுத்தம் நடைபெற்றது. அப்போரில் துருக்கி நாட்டு மக்களில் பலபேர் அடியுண்டு வீழ்வதைக் கேள்வியுற்று நமது மௌலானா அவர்கள் இந்தியாவினின்றும் டாக்டர் அன்சாரி போன்ற முஸ்லீம் தலைவர்களின் துணையால் ஒரு வைத்தியப் படையைத் தயாரித்துக் கொண்டு சென்று உதவி புரிந்தார். அவ்வாறு அவர் முஸ்லீம் உலகத்திற்குச் செய்த ஊழியங்கள் பல. அதனால் முஸ்லீம் சமூகத்தாரின் நன்மதிப்பைப் பெற்றார். அவர் வழி பற்றி நடக்க முஸ்லீம் வாலிபர்கள் பலர் முன்வந்தனர்.

1914-ம் ஆண்டில் ஐரோப்பிய மகா யுத்தம் ஆரம்பமாயிற்று. அதில் துருக்கி தேசத்தார் ஜர்மானியரோடு சேர்ந்து பிரிட்டிஷாருடன் போர் புரியத் தலைப்பட்டனர். அது காலை உலகில் இந்தியா, மொராக்கோ, ஆசியா மைனர் முதலிய விடங்களிலிருந்த முகம்மதிய



ரிடையில் பெருங் கலவர முண்டாயிற்று. உலகிலுள்ள முஸ்லிம்களனைவரும் துருக்கி யரசரையே தமது சமயத் தலைவராக—கலீபாவாகக் கருதினார்களாகையால், அப் போரின் காரணமாகத் துருக்கி யரசருக்கு ஏதேனும் ஊறு நேருமாயின் தங்கள் முஸ்லிம் சமயமே அடியோடு அழிந்து படுமென அஞ்சினார்கள். இந்த நிலையில் இந்திய முஸ்லிம்கள் ‘இருதலைக் கொள்ளி எறும்பு’போல் இரு புறமும் சங்கடத்திற் காளானார்கள். ஏனெனில் தங்கள் மதத்தின் காரணமாகத் துருக்கி அரசரை நேசிக்க வேண்டுதுவம், தங்கள் தேச ராஜாங்கத்தின் காரணமாகப் பிரிட்டிஷ் அரசரை நேசிக்க வேண்டுவதும் இன்றியமையாதனவா யிருந்தன. தாங்கள் அவசியமாகப் பக்தி காட்ட வேண்டிய இரு அரசர்களும் அப்போது ஒருவர்க்கொருவர் எதிர்த்துப் போர் புரிந்தார்களாகையால், இந்திய முஸ்லீம்கள் தாம் எப் பக்கத்தில் நிற்பதென்பதைத் தீர்மானிக்க முடியாமல் மயங்கினர். தங்கள் உயிரை விடப் பெரிதாகக் கருதும் தங்கள் மதத் தலைவராகிய கலீபாவுக்கு யாதொரு ஆபத்தும் ஏற்படக் கூடாதெனக் கருதினர். ஆயினும் இந்திய முஸ்லீம்கள் நாட்டுப் பற்றின் காரணமாக மகா யுத்தத்தில் ஆங்கிலேயரின் பக்கமே சேர்ந்து போர் புரிந்தனர்; எனினும் கலீபாவுக்கு இன்னல் நேராத வகையில் ஆங்கிலேயர்கள் நடந்துகொள்ள வேண்டுமென்று கோர முற்பட்டனர். அச் சமயத்தில் நமது மௌலானா அவர்கள் முஸ்லீம்களின் கருத்தைத் தமது பத்திரிகையின் மூலமாக வெளியிடலானார். அவருக்கிருந்த மத பக்தியும் அவ்வாறே செய்யத் தூண்டியது. அதுவே கிலாபத் இயக்கமென இந்தியாவெங்கும் முழங்கலாயிற்று. அச் சமயத்தில் மௌலானா முகம்மது அலி யவர்களும், அவரது சகோதரரும் பேசின பேச்சுக்களும் எழுதின எழுத்துக்களும் துரைத்தனத்தாருக்கு ஐயத்தை எழுப்பின.

அதனால் அரசாங்கத்தார் அலி சகோதரர்களின் மீது இராஜத் துவேஷக் குற்றத்தைச் சுமத்தி அவர்களுடைய பத்திரிகைகளையும், சொத்துக்களையும் பறிமுதல் செய்ததோடு, அவ்விருவரையும் ‘சின்வாரா’ என்றவிடத்தில் காவற் படுத்தினர். அவ் வோய்வு காலத்தில் சகோதரரிருவரும் தங்கள் மத சம்பந்தமான நூல்களைப் படித்துக்

கொண்டதோடு, தேசீய கீதங்கள் பலவும் எழுதினார்கள். அப்பொழுது நாடெங்கும் அலி சகோதரர்கள் விடுதலை செய்யப்பட வேண்டுமென்று கிளர்ச்சி எழும்பியது. அதற்கேற்ப இந் நாட்டில் ‘ஹோம் ரூல்’ கிளர்ச்சிக்குக் காரணரா யிருந்த அனிபெஸண்டு, வாடியா, அருண்டேல் என்ற மூவரையும் அரசாங்கத்தார் தென் இந்தியாவில் பந்தோபஸ்தில் வைத்தனர். உடனே தேசமெங்கும் கூக்குரல் கிளம்பியது. இந்துக்கள் முஸ்லீம்கள் அனைவரும் அரசாங்கத்தின் செய்கையைப் பலமாகக் கண்டித்தனர். அச் சமயத்தில் தாதாபாய், ஜின்னா முதலியவர்கள் ராஜாங்க சபைகளில் அரசாங்கத்தாரால் காவற்படுத்தி வைக்கப்பட்ட அலி சகோதரர்கள் முதலியோர் உடனே விடுவிக்கப்பட வேண்டுமென்று தீர்மானங்கள் கொண்டு வந்தனர். எனினும் அவற்றால் ஒரு பயனும் விளையவில்லை. ஆயினும் நாட்டில் தோன்றிய தீவிரக் கிளர்ச்சியைக் கண்ணுற்ற அரசாங்கத்தார் காவலிலிருந்த அலி சகோதரர்களை “ஐரோப்பிய யுத்தம் முடிவடையும் வரையில் நாட்டில் யாதொரு கிளர்ச்சி சம்பந்தமான முயற்சிகளில் தலையிடுவதில்லை” யென உறுதி மொழி எழுதிக் கொடுக்குமாறு கேட்டனர். அதற்கு அலி சகோதரர்கள் உடன்படவில்லை. அதனால் அரசாங்கத்தினர் கவலைக் குள்ளாயினர். அதன் பின் 1919-ம் ஆண்டு டிசம்பரில் மாட்சிமை யுற்ற சக்கிரவர்த்தியாரது பெருமை தங்கிய விளம்பரத்தால் அலி சகோதரர்கள் விடுதலை யடைந்தனர்.

## காங்கிரஸ் பிரவேசமும் காந்தியடிகளின் நட்பும்

அவ்வாறு விடுதலை யடைந்தவுடன், அலி சகோதரர்கள் அப்பொழுது அமிர்தசரசில் நடைபெற்றுக் கொண்டிருந்த அகில இந்திய தேசீய மகா சபைக்கு நேரே விஜயம் செய்தனர். அலி சகோதரர்களின் விடுதலையே நாட்டின் விடுதலை யெனக் கருதி, அலி சகோதரர்களுக்கு அக் காங்கிரஸ் மகா சபை குதூகலத்தோடு வரவேற்பளித்து அவர்களைக் கௌரவித்தது. முகம்மது அலி யவர்கள் அவ்வாறு விடுதலை யடைந்தா ராயினும் பறிமுதல் செய்யப்பட்ட சொத்துக்கள் மீண்டும் கிடைக்கப் பெறாமையால் பண முடைக் குள்ளாகி மிகவும் வருந்தினார். அதைக் கண்ணுற்ற இந்துக்களும் முஸ்லீம்களும் ஒன்று கூடிப் பொது நிதி யொன்றைச் சேகரித்து அவருக்குக் கொடுத் துதவினார்கள். ஆயினும் மௌலானா அவர்கள் அப் பொருளைத் தம் சொந்தச் செலவுகளுக்கு உபயோகிக்காமல் பொது இயக்கங்களுக்கே பயன்படுத்தி வந்தார். அதன்மேல், யுத்த காலத்தில் பிரிட்டிஷார் இந்திய முஸ்லீம்களுக்குத் துருக்கியின் விஷயமாய்க் கொடுத்திருந்த வாக்குறுதியை நிறைவேற்றாமல் அசட்டை செய்ததைக் கவனித்தார். அதனால் கிலாபத் இயக்கத்தை மீண்டும் தொடங்கிப் பல துறைகளிலும் பிரச்சாரம் செய்து வந்தார். அதுபற்றி இந்திய ராஜப்பிரதிநிதி யாரிடமும், இங்கிலாந்திற்கும் தூதாகச் சென்று முஸ்லீம்களின் கோரிக்கைகளை எடுத்துக் கூறியதோடு, இத்தலி, பிரான்சு முதலிய ஐரோப்பிய நேச வல்லரசுகளின் நாடுகளுக்குஞ் சென்று கிலாபத்தின் உண்மைகளைப் பற்றி உபந்நியாசங்கள் புரிந்தார். அத்தகைய முயற்சிகளில் இனி பயனில்லை யெனக் கருதி 1920-ம் ஆண்டில் இந்துக்களி னுடைய முழு உதவியையும் பெற்று இந்தியாவிலேயே பெருங் கிளர்ச்சி செய்ய வேண்டுமெனக் கருதினார்.

அதே காலத்தில் மகாத்மா காந்தி யடிகளார் காங்கிரசில் தலைப் பூண்டு தேசீய முயற்சிகளில் இந்துக்களோடு முஸ்லீம்களையும் ஒருங்கு சேர்த்து உழைக்க விரும்பினார். முஸ்லீம்களின் கிலாபத் குறைகளையும் காங்கிரசின் மூலமாகவே போக்க முடியுமெனக் கூறினார், எனவே 1921-ம் ஆண்டு ஆகஸ்டுமீ 1 தேதி முஸ்லீம்களின் சார்பாக அலி சகோதரர்களின் உறுதி மொழியைப் பெற்று, கிலாபத் இயக்கத்தையும், காங்கிரசையும் ஒன்று படுத்தித் தமது மேற் பார்வையின் கீழ் ஒத்துழையாமை இயக்கத்தை நடத்த ஆரம்பித்தார். காந்தியடிகளாருடன் பிறந்த அஹிம்ஸா தர்மமென்ற கவசத்தைப் பூண்டு, காங்கிரசின் பெயரால் இந்திய ரனைவரும் அதிகார வர்க்கத்தினரோடு ஒத்துழையாப் போர் புரியத் தொடங்கினர். தேசமெங்கும் கோர்டு பகிஷ்காரம், பள்ளி பகிஷ்காரம், சட்ட சபை பகிஷ்காரம், வரி கொடாமை முதலிய இயக்கங்கள் எழும்பின. அவை யனைத்திற்கும் நமது முகம்மது அலி யவர்கள் தமது சகோதரருடன் மகாத்மாஜிக்கு

இரு புஜங்களாக நின்று நாடெங்கும் சுற்றிச் செய்த பிரசாரமே காரணமாகும். அச் சமயத்தில் நாகப்பூரில் கூடிய தேசீய மகா சபை செய்த தீர்மானத்தின்படி தேசீய இயக்கத்தின் வெற்றிக்காக ஒரு கோடி ரூபாய் வசூல் செய்யவும், காங்கிரஸ் பிரசாரம் செய்யவும் காந்தி யடிகளாருடன் கூடி முகம்மது அலி யவர்கள் செய்த ஊழியம் என்றும் மறக்கற் பால தன்று. அவர் "நான் கிலாபத்துக்காகத் தியாகம் செய்து உழைத்துவந்த போதிலும், ஆப்கானியரோ, துருக்கியரோ அன்றி வேறெம் மகம்மதியரோ இந்தியாவின் மீது படையெடுத்து வருவார்களாயின் அவர்களை எதிர்க்க முன் னணியில் நின்று போர் புரிவேன்" என்று கூறினார். அதனால் அவரது நாட்டுப் பற்று சமயப் பற்றை விட எவ்வளவு தூரம் முதன்மை யடைந்து விளங்குகிற தென்பது நன்கு புலனாகும். அவ்வாறு ஒத்துழையா இயக்கம் நாட்டில் ஓங்கி நிற்கையில் அரசாங்கத்தினர் மீண்டும் ஒரு முறை மௌலானா அவர்களை, அவர் மகாத்மாவுடன் தென் இந்தியாவுக்கு வந்துகொண் டிருந்த நிலையில் 1921-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் விசாகப் பட்டணத்தில் கைதி செய்து கொண்டுபோய், கராச்சியில் விசாரணை புரிந்து அவருக்கு இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தனர். அதே சமயத்தில் அவரது சகோதரராகிய சௌக்கத்தலி அவர்களையும் பம்பாயில் கைதி செய்து, கராச்சி விசாரணையிலேயே அவருக்கும் இரண்டு ஆண்டு சிறை வாசம் விதித்தனர். அவ்வாறு விதிக்கப்பட்ட தண்டனையை அலி சகோதரர்க ளிருவரும் சந்தோஷத்துடன் ஏற்றுச் சிறைக் கோட்டம் புகுந்தனர். அப்பொழுதே மகாத்மாவும் ஆறாண்டு சிறை வாசத்தை மேற்கொண்டார்.

## காராக்கிரக விடுதலையும் காங்கிரஸ் தலைமையும்

மௌலானா முகம்மதலி யவர்கள் 1923-ம் ஆண்டில் சிறையினின்றும் வெளி வந்தார். அதற்குள் காங்கிரஸ் கொள்கைகளில் சில மாறுதல்கள் ஏற்பட் டிருந்தன. சுயராஜ்யக் கட்சியார், காங்கிரஸ் வாதிகள் சட்ட சபைக்குச் சென்று அரசாங்கத்தின் செயல்களுக்கு முட்டுக்கட்டைப் போடவேண்டு மெனக் கூறினர். காங்கிரசில் நாளடைவில் இக் கட்சி பலப்பட்டு வந்துகொண் டிருந்தது. அப்பொழுது மௌலானா அவர்கள் அக் கட்சியை யாதரித்துப் பேசினார்.



அவ்வாண்டு காக்கினாடாவில் நடைபெற்ற காங்கிரஸ் மகா நாட்டுக்கு நமது மௌலானா முகம்மதலி அவர்களையே தலைவராகப் பொது மக்கள் தேர்ந்தெடுத்தனர். அதுகாலை மௌலானா அவர்கள் இந்து முஸ்லீம் ஒற்றுமையைப் பற்றியும், காங்கிரசில் மாறுதல் வேண்டாதாருக்கும், மாறுதல் வேண்டுபவருக்கும் சமாதான மேற்படுத்துவதைப் பற்றியும், நாட்டு முன்னேற்றத்திற்கான பிற முயற்சிகளைப் பற்றியும் பல திறப்பட்ட கொள்கை யுடையவ ரனைவரும் மெச்சி யொப்புக்கொள்ளும் வண்ணம் தமது தலைமைப் பேருரையை நிகழ்த்திக் காங்கிரசை வெகு சிறப்புற நடத்தினார். பின்னர் சென்ற இரண்டு வருடங்களுக்கு முன் வரையில் காந்தி யடிகளாரின் துணைவராகவே யுழைத்து வந்தார்.

அதன் பிறகு தமது இஸ்லாம் பக்தியின் காரணமாகச் சிற்சில அபிப்ராய பேதங்களுக் குள்ளாகிக் காங்கிரசையும், காந்தி யடிகளாரையும் விட்டு விலகிச் சென்றார். ஆயினும் தேச ஊழியத்தை அவர் மறந்தவரல்லர். அவர் தமது கருத்திற் பட்டதை பிறரது தாக்ஷண்யத்தையோ, தயவையோ எதிர்பாராமல் உள்ளவாறு வெளியிடும் வழக்க முள்ளவர். ஆகவே நிலை யில்லாது காங்கிரஸ் கொள்கைகள் அடிக்கடி மாறிக் கொண்டு வர முற்பட, இவ் விரண்டு ஆண்டுகளாக அரசியற் கிளர்ச்சியி னின்று அவர் விலகி நின்றதில் அதிசய மிராது. மேலும் முஸ்லீம் சமூக நன்மையினிடத்து அவரது கவனம் சற்று ஆழ்ந்து பதிந்தது.

## இங்கிலாந்து செல்லுதலும் இன்னுயிர் நீத்தலும்

இந்த நிலையில் 1930-ம் வருடம் டிசம்பர் மாதத்தில் லண்டனில் நடை பெற்ற சர்வ கட்சி மகா நாட்டுக்கு அதிகாரிகள் மௌலானா முகம்மதலி அவர்களையும் அழைத்தனர். சின்னாளாக அவரது தேகமும் அசௌக்கிய முற்றிருந்தது. எனினும் அவர் வட்ட மேஜை மகா நாட்டுக்குச் செல்லவே தீர்மானித்தார். அவரோடு அவரது சகோதரரும், குடும்பத்தாரும் சென்றனர். அவ்வாறு அவர் இங்கிலாந்துக்குச் சென்றது அதிகாரிகளின் தயவுக்காக வன்று; இந்தியாவின் கோரிக்கையை ஒளி மறை வின்றி வெளிப்படையாக அம் மகா நாட்டில் எடுத்துக் கூறுவதற்கேயாம். அவ்வாறே அவர் சர்வ கட்சி மகா நாட்டின் கூட்டத்தில் தமது சொற் பெருக்கினை அஞ்சா நெஞ்

சத்தோடு வீர முழக்கமாகச் செய்தார். அவரைப் போல் அவ்வளவு துணிவுடனும், பிரிட்டிஷாருக்கு இறுதி யெச்சரிக்கையாகவும் உண்மையாகப் பேசியவர் அக் கூட்டத்தில் வேறு யார் என்பதைச் சிந்தியுங்கள். மௌலானா தமது பிரசங்கத்தில் "இந்தியாவுக்குக் குடியேற்ற நாட்டு உரிமையை உடனே கொடுக்கா விட்டால் இங்கிலாந்து இந்தியாவை இழந்துவிட வேண்டி வரு" மெனவும், "இச் சர்வ கட்சிக் கூட்டத்தின் பயனாக இந்தியாவுக்கு விடுதலை கிடைக்காமற் போகுமானால் நான் இனி அடிமை இந்தியாவுக்கு உயிருடன் திரும்பிச் செல்லுவதில்லை" யெனவும் அறுதி யிட்டுக் கூறினர். அதன் பின்னர் வட்ட மேஜை மகா நாட்டில் எழுந்த இந்து முஸ்லீம் விவாதங்களில் சமாதான முண்டாக்கப் பெரிதும் முயன்றுகொண் டிருந்தார். அவ்வாறு அவர் தமது உடல் நலத்தைச் சிறிதுங் கவனியாமல் நாட்டின் நலத்தையே பெரிதெனக் கருதி ஓய்வின்றிச் சிந்தித்தும், பேசியும், உழைத்தும் வந்தமையால் அவரது உடல் அதிக அசௌக்கிய மடையலாயிற்று. சின்னாள் படுக்கையிலேயே யிருந்தார். மரண மடைவதற்கு முந்திய நாளிலும் இந்து முஸ்லீம் ஒற்றுமையைக் கோரி எழுதப் பெற்ற விஞ்ஞாபனத்தை ஆராய்ந்துகொண் டிருந்தாராம். அவ்வாறு அவர் மேற்கொண்ட மனோ முயற்சியின் பலவீனத்தினாலேயே இரத்த நாளங்களுக்கு ஏதேனும் ஊறு நேர்ந்து உயிரைக் கொள்ளைகொண் டிருக்கலா மென்றும் பலர் ஊகிக்கின்றனர். அஃதெவ்வாறாயினும், நமது மகம்மதிய வீரச் சிங்கம்—பாரத தேவியின் உண்மைத் தொண்டர்—அஞ்சா நெஞ்சம் படைத்த செஞ்சொற் புலவர்—மௌலானா முகம்மதலி யவர்கள் தமது 52-வது வயதில், லண்டன்மா நகரில், தமக்கு அருகாமையில் அருமை மனைவியும், இணை பிரியாச் சோதரர் சௌக்கத்தலியும், அன்புக் கிலக்கான அருங் குமரியும், ஆர்வம் மிகுந்த இரு மருகன் மாரும் சூழ்ந்திருக்க 1931-ம் ஆண்டு ஜனவரி மாதம் 4-ம் தேதி ஞாயிற்றுக் கிழமை காலை 9½ மணிக்கு இவ்வுலக வாழ்வை நீத்தார். அவரது உடலை ஜெருசலத்திற்குக் கொண்டு போய் அங்குள்ள பிரசித்தமான உமர் மசூதியில் நல்லடக்கம் செய்வதற்கான முயற்சிகள் நடை பெற்று, நிறைவேறியது சிறப்பாக இந்திய முஸ்லீம்களுக்கும் பொதுவாக இந்திய ஜனவருக்கும் கண்ணியமாகும். இந்தியாவுக் கெனவே பிறந்து, இந்தியாவுக் கெனவே வாழ்ந்து, இந்தியாவுக் கெனவே உயிர் நீத்த மௌலானா அவர்களின் ஆன்மா சாந்தி யடையுமாறு பாரதத் தேவி திருவருள் புரிவாராக.

14 MAR 1931

# பர்மாவில் இந்தியர் நிலை.

திரு. K. G. கிருஷ்ணன் அவர்கள், B. Sc., (Hons.)

## இந்தியர் வருகை

பண்டைக் காலந் தொட்டு ஐரோப்பியர் இந்தியாவுக்கு வரும் வரை இப் பூவுலகத்தில் கல்விப் பொருளிலும், செல்வப் பொருளிலும் யாதொரு குறைவு மின்றி பல தேசத்தார்களைக் "கதி தருவே னென்று கைகாட்டி யழைப்பது" போல செழிப்புற் றோங்கி ஆகாயம் அளாவ வளர்ந்த மரங்கள் காற்றில் அங்குமிங்கும் அசைந்து கொண்டும், "கதி பெற" வழிகாட்டியாக ஊரெல்லாம் பொன்மயமாய் ஒளி வீசிக்கொண்டு மிருந்ததாம் நம் இந்தியா தேசம். அக் காலத்தில் அயல் நாடுகளுக்கு அனுப்பிய சாமான்களை எத்தனையோ வகை யென்று கூறலாம். இங்கு அநேக வீரம் பொருந்திய அரசர்கள் ஆண்டு வந்தது போலவே, இவர்கள் காலத்தில் அநேகர் சமுத்திரங் கடந்து அநேக விடங்களுக்குச் சென்று வர்த்தகஞ் செய்து அவ்விடங்களை நாகரீகமடையச் செய்து வந்தனர். பர்மா தேசம் இந்தியாவோடு பொருந்தி யிருந்ததால் இந்நாட்டிற்கு அநேக இந்தியர்கள் *அசாம் வழியாக மேல் பர்மாவிற்கும், மதராஸிலிருந்து கீழ் பர்மாவுக்கும் ஆதியில் வந்ததாகத் தெரிகிறது. இந்தியாவில் தெலுங்கானா என்ற பாகத்திலிருந்து பர்மாவுக்கு வந்தவர்களைக் கொண்டு பர்மாவின் ஓர் வகுப்பினர் "தலேய்ங்" என்றழைக்கப் படுகின்றனர். இப்படி வந்தவர்கள் தங்கள் நாகரிகத்தைப் பர்மாவுக்கு மனமுவந் தளித்தனர். வட இந்தியாவில் "கபிலவஸ்து" என்ற இடத்தில் பிறந்த இராஜ குமாரர் கௌதம புத்தர் என்பவரால் பர்மாவுக்கு மதமும் அளிக்கப்பட்டது. கி. மு. 261-ல் அசோகன் கலிங்க தேசத்தைக்

* K. G. கிருஷ்ணன், "பர்மா தேசம்" 'பாரதி' மாலை 1, மணி 11, 1929; PP. 767-8.

கைப்பற்றி தென்னிந்தியாவில் புத்தர் மதத்தைப் பரவச் செய்ததின் பின், பர்மாவிலிருந்த இந்துக்களின் மதமும் சிறிது புத்த மதத்தைத் தழுவி வந்திருந்தது. அசோகன் காலத்திலேயே தாட்டினில் மாத்திரம் சுமார் 60,000 பர்மிய ஜாதியர் புத்த மதத்தைத் தழுவினர். இந்தியாவைக் கொண்டு பர்மாவின் கடற்கரைப் பாகங்கள் நாகரிகத்தில் தீவிரமாய் முன்னேற்ற மடைந்தன. சோழ இராஜ்ஜியத்திலிருந்து துணிகளும், வட இந்தியாவிலிருந்து புத்தர் உருவங்களும் பர்மாவுக்கு அடிக்கடி அனுப்பட்டு வந்தன.

பிறகு (1610-ல்) பிரிட்டிஷார் பர்மாவுக்குள் நுழைந்தனர். *அவர்கள் நடத்திய மூன்று பெருஞ் சண்டைகளுக்கும் ஏராளமான இராணுவங்களையும் செலவுக்குச் சுமார் 10 கோடி ரூபாயையும் கொடுத் துதவியது இந்தியா தேசம். பர்மா, பிரிட்டிஷார் சுவாதீனத்திற் குட்பட்ட பிறகு தற்காலத்தில் அது வகிக்கும் நிலைமைக்கு வேண்டிய சீர்திருத்தத்திற்குச் சுமார் 60 கோடி ரூபாய் தாராளமாய்ச் செலவிட் டிருப்பதும் இந்தியா தேசமே! மேலும் பர்மாவின் முக்கிய பட்டணங்களாகிய இரங்கூன், மாந்தலே, மோல்மேன், பாசீன் முதலியவைகள் பெரிய வியாபார ஸ்தலங்களாக விளங்க வைத்தவர்களும் இந்திய வியாபாரிகளே! உள் நாடுகளில் பயிர்த்தொழில் செய்வதற்கு வேண்டிய வசதிகளையும், பொருளுதவிகளையும் தன்னலங் கருதாது பெருந் தன்மையுடன் கொடுத்து பர்மாவை ஒரு பெரிய நெல் விளையுந் தேச மாக்கியவர்களும் இந்தியர்களே! பர்மாவில் மிகவும் கேவலமான வேலையையும் அதிக சொற்பக் கூலிக்கு மனமுவந்து சுறுசுறுப்பாய்ச் செய்து பர்மாவுக்கு அவ் வழியில் அதிகச் செலவு வராதபடி தொண்டு செய்து வந்ததும் இந்தியர்களே! பர்மா தேசம் சீர் பெற்று தற்கால நிலைமைக்கு வந்தது பெரும்பாலும் இந்தியர்களையே தழுவி நிற்கிறதென்று சற்று உருக்கமாக உற்று நோக்குவோர்களுக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கா நிற்கும். 1921-ம் வருடக் கணக்குப்படி பர்மாவின் மொத்தத் தொகை 1,32,12,192ல் இந்தியர்கள் தொகை 9,48,768.

* K. G. கிருஷ்ணன், "பர்மா பிரிவினை"—'பாரதி,' மாலை 1 மணி 6-7, PP. 477.



## இந்தியரின் அக்கால நிலை.

இந்தியர்கள் பர்மாவுக்கு அதிகமாய்க் குடியேறினவுடன் பர்மியர்கள் அவர்களைத் தங்கள் நெருங்கிய வீட்டார்கள், மேலும் தங்களுக்கு மதம் தந்த தேசத்தினரென்னும் பேரபிமானத்துடன் வரவேற்று உபசரித்தனர். அக்காலத்தில் இந்தியர் அதிகமாக உள் நாடுகளில் பிரவேசிக்கவில்லை. முக்கியமாய்க் கடற்கரை யோரமாயுள்ள முக்கிய பட்டணங்களில் குடியேறி தாங்கள் கொண்டு வந்த திரவியத்தால் வியாபாரங்களை விருத்தி செய்ய ஆரம்பித்தனர். சிலர், தேடுவாரற்றுக் கிடந்த நிலங்களை விலைக்கு வாங்கி விளையும் நிலங்களாக மாற்றியும், சிற் சிறு கட்டங்களமைத்தும் பண்படுத்தினர். பர்மியர் அக்காலத்தில் நாகரீகம், கல்வி, முயற்சி முதலியவைகளின்றி முக்கிய பட்டணங்களில் காணக்கூடாமல் அதிகமாய் உள் நாடுகளில் சிற்சிறு கிராமங்களில் தங்கள் நிலங்களை உழுது பயிர் செய்து ஜீவனஞ்செய்து வந்தனர். இந்தியர்கள் வியாபாரத்திலும், பாழ் நிலங்களிலும் தங்கள் திரவியங்களை இறைத்து இவைகளை விருத்திக்குக் கொண்டுவந்தனர்.

இதே சமயத்தில் கவர்ன்மெண்டார் மரம் நிறைந்த காடுகள் முதலிய முக்கியமான வரும்படி வரும் பாகங்களையும், வியாபாரங்களையும் தங்கள் கைவசமாக்கி இஷ்டம் போல விலை யியற்றி வெளியூர்களுக்கு அனுப்பினர். மேலும் நிலத்தீர்வையும், தலைக்கட்டு வரியும் (Thathamada and Capitation taxes) இயற்றினர். மிகுதியாக உழுது பயிர் செய்யும் முறையையே கையாண்டு வந்த பர்மியர்கள் வரிகளைக் கொடுக்க மிகவும் கஷ்டமடைந்தனர். சில வேளைகளில் தங்கள் நிலங்கள் விளையாமல் மோசம் செய்துவிட்டால், அவர்களுக்கு வேண்டிய பண ஒத்தாசைகள் செய்ய ஒருவருமில்லாது தயங்கினர். இச்சமயத்தில் தங்கள் இந்திய சகோதரர்களிடம் சென்று பொருளுதவி செய்யுமாறு வேண்டினர். பர்மியர்களின் கஷ்டங்களைத் தீர்க்க அநேக இந்தியர்கள் உள் நாடுகளில் சென்று பண லேவா தேவி செய்யத் தொடங்கினர். இவர்கள் பர்மியக் குடியானவர்களுக்கு நம்பிக்கையின் பேரில் கடன் கொடுத்துப் பல விடங்களில் ஏராளமான நஷ்டமடைந்து பர்மியர்களின் வேளாண்மையைச் சீர்தூக்கி வந்தனர். ஆகவே இந்தியர்—பர்மியர் ஒற்றுமையால் பர்மா தீவிரமாய் முன்னேற்ற மடைய

ஆரம்பித்தது. ஆந்திர நாட்டு ஜனங்கள் அதிகமாய்க் கூலி வேலைகளையும் தென்னிந்தியர்களில் கல்லாதவர்கள் உள் நாடுகளில் பயிரிடும் வேலையையும், கற்றவர்கள் உத்தியோகங்களையும், சிறிய வியாபாரங்களையும், வட இந்தியர்கள் பெரிய வியாபாரங்களையும் செய்து வந்தனர். உள் நாடுகளில் குடியேறிய இந்தியர்கள் தங்கள் சொந்த ஊர்களிலிருக்கும் சொத்துக்களையெல்லாம் விற்றுப் பணமாக்கி பர்மாவே தங்கள் சுய தேசமெனக் கருதி உழுது பயிரிட்டு வந்தனர். இதனால் அநேக இந்திய-பர்மிய கலப்பு மணங்களும் நடந்தன. பர்மியர்கள் இந்தியர்களைக் "கள்ளா" என்று வெகு பிரியத்துடன் அழைத்து மாசற்ற மனத்துடன் ஒற்றுமையோடு வாழ்ந்து வந்தனர். அக்காலத்தில் பர்மியர், இந்தியர்மீது வைத்திருந்த இயற்கையான அன்பிற்கு இவை போதிய சான்றாகும்.

## பிற்கால நிலை

அக் காலத்தில் பர்மியர் கல்வியில் அதிகம் தேர்ச்சி யடையாததால் தங்கள் நாட்டின் விடுதலைக்குப் பாடுபடாமல் சுதந்திர உணர்ச்சியற் றிருந்தனர். இந்தியா வருஷா வருஷம் காங்கிரஸ் கூடி சுதந்திரம் பெறும் மார்க்கங்களையும், ஜனங்களுக்கு உணர்ச்சியையும் உண்டு பண்ணி வந்தபோது பர்மியர் அதோடு கலந்து கொள்ளாம லிருந்தனர். பர்மிய சுவாமியார்கள் (பொங்கிகள்) இந்தியர்மீது எப்பொழுதும் பேரன்புடையவர்கள். இவர்கள் இந்தியரின் சுதந்திர இயக்கத்தின் உண்மையை யுணர்ந்து தங்கள் தேசமும் சுதந்திரம் பெற்று முன்னேற்றமடையக் கருதி இந்தியக் காங்கிரஸில் அங்கத்தினர்களாய்ச் சேர்ந்தனர். இதற்கு மிகவும் பாடுபட்டவர் திருமிகும் ஊ ஆட்டமா என்னும் தலைமையரான சுவாமியாரே. காலஞ்சென்ற தேச பந்து ஸி. ஆர். தாஸ் அவர்கள் தலைமையில் கூடிய காங்கிரஸில் இவர் மிகவும் ஒற்றுழைத்தார். மற்ற சாதாரண பர்மியர்களுக்குத் தேசாபிமானம் பொங்கியெழாமல் தங்கியிருந்தனர். பிறகு கொஞ்சம் கொஞ்சமாய்ப் பர்மியர்கள் இந்தியர்களோடு சுதந்திரத்திற்கு ஒற்றுழைக்க ஆரம்பித்தனர். இப்படி ஒற்றுமை மிகப் பற்றுடன் உண்டான சமயத்தில் இதைக் கெடுக்க யாரோ பர்மா பிரிவினையைத் தூண்டி விட்டனர். பிரிவினை, பர்மியர் மனதில் இயற்கையாக ஏற்பட்டதென்று கூற முடியாது. வெகு சில பர்மியர் தங்கள் ஆத்துமாவை விற்று



பர்மா பிரிவினைக் கோஷ்டிகளை ஏற்படுத்த ஆரம்பித்தனர். சுவாமியார்களும் மற்றவர்களும் ஆங்காங்கு கூட்டங்கள் கூடி பிரிவினை கூடா தென்றும் இந்தியாவோடு ஒற்றுழைத்தா லன்றி விடுதலை கிடையா தென்று எடுத்துக் காட்டியும், "உந்தானு" என்ற பெரிய கூட்டம் உண்டாக்கி அதன் மூலம் கூட்டங்கள் அடிக்கடி கூடத் தொடங்கினர்.

இச் சமயத்தில் ஊ ஆட்டமா என்பவர் ஓர் பெருங் கூட்டத்தில் இந்தியா பர்மா ஒற்றுமையையும், அந்நியர் அநியாயத்தையும் எடுத்துப் பேசியதால் குற்றவாளியாகக் கைதி யாக்கப்பட்டார். அன்று இரங்கூன் பிச் தோட்டத்தில் ஒரு பெரும் சுவாமியார்கள் கூட்டம் கூடிற்று. அதைக் கூட விடாது போலீஸார் தடிகொண்டடித்துத் துரத்தி விட்டனர். உண்மையான தேசாபிமானிகள் எவ்வளவோ பாடுபட்டும் பிரிவினைக் கோஷ்டி உதவியும், ஊக்கமும் கொடுக்கப்பட்டு பர்மியருக்கு இந்தியர் மீதிருந்த நல்லெண்ணங்களை மாற்றப் பிரசாரங்கள் செய்யத் தொடங்கிற்று. அநேகர் அறியாமையால் இவர்கள் சொல்லுவது நியாயமெனக் கருதினர். ஒருவனுக்குச் சுய புத்தியாவ திருக்க வேண்டும். இல்லாவிடில் நல்ல சொற் புத்தியாவ திருக்கவேண்டும். இரண்டு மில்லாதவன் அறியாதார் அறிவுக் கிணங்கி அழிவது சகஜமல்லவா? மாற்றானுக் கிடங் கொடுத்ததால் இந்தியர் பர்மியர் ஒற்றுமை யற்றுப்போக நேரிட்டது. பிரிவினைக்காக "பர்மா பர்மியர்களுக்கே" என்னுஞ் சங்க மொன்றும் உண்டாயிற்று. பிரிவினை விஷயமாய் கவர்ன்மெண்ட் உத்தியோகமும் ஆதரவும் கிடைத்தவர்களே அதிகமாய் ஆரவாரித்தனர். (G. C. B. A.) ஜி. சி. பி. ஏ. உந்தானு முதலிய கூட்டங்கள் கூடி பர்மாவுக்குக் குடியேற்ற நாட்டு அந்தஸ்து கிடைக்க வேண்டுமென்றும், அந்நிய நாட்டுத் துணி பகிஷ்கரிக்க வேண்டுமென்றும் அநேக தீர்மானங்களை நிறைவேற்றின. பிறகு பிரிவினைக் கூச்குரல் கொஞ்சம் அடங்கி யிருக்கும் தருணத்தில் "சைமன் கமிஷன்" வந்து நுழைந்தது. அதன் முன்னிலையில் கவர்ன்மெண்டாரும் அவர்களைச் சேர்ந்த பர்மியரும் பிரிவினை பர்மாவுக்கு அத்யாவசியமா யிருக்கிறதென்று கூறிப் பிறகு சட்டசபையிலும் பிரிவினைத் தீர்மானத்தை நிறைவேற்றினர். இதற்கு

இந்தியர் தடை யொன்றுங் கூறவில்லை. ஆனால் பிரிவினையாகு முன், வேண்டிய சுதந்திரங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இன்றேல் பிரிவினையான பின் கஷ்டங்கள் பல நேரிடுமெனவும் புத்தி புகட்டினர். இந்தியர் பர்மாவின் திரவியங்களை வடிகட்டி, செல்லுகிறார்க ளென்ற பொய்க் கதையை பர்மியரில் சிலர் நம்பி, இந்தியர் மீது துவேஷம் பாராட்டி "கள்ளா" என்று அன்புடன் கூறினது போக இப்பொழுது வெறுப்பாகக் கோபக் குறியுடன் கூறும்படி நேரிட்டது. அதற்கு யாரை நோவது.

இரங்கூனிலிருந்து இந்தியாவுக்குப் போகும் ஆண்களுக்குத் தலைக்கு ரூ 2 வரியாக (Terminal tax) கவர்மெண்ட் வசூலித்து வரத் தொடங்கிற்று. இந்தியர்கள் கவர்மெண்டில் உத்தியோகம் பெற வேண்டுமானால் பர்மாவில் பிறந்து வளர்ந்திருக்க வேண்டுமென்ற நிபந்தனையிருந்தது. அப்படி யில்லாவிட்டால் பர்மாவில் கொஞ்சகாலம் வசித்து வந்திருக்க வேண்டியதாயிருந்தது (Domiciled in Burma). ஆனால் எவ்வளவு காலம் வசித்திருக்க வேண்டு மென்பதைக் குறிப்பிடவுமில்லை. கேட்டாலும் சொல்லவுமில்லை. பின்பு பர்மா பாஷை நன்றாய்ப் பேசவும் எழுதவும் தெரிந்திருக்க வேண்டுமென்றும் நிபந்தனை யேற்படுத்தி, பர்மா பாஷையைத் தாய் பாஷையாகக் கொள்ளாதவர்களைச் கலாசாலைகளில் யெடுத்துக் கொள்ளப்பட மாட்டாது என்றும் கட்டளையிடலாயிற்று. இப்படியே மற்ற துறைகளிலும் இந்தியர்களுக்கு மிகவும் நெருக்கடி உண்டாயிற்று.

## தற்கால நிலை

### பர்மா படுகொலை

கடந்த மே மீ"த்தில் இரங்கூன் துறைமுகத்தில் இறக்குமதி ஏற்றுமதி வேலை செய்துவரும் ஆந்திர ஜனங்கள் தங்கள் கூலியில் கால் ரூபாய் ($1\frac{1}{2}$யிலிருந்து $1\frac{3}{4}$) அதிகம் கொடுக்க வேண்டுமென்பதாய் மேலதிகாரியிடம் கேட்டு, பிரயோஜனப்படாமையால் வேலை நிறுத்தம் செய்து விட்டனர். இதனால் இறக்குமதி ஏற்றுமதியாகாமல் கப்பல்கள் ஆங்காங்கு அப்படியே "தூங்க" நேரிட்டது. துறைமுகத்தில் மூட்டைகள் குவிந்து கிடந்தன. இலங்கைக்கு அரிசி வந்துசேராமல் ஜனங்கள் கஷ்டப்பட்டனர்.



இந்த நெருக்கடியான சமயத்தில் இவ் வேலை யின்னதென்றறியா பர்மியர்களைக் காட்டுப் புறத்திலிருந்து கொண்டுவந்து வேலை ஆரம்பித்தனர். வேலை விரைவில் நடைபெறாது பெருத்த நஷ்டம் அடைந்தனர். ஆதலால் துறைமுக அதிகாரிகள் பர்மியர்களை வேண்டாமென்று தள்ளிவிட்டு ஆந்திரர்கள் கேட்டபடி கூலி கொடுக்கச் சம்மதித்து வேலைசெய்ய உத்தரவளித்தனர். இதனால் பர்மியர்களுக்கு, குற்றமற்ற ஆந்திரர் மீது பொறாமையும், ஆந்திரர்களுக்கு பர்மியர்மீது வெறுப்பும் ஏற்பட்டது. இதன் காரணமாய்ப் பர்மியர்களும் ஆந்திரர்களும் ஒருவர்மீ தொருவர் கற்களெறிய ஆரம்பித்தனர். பர்மியர் பலர் 'ஸன்' என்ற பர்மியப் பிரஸில் நுழைந்து கொண்டதால் ஆந்திரர் அக் கட்டிடத்தில் கற்களெறிந்து கொஞ்சம் சேதப்படுத்தினர். இதனால் ஆந்திரர்கள் பர்மியர்களைக் கொல்ல முற்பட்டுவிட்டன ரென்று பர்மியர்கள் வெறுங் கூக்குறலிட்டு ஆங்காங்கு பரப்பிவிட்டனர். இரங்கூன் 'பஸ்' சர்விஸ் பர்மியரிடமிருப்பதால் இவர்கள் உடனே கத்தி கேடயங்களுடன் மோட்டார்களில் புறப்பட்டு, தங்கள் முன்னேறிய ஆந்திரர்களை அதமாக்கினர். மேமீ" 24உ யன்று பெருத்த கலகம். பர்மாவில் என்று மில்லாப் படுகொலை நடந்தது. பர்மியர் ஆந்திரர் வீடு புகுந்து கொள்ளையடித்து ஆண் பெண் குழந்தைகளையும் கூசாமல் கத்தியால் குத்தி விண்ணுலகத்திற்கு அனுப்பியதை எவ்வாறெடுத்துரைப்பது. வயிற்றுப் பிள்ளையோடிருந்த ஓர் ஆந்திரப் பெண்ணைக் குத்தி வீழ்த்தினதைக் கண்ணாரக் கண்ட ஓர் தென்னிந்தியத் தமிழர், அதே நினைவால் இருதயம் கலங்கி இரண்டு நாளைக்குப்பின் உயிர் துறந்தாரென்றால், அக்கொடுமையை என்னவென்று சொல்வது! ஆந்திரர்களும் பர்மியர் சிலரை வதைத்த போதிலும் கலகம் அதிகப்படவும் பயந்து வீடுகளில் ஒழிந்து கொண்டனர். பர்மியர் தெருக்களில் சென்று கண்டவர்களைக் கண்ட துண்ட மாக்கினர். எங்குங் கொலையுங் களவுமேற்பட்டு இரங்கூன் கிடுகலங்கி நின்றது. கடைகளெல்லாம் சாத்தப்பட்டன. தெருக்களில் பர்மியரைத் தவிற வேறொருவரையும் பார்க்க முடியவில்லை. அந்தோ! போலீஸார்களின் உதவி பெற முடியாமல் ஆந்திரர்கள் அழிந்தனரே ஆயிரக்கணக்காய்! இரங்கூன் நகர் முழுவ

தும் ஆங்காங்கு பிணங்கள் குவிந்து பிணவாடை வீசத் தொடங்கிற்று. இரங்கூன் சுற்றுப் புறங்களில் கொலையுங் களவும் சேர்ந்து நடந்தன. வண்டிகளெல்லாம் நிறுத்தப்பட்டன. அன்று நடந்த கோரச் சம்பவத்தைக் கண்ணால் பார்த்திருக்க வேண்டுமேயன்றி எழுதுவதினால் உணர்ச்சி யளிக்க வியலாது (It was a sight to see and not to tell) எங்கும் ஐயோ! ஐயோ!! வென்னுஞ் சப்தம் கேட்டு முடியாது. இந்தியர்கள் ஆந்திரர்களை ஆங்காங்கு ஆயிரக் கணக்காய் கூட்டி வைத்து ஆதரித்து வந்தனர்.

அடுத்த நாள் இந்துக்களும் முஸ்லீம்களும் தங்கள் ஆந்திர சகோதரர்களைப் பர்மியர் இரக்க மின்றி இரத்த வெள்ளமோட வெட்டி யெறிவதைக் கண்டு மனம் பொறாமல் எல்லோரும் ஒற்றுமையுடன் பர்மியர்களைத் தாக்கக் கிளம்பி விட்டனர். ஒற்றுமையாலாகாத தொன்றுண்டோ? பர்மியர் மூலை முடுக்குகளை நாடி யோடினர். இதே சமயத்தில் இராணுவப் படைகளும் வந்து சேரவும் கலகம் சிறிது அடங்கிற்று. இந்து முஸ்லீம் ஒற்றுமை ஏற்படாவிட்டால் ஆந்திரர் அனைவரும் அதமாக்கப்பட்டிருப்பார்கள் என்பதற்குச் சந்தேகமே யில்லை. உள் நாடுகளில் கலகம் ஏற்படவில்லை. அங்கே பொதுவாக இந்தியர்களைக் கொல்ல முயன்றவர்களைப் பர்மியப் பெரியார்கள் தங்களுக்கு வரும்படியில் நஷ்டமேற்படுமென்று இந்தியர்களுக்கு ஆதரவளித்து கலகம் ஏற்படாமல் தடுத்து விட்டனர்.

ஆந்திர மக்கள் ஆயிரக்கணக்காய்த் தங்கள் சுயதேசம் செல்ல ஆரம்பித்தனர். அநேகர் இன்னும் கலகம் நடக்குமென்று பயந்தோடினர். அநேகர் தங்கள் பெண்டு பிள்ளைகளைக் கொல்லும் போது பார்த்ததால் பிடித்த பயமும், இரவில் தூக்கமின்றிக் கண்முன் தோன்றிய கோரக்கனவாலும் சதா இம்சிக்கப்பட்டு, சகியாமல் கப்பலேறி யோடினர். மேலும் சைமன் கமிஷன் யாதாஸ்தின் இரண்டாம் பாகத்தில் பர்மா பிரிவினைக்குச் சிபார்சு செய்து ஜூன் மீ 24உ வெளி வரப்போகிறதென்றும் அன்று பர்மியர் ஊர்வலம் வந்து இந்தியரை மறுபடியும் தாக்கப் போவதாகக் கருதியும் ஓடினர் பலர்.



உண்மையாகவே சைமன் கமிஷன் யாதாஸ்தில் பர்மா இந்தியாவின்று உடனே பிரிக்கப்பட வேண்டுமென்றும், பர்மா கவர்னருக்கும் வைசிராய்க்கும் யாதொரு சம்பந்தமு மிருக்கக் கூடாதென்றும், பிரிவினையான பிறகு பர்மா எவ்விதமாய் ஆளப்படுவதென்று கலந்து யோசித்துக்கொள்ள வேண்டுமென்றும், இராணுவம் வைசிராய்க்குக் கீழிருக்க வேண்டுமென்றும், வெள்ளைக் காகிதங்களில் வெகு இனிமையாய்க் கூறியிருந்தது. அன்று கலகத்தை எதிர் பார்த்து அநேக கடைகள் அடைபட்டன; "லஞ்சா" வண்டிகள் நிறுத்தப் பட்டனர்; ஆந்திரர் அநேகர் அடைக்கலம் புகுந்தனர். ஆனால் எதிர் பார்த்த கலகம் உண்டாகவில்லை. பிரிவினைக் கோஷ்டியாரும், பிரிவினை வேண்டாத கூட்டத்தாரும் தனித்தனியாய் ஊர்வலம் வரப் போலீஸ் கமிஷனரிடம் 'லைசென்ஸ்' கேட்டதாகவும், இருதரப்பாருக்கும் ஒரு வேளை சச்சரவு ஏற்படுமென்று கருதி கமிஷனர் ஒருவருக்கும் உத்தரவு கொடுக்காததால் அன்று கலகம் நடக்கவில்லை யென்றும் கூறுகின்றனர். அதற்குப் பதிலாக இரங்கூன் சிறைச்சாலையில் அன்று பகலில் பெரிய கலகம் நடந்தது. பர்மியக் கைதிகள் தங்களுக்கு விடுதலை கிடைத்து விட்டதாக மனோ ராஜ்யம் பண்ணிக்கொண்டு காவலர்களின் துப்பாக்கிகளைப் பறித்து அவர்களில் சிலரைச் சுட்டு வீழ்த்தினர். அதற்குள் இராணுவப் போலீஸ் வந்து அநேகக் கைதிகளைச் (சுமார் 60 பேர்களை) சுட்டு வீழ்த்தினர். கைதிகளால் சில இந்திய இராணுவப் போலீசார்களும் இறந்தனர்.

இரங்கூன் படுகொலையின் காரணத்தை யறிய கவர்ன்மெண்டார் வழக்கம் போல ஓர் கமிட்டி ஏற்படுத்தினர். அதில் விசாரிக்கப்படும் மேலதிகாரிகளை யாரும் குறுக்குக் கேள்விகள் கேட்கக் கூடாதென்று கமிட்டியார்களே ஓர் நிபந்தனை ஏற்படுத்தினார்கள். இதை மறுத்து இந்தியர் கவர்னரிடம் முறையிட்டதற்கு, தான் தலையிட முடியாதென்று கூறிவிட்டார். அதனால் நியாயங் கிடைக்காதென்று இந்தியர் அநேகர் அக்கமிட்டியின் முன் தங்கள் குறைகளைச் சொல்லச் செல்லவில்லை. கமிட்டி விசாரணையில் கவர்ன்மெண்ட் அதிகாரி யொருவர், "அடிபட்ட ஆந்திரர் அனைவரையும் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்பட்டது. ஆனால், பர்மியர்கள் அநேகரை வீடுகளிலும், பொங்கி மடங்களிலும்

வைத்துச் சிகிச்சை செய்ததால் பர்மியர் ஆஸ்பத்திரியில் அதிகம் காணவில்லை. இதனால் ஆந்திரர்கள் தான் அதிகமாய் அடிபட்டனரென்று கூறுவது முடியாது!" என்று வாக்குமூலங் கொடுத்திருக்கிறார். மற்றொருவர் தாங்கள் நேரில் அன்று ஓரே ஒரு சம்பவத்தைதான் பார்த்ததாகக் கூறினர். இதனால் இந்தியருக்கு எவ்வளவு தூரம் நியாயம் கிடைக்குமென்பது உணரக்கிடக்கிறதல்லவா? இதுவரை ஆந்திரர்கள் சுமார் 30,000 பேர்களுக்கு மேல் தங்கள் சுய தேசம் போய்விட்டனர்.

சைமன் கமிஷன் பிரிவினைக்கு சிபார்சு செய்திருப்பதாலும், நடந்த கலகத்தாலும், இனி மேல் இந்தியர்களுக்கு அநேக கஷ்டங்களை விளைவிப்பார்களென்று பயந்து, அநேக இந்திய வியாபாரிகள் உள்ள பணத்தைக் கொண்டாவது ஊர் போய்ச் சேர்வோமென்று வியாபாரங்களைச் சுருக்கி வருகின்றனர். அரிசி, மரம், முதலிய வியாபாரங்களில் ஏராளமான நஷ்ட மடைந்தது மன்றி வியாபாரங்களும் குறைந்து போயின. துறைமுகங்களில் வேலைக்கு ஆளில்லாமல் மறுபடியும் பர்மியர்களைக் கொண்டு வெகு நஷ்டத்துடன் வேலை வாங்கி வருகின்றனர். "பர்மிய தொழிற் சங்கம்" ஒன்று ஏற்பட்டு பர்மியர்கள் தொழில் செய்யத் தகுதியுடையவர்களாக்க ஓய்வின்றி வேலை செய்து வருகிறது. கலகத்துக்குப் பயந்து வேலையை விட்டு மறுபடியும் வந்து சேரும் ஆந்திரருக்குத் துறைமுகத்தில் வேலையில்லையாம். இப்படியாக மற்ற விடங்களிலும் இந்தியக் கூலிகளுக்குப் பதிலாக பர்மியக் கூலிகளைப் புகுத்தப் பிரயத்தனப் படுகின்றனர். கவர்ன்மெண்ட் உத்தியோகங்களிலும், இந்தியர்களை எடுத்துக்கொள்வதில்லை. நகர பரிபாலன சபைக்குக் கமிஷனராக ஓர் பர்மியரை ஏற்படுத்தி யிருக்கின்றனர். இப்பெரியார் பர்மியரன்றி வேறொருவருக்கும் வேலை கொடுக்கக்கூடாதென்னுங் கருத்துடையவரா யிருக்கிறாராம். உள் நாடுகளிலும் பர்மியர் இந்தியர் மீது நம்பிக்கை யிழக்கின்றனர். இப்படியாக இந்தியர் பல துறைகளிலும் கஷ்டமடைந்தும், இனிமேல் கஷ்ட நஷ்ட மடையவும் போவதாகத் தெரிகிறது. பர்மியர்—இந்தியர் உறவு முறிகிறது, முறிந்துவிடப் போகுறது. "அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்ட" கதை போலாயிற்று. இச்சமயத்தில் இந்தியாவிலுள்ள நம் சகோதரர்கள் பர்மாவில் வந்து எப்பொழுதும் போல் சுகமாய் வாழலாமெனக் கருதி வீணாகப் புறப்பட்டு வராமல் அங்கேயே யிருந்து ஐம்பது கிடைப்பதற்குப் பதிலாக ஐந்தைப் பெற்று நம் சுய நாட்டின் நலங்கருதித் தொண்டு செய்து வாழ்வதே உத்தமம். "மதியாதார் தம் முற்றம் மிதித்தொருக்காற் சென்று மிதியாமை கோடி பெறும்" என்ற, ஔவையின் அரும் வாக்கை இச் சமயம் கைக்கொண்டு நலம்பெற வேண்டுகின்றோம்.

---

# ஐரோப்பிய நாடுகளில் போர் வேட்கை.

திரு ஸி. எ. பெருமாள் அவர்கள்.

காலதேவதை, ஐரோப்பிய நாடுகளில் கோர ரூபமெடுத்து சர்வ நாசகாரியாய் எங்கணும் உலாவித் திரிகின்றாள். அவள் கொண்டிருக்கும் உக்கிர வேசம் உலக நாடுகளை யெல்லாம் நடுநடுங்கச் செய்து வருகின்றது. அந் நாடுகளில் அடுத்த நிமிஷம் என்ன சம்பவிக்குமென எவராலும் கூற முடியாவாறு, எங்கெங்கு பார்த்தாலும் புதிய புதிய மாற்றங்கள் திடீர் திடீரென நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றன. அரசியல் மண்டலங்கள் யாவும் பயங்கரமான அந்தகாரத்தி லாழ்ந்து ஸ்தம்பித்துக் கிடக்கின்றன. அமைச்சர்களும் அரசியல் தலைவர்களும் நிலை குலைந்து தடுமாறுகின்றனர். மகுடாதிபதிகளும் மன்னர் பெருமான்களும் எந் நிலையுறுமோ வென ஏக்கமுற்று வாளா விருக்கின்றனர். வெங்கனல் மூட்டும் வீர மொழிகள் சுத்த வீரர்களின் உள்ளங்களி லிருந்து தங்கு தடங்கலின்றி வந்து கொண்டே யிருக்கின்றன. திகிலும் திக்பிரமையும் உலக மக்களது உள்ளத்தை வாட்டி வதைக்கின்றது. பத்திரிகை உலகமும் ஒவ்வொரு நாடுகளும் கொண்டிருக்கும் போர் வேட்கையை வெள்ளிடைமலையென விளக்கிக் காட்டுகின்றது.

## பத்திரிகைகளின் முழக்கம்

அந்தோ! எந்த தேசத்துப் பத்திரிகையை யெடுத்தாலும் நெஞ்சு பதற வைக்கும் வெஞ்சினப் பார்வை கொண்ட ரணபாதகப் பைசாசங்களின் விகார சித்திரங்களே, பத்திரிகைகளில் முன்னணி பெற்று விளங்குகின்றன. "நெதர் லாண்ட்ஸ்" தேசத்தின் "ஆம்ஸ்டர்டாம்" நகரத்திலிருந்து வெளிவரும் "டி நாட்டன்கிராக்கர்" (De "Notenkraker,"–Amsterdam) என்னும் பத்திரிகை வெர்ஸலிஸ் உடன்படிக்கையை யிட்டு "வெர்ஸலிஸ் நகரத்தில் நிலைக் கண்ணாடி மண்ட"

பம்,'' என்பதாக உலக சமாதான நிலைமையைப் பரிகசிக்கும் விதத்தில் ஓர் படத்தை வெளியிட்டிருக்கிறது. மண்டபத்தின் நாற்புறமும் நாட்டி வைத்திருக்கும் நிலைக் கண்ணாடிகளில் பாதாதிகேச பரியந்தம் இரும்புக் கவசங்கள் பூண்டு, அரையில் உடைவாளும் அங்கையில் படைவேலும் தாங்கி, உதிரம் உறிஞ்சுவதற்குக் காத்து நிற்கும் எண்ணிறந்த கொலை வீரர்களின் பிரதிபிம்பங்கள் பிரதிபலித்துக் கொண்டிருக்கின்றன. அதனைக் கண்ணுற்ற உலக மாதா உடல் பதறி, குடல் நடுக்க மெடுத்து ஓடி ஒளிக்கின்றாள். ஜெர்மனியின் பெர்லின் நகரத்து "கிளாடர் டாட்ஸ்'' ("Kladder adatch''–Berlin) என்னும் பத்திரிகை உலக சமாதானம் என்ற தேவதூதனை 'லீலில்' பிரபு குப்புறத் தள்ளிக் காலாலுதைத் தெறிந்துவிட்டு, ஜீனிவாவி லிருக்கும் சர்வ தேச சங்கத்திற்குச் சமாசாரம் தெரிவிக்கும்படி அனுப்பிவைப்பது போன்ற ஓர் படத்தை சித்திரித்து வெளியிட்டிருக்கிறது. அமெரிக்காவிலுள்ள 'புரூக்லின்' நகரத்தின் 'ஈகிள்,' (Eagl–Brooklyn) என்னும் பத்திரிகை 'நாகரீகம்' என்ற ஓர் பெரும் கப்பல் பிரம்மாண்டமான பீரங்கிகளால் நிறைக்கப் பெற்று கனம் தாங்கப் பெறாது கடலிலாழப் போகும் தருவாயில், 'சமாதானம்' என்ற ஓர் சிட்டுக் குருவி தனது உடல் வலிமையால் கப்பலை மூழ்க விடாதபடி கரையேற்ற முயற்சிப்பது போன்ற ஓர் நவீன படத்தை விடுத்திருக்கிறது. ருஷியா தேசத்தின் மாஸ்கோ நகரத்துப் "பிராவ்டா'' ("Pravda''–Moscow) பத்திரிகையோ எவராது ஜனப் பிரதிநிதியென்ற நிலைமையில் முன் வந்து பேசத் துணிவார்களாயின் அவர்களை இதோ என் கையிலிருக்கும் இரும்புச் சங்கிலியால் பிணைத்துக் காவலி லிருத்துவேன் என ஆயுதங்கள் தரித்து வீர கர்ஜனை செய்து நிற்கும் ஓர் கொலைக்களத் தேவதையின் படத்தை வெளியிட்டிருக்கிறது. இவ்வாறான கோரமும் கொடூரமும் நிறைந்த கொலைக் கருவிகளின் பயங்கரமான பல்வேறு காக்ஷிகளையும், மக்களது உடலையும் உயிரையும் ஒடுங்க வைக்கும் ரத்த தாகம் தணியப் பெறாத மாபாதகர்களின் வித விதமான கொலை வேட்டங்களையும் குறிக்கும் எண்ணிறந்த சித்திரங்கள் உலக மெங்கும் பிரபலம் பொருந்திய நியூயார்க் "வொர்ல்ட்,'' (New york– 'World'') பாரிஸ் "லீ-ரையர்'' (Paris– "Le-Rire'') ஸெண்ட் லுயிஸ் "போஸ்ட் டெஸ்பாச்'' (St. Luis–



"Post Despatch), மியூனிச் "ஸிம்பிளி ஸிஸிமஸ்'' Muuich– "Simpli cissimus''), பிளாரன்ஸ் "இல் 420'' (Florence–"Il 420'') பெர்லின் "அல்க்'' (Berlin–'Ulk'') லண்டன் "ஈவினிங் ஸ்டாண்டர்ட்'' (London–"Evening Standard'') சிக்காகோ "டெயிலி நியூஸ்'' (Chicaco–"Daily News'') ஆகிய பத்திரிகைகள் யாவும் வெளியிட்டுக் கொண்டே யிருக்கின்றன. அவைகள் ஒவ்வொன்றும் படங்கள் மூலம் சித்தரித்துத் தருகின்ற ஐரோப்பிய நாடுகளின் தற்கால நிலைமையை நாம் தனித் தனி விவரிக்கப் புகுவோமாயின் நமது சிறு பத்திரிகையில் இடமுமில்லை. என்றாலும் தலையங்கங்கள் யெழுதியும் தனிக் கட்டுரைகள் வகுத்தும் பலவித சித்திரங்களை வெளியிட்டும் வருகின்ற பத்திரிகைகள் எல்லாவற்றினும் உலகப் பிரசித்தி பெற்ற "மான்செஸ்டர் கார்டியன்'' என்ற பத்திரிகை ஐரோப்பிய நாடுகளின் தற்கால நிலைமையை யிட்டு எழுதியிருக்கும் ஓர் தலையங்கத்தில் சில உண்மைகள் புலப்படுகின்றன. அதன் ஆசிரியர் அத் தலையங்கத்தில் ஜெர்மனியைப் பற்றிக் கூறுகையில், "ஹிட்லர் கொள்கை ஜீனிவாவினின்றுமே உற்பத்தியானது'' என்று சொல்லிவிட்டு, பின்னும் எழுதுவதாவது: "வெளியிலுள்ளோர்களுக்கு "நாஸிஸ்'' கக்ஷியார்கள் (ஜெர்மனியின் ஜனாதிபதியான ஹிட்லர் என்பாரின் தேசீயக் கக்ஷி) மூட்டுத்தனமான தேசீய வாதிகளாகக் காணப்படுவார்கள். அது உண்மையே யானாலும் ஓர் சாருடைத்ததே யன்றி வேறன்று. இத்தாலியில் "பாஸிட்'' கக்ஷியார்கள் ஆதியில் அனுஷ்டித்து வந்த கொள்கையைப் போன்று சந்தேகத்தையும் உண்டுபண்ணத் தகும் வழியில் பொருளாதார சாம்பிராஜ்யத்தைத் தேடுவதற்காகவே நாஸிஸ் கக்ஷியார்கள் குழப்ப முண்டுபண்ணி வருகிறார்கள். அவர்கள் செல்வந்தர்களின் ஏகாதிபத்தியத்தையும், ஜெர்மனியை அடிமைப்படுத்தும் கருத்தோடு ஏகாதிபத்தியச் சலுகையிலேயே "யங்'' அவர்களின் யுத்தக் கடன் தீர்ப்பு முறையும் (Young Plan) ஆக்கப்பட்டிருக்கிற தெனக் கொண்டு, அதனையும் அடியோடு வெறுக்கின்றனர். இது மூடத்தனமான கொள்கையா யிருந்தாலும் இதுவே அங்கு வேரூன்றி யிருக்கிறது. ஜெர்மனி உண்மையில்

செல்வம் சிறந்து விளங்குமாயின் இதனால் பிரதி பலன்கள் ஏற்படவும் மாட்டாது. ஆனால் தொழிலாளர்களின் கூலி மிகவும் குறைக்கப்பட்டும், வேலை யில்லாமையால் திண்டாடும் மக்கள் 35 லக்ஷத்திற்கு மதிக்கப்பட்டும் விட்டார்கள். ஆதலால் பொருளாதார சாம்ராஜ்யத்தைத் தேடும் ஒரே நோக்கத்தில் ஜெர்மானிய மக்கள் இக் கக்ஷிக்கு மேலு மேலும் உயிர் கொடுத்து வருவதில் ஆச்சரியப்படுவதற்கு அவசியமே யில்லை.......................................................

தற்போதுள்ள நிலைமையில் சர்வ தேச சங்கத்தின் ஆதரவில் யாதொரு விதமான உடன்பாட்டுக்கும் வரமுடியாமற் போகுமாயின் நாஸிஸ் கக்ஷியார்களின் கிளர்ச்சி படை பலத்திற்கு நேராகவே வளர்ந்து கொண்டு போகும். இந் நிலை கண்டு லண்டனிலிருந்து வெளிவரும் "றெவ்யூ ஆப் றெவ்யூஸ்" (London-Review of Reviews January 1931 Page 12) என்னும் பத்திரிகையும் எழுதுவதாவது:—

"ஜீனிவாவில் பொன் போன்ற சமய மெல்லாம் வெற்றுரைகளால் பாழ்பட்டுப் போயிற்று. ஜெர்மன் "சாவ்னிஸமும்," * (Chauvinism) பரவி விட்டது. பிரஞ்சு ஜெர்மனிய சம்பந்தமும் நெருக்கடியான நிலையிலேயே யிருந்துகொண் டிருக்கிறது. ஐரோப்பாக் கண்டம் மெதுவாகப் போர் முகம் காணும் நிலையை யடைந்து வருகிறது."

## ஜெர்மனியின் நிலைமை

ஐரோப்பாவின் எதிர்கால நிலைமையை ஒருவாறு ஊகித்துணர்வதற்கு ஒவ்வொரு நாடுகளின் தற்கால பொருளாதார அரசியல் நிலைகளை ஆராய்ந்து பார்க்க வேண்டுவது மிகவும் அவசியமாகும். இதில் தற்காலத்தைப் பொறுத்த அளவில் அதிகமான கலக்கத்தை உண்டு பண்ணாத சில சிற்றரசுகள் ஒரு வேளை வருங்காலத்தில் பலவித இடையூறுகளை அளித்து, முன்னின்று வேலை செய்யுமாயினும் அவைகளைப் பற்றிய விரிந்த ஆராய்ச்சிகள் இப்பொழுது அவசிய மில்லை யென்றே தோன்றுகிறது. எனவே ஐரோப்பாக் கண்டத்திற்கு அச்சாணி போன்றும், உலக மக்களின் உள்ளத்தில் சதா ஐயப்பாடுகளை எழுப்பி வருவதுமான ஜெர்மனி தேசத்தின் உள் நாட்டு நிலைமையை முதலில் கவனிப்போம். ஜெர்மனியில் தற்போது நடந்தேறிய ஜனாதிபத்தியத் தேர்தலே உலக மெங்கும் பரவி யிருக்கும் ஆத்திரத்திற்கும் கலக்கத்திற்கும் ஆதிகாரண மென்பதை யாவரும் அறிவர். உண்மையில் அத் தேர்தற் பலன் ஜீனிவாவி லிருக்கும் சர்வ தேச சங்கத்தையும் நடுங்க வைத்து விட்டது. சர்வ தேச சங்கம் கூடிக் கலைந்ததின் பிறகே ஜெர்மனியின் அரசியல் தேர்தல் நடந்தேறியதால், ஒருவரும் எதிர் பாராத விதமாய் இடியோசை கேட்டது போன்று ஜெர்மனியின் "நாஸிஸ்" கக்ஷியார்களுக்குக் கிடைத்த வெற்றி ஐரோப்பிய நாடுகளெங்கும் எதிரொலி கேட்க ஆர்த்தொலித்தது. எனவே ஜெர்மனி கொண்டிருக்கும் பொதுவான சுதந்திர வுணர்ச்சியை ஒருவாறு சலனப்படுத்திவிட சர்வ தேச சங்கத்திற்கு இடமில்லாமற் போயிற்று. ஜெர்மனியின் அரசியல் மகா சங்கத்தில் இக் கக்ஷியார்கள் 12 ஸ்தானங்களையே சென்ற முறையில் பெற்றிருந்தார்கள். இக் கக்ஷியின் சார்பாக அப்போது வாக்குக் கொடுத்தவர்களும் 8,09,000 பேர்களே யாவார்கள். தற்போதோ இவ் வாக்காளர்களின் தொகை 64 லக்ஷத்திற்கு மதிக்கப்பட்டு அரசியல் மன்றத்திலும் 107 ஸ்தானங்கள்வரை பெற்றுவிட்டார்கள். ஹிட்லர் அவர்களின் ஜனாதிபத்திய வெற்றிக்கு ஆக்கம் தேடியவர்கள். தங்கள் நாட்டுப் பூரண சுயேச்சையில் பற்றுளங் கொண்ட இளங் காளையர்களே யன்றி பழைய உடன்படிக்கைகளின் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டிருந்த வயோதிக அரசியல் வாதிகளன்று. எதிர்கால அமைப்பில் பூரண நம்பிக்கை வைத்திருக்கும் இவ் விளைஞர்களின் ஊக்கம் பொதுவாக நாட்டின் பொருளாதார நிலைமை யிட்டும், உள் நாட்டுச் சுவாதீன லக்ஷியங்களை யிட்டுமே திடீரென புத்துயிர் பெற்றெழுந் திருப்பதாலேயே ஐரோப்பிய நாடுகளெங்கும் ஜெர்மனியைப் பற்றிய புதிய கவலையையும் கலக்கத்தையுமளித்து வருகிறது.

* "சாவ்னிஸம்" அந்நிய நாட்டு சம்பந்தங்களில் வெறுப்பும் தாய் நாட்டு லக்ஷியங்களில் அளவற்ற மதிப்பும் கொள்ளுதல்.



## ஹிட்லரின் அந்நிய நாட்டுச் சம்பந்தம்

ஜெர்மனியில் நாஸிஸ் கக்ஷியார்கள் வலிமை யடைந்து விட்டதினால் உலக சமாதானத்திற்குப் பங்கம் விளையக் கூடுமெனப் பெரிது மக்கள் கருதி யிருக்கும் இந் நாளில், அக் கக்ஷித் தலைவர்கள் அந்நிய நாட்டுச் சம்பந்தங்களில் கொண்டிருக்கும் அபிப்பிராயங்களை அறிந்து

கொள்வது அத்தியாவசியமாகும். அத் தேசத்துப் பத்திரிகைகள், இக் கக்ஷியின் பொறுப்பு வாய்ந்த தலைவர்கள் இதுபற்றி அறிவித்துள்ள குறிப்புரைகளை அவ்வப்போது வெளியிட்டும் வருகின்றன. அவற்றில் "லி-விக்டாயிறி" (Le-Victiore) என்னும் ஜெர்மன் பத்திரிகையின் ஆசிரியரான "எம். கஸ்டவ் ஹெர்வே" (M. Gustave Herve) என்பவர், ஜெர்மன் பிரஞ்சு ஒற்றுமையை யிட்டுத் தாம் கொண்டிருக்கும் ஆறு நிபந்தனைகளைப் பற்றி ஹிட்லர் கக்ஷியின் பொறுப்புள்ள தலைவர்களிடம் அபிப்பிராயம் தெரிவிக்கும்படி வேண்டினர். அவரது நிபந்தனைகள் ஆராயத் தகுந்த சிக்கலான விஷயங்களை உண்மையில் தெளிவு படுத்துவதாகும். அவையாவன:—

1. அமெரிக்க ஐக்கிய நாடுகள் நேச தேசங்களின் யுத்தக் கடன்களைத் தள்ளிவிட சம்மதிக்கும் சந்தர்ப்பத்தில் ஜெர்மனியின் யுத்தக் கடன்களையும் நிராகரித்துவிடல்.

2. பொது மக்களின் கருத்துக்களை வினவாது 'ஸார்' பிரதேசத்தைத் திரும்பக் கொடுத்துவிடல்.

3. ஆஸ்திரேயா ஜெர்மன் நட்புரிமையை பிரான்ஸ் ஒப்புக் கொள்ளுதல்.

4. "டாகோ," "கியாமரூன்" (Togoland & Cameroons) பிரதேசங்களைத் திரும்ப விட்டுவிடல்.

5. பிரான்ஸ் ஜெர்மனி ஒற்றுமை ஏற்பட்டதும் ஜெர்மனியின் இராணுவ பலம் பிரான்ஸின் இராணுவ பலத்திற்குச் சமமாக விருக்க அனுமதித்தல்.

6. ஜெர்மனிக்குப் போலந்தின் எல்லைப் புற வசதிகளை யளிப்பதற்குப் போலந்தோடு பிரான்ஸ் சிநேக பாவத்தில் நடந்து கொள்ளல்.

எம். ஹெர்வே அவர்களது இந் நிபந்தனைகளுக்கு ஜெர்மனியின் ஜனாதிபதியான ஹெர் ஹிட்லர் என்பாரே தகுந்தவாறு பதிலளித்திருப்பது கவனிக்கத் தக்கது. நேச தேசங்களின் அரசியல் சம்பந்தத்தை யிட்டு ஜெர்மனியின் தேசீயக் கக்ஷியார்கள் கொண்டிருக்கும் கொள்கையை அவரது கருத்துக்கள் செவ்வனே விளக்கிக் காட்டுகின்றன. ஹெர் ஹிட்லர் கூறுவதாவது:—



"வெர்ஸலிஸ் நகரத்தில் ஜெர்மனி தேசம் தனது போர்க் கருவிகளைக் குறைத்துவிட வேண்டுமெனப் பேசி முடிக்கப்பட்டது. அந் நிபந்தனை ஜெர்மனியின் குற்றத் தண்டனையாகக் கருதப்படமாட்டாவென்றும் ஆனால் ஒவ்வொரு தேசங்களும் தங்கள் போர்க் கருவிகளை ஒழித்து விடுவதற்கான முதல் படியாக அஃதிருக்குமென்றும் கூறப்பட்டது. அதற்கு நேர்மாறாக பிரான்ஸ் தேசம் தனது போர்க் கருவிகளை ஒழிப்பதற்கு அடியோடு மறுத்ததன்றியும் இதர ஐரோப்பிய நாடுகளையும் போர்க் கருவிகளை அதிகப்படுத்துமாறும் தூண்டி வருகின்றது. எனவே ஜெர்மனி சமீபத்திலோ அல்லது சற்று பின்னாலோ தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கான ஆவசிய முறைகளைக் கையாளுவதற்கு விரைவில் கட்டாயப் படுத்தப்படும். ஜெர்மன் பிரஞ்சு தேச இராணுவக் கூட்டுறவு எதற்காக ஏற்பட வேண்டுமென்பது தெரியவில்லை. குடியேற்ற நாடுகள் சம்பந்தமாக பொருளாதார நிலைமை பற்றியோ அல்லது இதர இடுக்கண்களை யிட்டோ மாற்றங்கள் அவசியப்படுமாயின் அமெரிக்காவுடனும் பழைய நேச தேசங்களுடனும் வேண்டியன செய்து கொள்ளலாம். ஆஸ்திரிலேயியாவின் சம்பந்தத்தில் பிரான்ஸிற்கோ அல்லது ஜெர்மனிக்கோ அவ்வளவான லாப மொன்றும் ஏற்பட்டு விடாது. இத்தாலியின் உதவியைப் பெறுவதே மத்திய ஐரோப்பாவுக்குச் சரியான பலமாகும். ஜெர்மன் பிராஞ்சு இராணுவக் கூட்டுறவு என்பது ஐரோப்பிய நாடுகளை இரு பெரும் கூறுகப் பிரிவினை செய்து சமாதான நிலைமைக்கு ஊறு விளைவித்து வருமேயன்றி உண்மையில் ஐரோப்பிய சீர்திருத்தப் போங்குகளுக்கு உறுதுணை செய்வதாகாது. இத்தியாதி காரணங்களால் ஜெர்மன் பிரஞ்சு கூட்டுறவு சிறிதேனும் பொருத்தமற்றதாகும். அதற்கு மாறாக நாகரீக தேசங்களை எஜமானர்களென்றும் அடிமைகளென்றும் இரு பிரிவு படுத்திவைத்திருக்கும் வெர்ஸலிஸ் உடன்படிக்கைகளின் குறைகளை உடனே அகற்ற வேண்டுவது மிகவும் அவசியமாகும். ஐரோப்பிய நாடுகளின் எதிர்கால அமைப்பிற்கும், பொதுவுடைமைக் கிளர்ச்சியை அடியோடு ஒடுக்கி விடுவதற்கும் எல்லா ஐரோப்பிய நாடுகளையும் சமமான முறையில் அங்கீகரிக்கப்பட்டு ஒன்று சேர்க்கப்படாவிடின், அமெரிக்க ஐக்கிய நாடுகளும் ஜப்பான் தேசமும் உலக நாகரீகத்தைக் காப்பாற்றிக் கொள்வதில்

தகுந்த விதம் பங்கு பெறுவிடின் எந்த விதமான இராணுவத் திருத்தத்திலும் யாதொரு பலனும் விளையப்போவதில்லை.''

இங்கிலாந்து சம்பந்தமாக ஜெர்மனியின் தேசீயக் கக்ஷியார்களது கருத்து இன்றும் நன்றாக வெளியாகவில்லை. எனினும் ஹெர் ஹிட்லர் அவர்களின் "மீன் காம்ப்'' (Mein kampf) என்னும் புத்தகத்தில் காணப்படும் ஓர் குறிப்பு அக் கக்ஷித் தலைவர்களின் கொள்கையைச் சிறிது விளக்குவதாகும். அதனை "சாட்டர்டே றெவ்யூ'' என்னும் பத்திரிகை (The 'Saturday Review' 20. Dec. 1930. Page 814) விவரிப்பதாவது:— "உலகத்தின் ஓர் வல்லரசாக ஜெர்மனி தேசம் முயற்சிப்பதை இங்கிலாந்து விரும்பவில்லை. ஆனால் பிரான்சு தேசமும் ஜெர்மனி எந்த வழியிலாயினும் வலிமை பெறுவதை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றது. இதிற்றான் மிகவும் முக்கியமான வேற்றுமை யுணர்வு புலப்படுகின்றது. இன்று நாம் உலக வல்லரசின் ஸ்தானத்திற்காகச் சண்டையிடுவதே யில்லை. ஆனால் ஒன்றுபட்டு வாழவும், நமது நாடு நிலை பெற்று வளரவும், நமது மக்களுக்கு அன்றன்று வேண்டும் உணவாதிகளைக் குறைவறப் பெறவுமே சண்டையிடுகிறோம். இந் நிலை, கவனிக்கப் படுமாயின் இங்கிலாந்து இத்தாலி ஆகிய இரண்டு பெரும் ஐரோப்பிய நாடுகளை நமது பலமான பக்கத்துணைகளாகக் கொள்ளலாம். இவற்றிலிருந்து தற்கால ஜெர்மனி பெற்றிருக்கும் ஹிட்லர் அரசாங்கத்தின் நோக்கங்கள் நம்மனோர்களுக்கு ஒருவாறு புலனாகு மென நம்புகிறோம்.

## பிரான்சும் இத்தாலியும்

ஜெர்மனியின் தேர்தல் பலனைக் கேட்ட பிரான்ஸ் தேசமே பெரிதும் கலக்க முற்றது. இதனால் ஜெர்மனியில் காணப் பெற்றுவரும் உள் நாட்டு உரிமையை விட பிரான்ஸில் மிகவும் நெருக்கடியான நிலை ஏற்பட்டு விடக்கூடு மென யெங்கணும் நம்பப்படுகிறது. பிரான்ஸ் தேசத்து அந்நிய மந்திரியாகிய எம். பிரயாண்ட் அவர்கள் முயற்சித்து வரும் ஐரோப்பிய ஐக்கிய நாடுகளின் திட்டம் இனிமேல் காற்றில் பறக்க விட்டு விடப் படுமெனவும் கூறப் படுகிறது. இது பற்றி டிஸம்பர் மாத வெளியீடான "றவுண்ட் டேபிள்'' என்னும் பத்திரிகை



தனது டிசம்பர் இதழில் ('Round Table'' Dec. 1930 Page 8.) எழுதுவதாவது:– "ஜெர்மனியின் ஜனாதிபத்தியத் தேர்தல் அவரது (எம். பிரயாண்ட் அவர்களது) நிலைமையைத் தளர விட்டுவிட்டது. இனி அவர் தனது கொள்கையை மாற்றியே தீரவேண்டும். அடுத்து வரப்போகும் அபாயங்களில் மிகவும் முக்கியமானது இனி நடக்கப் போகும் போர்க் கருவிகள் ஒழிக்கும் மகாநாட்டில் பிரான்ஸின் நிலைமை இப்போதையதைவிட மிகப் பிடிவாதமாகவே யிருக்க நேரிடும்'' எனவே ஜெர்மனியின் சமீப மாற்றத்தினால் பிரான்ஸின் கொள்கையும் திடீரென மாறுபடும் என்பதே பொதுவான கருத்தாகும். சென்ற ஜனவரி மாதம் 10–ம் தேதி வெளியான "சாற்றர்டே றெவியூவில் (The 'Saturday Review' 10th Jan. 1931. Page 41) "ஸார் சார்ல்ஸ் பெட்றீ'' என்பவரும் பிரான்ஸின் நிலைமையைப் பற்றிக் கூறுகையில் எழுதுவதாவது:– "அரசியல் மன்றத்தின் இடது புறக் கக்ஷி நிச்சயமாகவே சமாதானத்தை நாடுவதாகும்; எம். பிரயாண்ட் அவர்களும் வலதுபுறத் தலைவரான எம். டார்டியூ அவர்களது கக்ஷியை விட இடதுபுறக் கக்ஷியைச் சேர்ந்த எம். ஸ்டீக் அவர்களின் மந்திரி சபையிலேதான் அதிகமான பற்றுள்ளங் கொண்டவராவர். ஆனால் ஹெர் ஹிட்லர் அவர்களது துணைவர்கள் எப்பொழுதாவது ஜெர்மனியின் மந்திராலோசனை சபையைக் கைப் பற்றுவார்களாயின் பிரான்ஸ் தேசத்தின் நிலைமை மிகப் பலமாக வலது புறமே சாய்ந்து நிற்கும். அப்பொழுது எம். பிரயாண்ட் அவர்களின் கொள்கைகள் யாவும் அடிபட்டே போகும். இப்பொழுதே இராணுவப் பயிர்ச்சியின் காலத்தை அதிகப் படுத்த வேண்டுமென்ற கூக்குரல் எங்கணும் எழுப்பப் பட்டு விட்டது. என்றாலும் பெர்லின் நகரத்தில் இனிமேலும் நடந்தேறப் போகும் அரசியல் கிளர்ச்சியையிட்டே பிரான்ஸ் தேசத்தின் எதிர்கால நிலையும் முற்றிலும் பொறுத்து நிற்குமென்று சொல்வது மிகையாகாது.''

தற்பொழுது இத்தாலியின் நிலைமை நன்கு புலனாகவில்லை. அத்தேசத்தின் உண்மையான பொருளாதார நிலை குறித்தோ, அன்றி அந்நாட்டு முஸோலினியின் எதேச்சாதிக்கார அரசியலில் பொது மக்கள் கொண்டிருக்கும் கருத்தையிட்டோ, அல்லது அதன் நிச்சயமான

எதிர்கால திட்டங்களைப் பற்றியோ ஒருவராலும் ஒன்றுமே சரிவரக் கூறவியலாது. எவ்விதமாயினும் வல்லமை பொருந்திய போர்ப்படையை வைத்திருக்கும் இத்தாலி தேசம் ஓர் தனி மனிதனின் ஏதேச்சாதிகாரத்தின் கீழ் தனது கொள்கைகளைப் பலவிதமான ஆபத்துக்களையும் பொருட்படுத்தாது ஏற்றுக் கொள்வது உலக சமாதானத்திற்கு எப்பொழும் துணை செய்யா தென்பதுறுதி. தவிர இத்தாலி தேசம் சென்ற லண்டன் கப்பற் படை மகாநாட்டில் பிரான்ஸிற்கு ஒப்பான படை பலம் வேண்டுமெனத் தீவிரமாக நின்றதால் பிரான்ஸிற்கும் இத்தாலிக்கும் ஒருவிதமான முடிவிற்கும் வரக் கூடாமல் மகாநாடே முறிந்து போயிற்று. இன்று வரையும் அவ் விரண்டு தேசங்களின் படை பலத்திட்டம் முடிவு செய்யப் படாமல் இத்தாலி, பிரான்ஸ் தேசத்தின் பேரில் நம்பிக்கையின்றி தனது படை பலத்தைச் சீர்படுத்துவதற்கான ஏற்பாடுகளில் கண்ணுங் கருத்துமாயிருந்து வருகிறது.

## சிற்றரசர்களின் சிநேக பான்மை

பிரான்ஸ் தேசத்தின் துணையாக விருந்துவரும் போலந்து தேசம், ருஷிய ஜெர்மனிய தேசங்களின் அச்சுறுத்துதல்களுக்குள்ளாகி தனது பாதுகாப்பு விஷயமாக மிகக் கவனம் செலுத்தி வருகின்றது. போலந்தின் எல்லைப் பிரதேசங்களைக் கைப்பற்ற வேண்டிய அவசியத்தையிட்டும் ஹிட்லர் கக்ஷியார்கள் கங்கணங் கட்டிவருகின்றனர். இந்நிலைமையில் போலந்தின் உள் நாட்டு நிலைமையும் சமாதானமின்றி கலக்கத்துண்டு பண்ணிக் கொண்டே யிருக்கிறது. அதன் துணை நாடாகிய பிரான்சு தேசமும் இந்நிலை கண்டும் இத்தாலியின் பகைமையையெண்ணியும் நிலை தடுமாறி நிற்கின்றது. அத்துடன் பிரான்சு தேசத்தின் பிறிதொரு துணை நாடாகிய யூகோஸ்லேவியா (Yugoslavia) விடமும் இத்தாலி பகைமை கொண்டிருப்பதால் அபாயம் பல வழிகளிலும் ஏற்படக் கூடுமென எதிர் பார்க்கப் படுகிறது.

டானியூப் நதிப் பிரதேசங்களைச் சேர்ந்த இதர நாடுகளில் விவசாயச் சீர்குலைவும், பணக் கஷ்டமும், பொது மக்களுக்கு அரசாங்க விஷயங்களில் நம்பிக்கைக் குறைவும் நாட்டின் பிரதான அம்சங்களாகத் தற்போது விளங்குகின்றன. இவற்றில் பல்கேரியா, ருமேனியா,



ஹங்கேரி ஆகியநாடுகள் அடைந்திருக்கும் நிலைமை மிகவும் பயங்கரமானது. "போரிஸ் அரசரது விவாக சம்பந்தத்தின் பயனால் இத்தாலி பல்கேரியா வுடனும் ஹங்கேரியாவுடனும் நட்புப் பாராட்டி வருகிறது. ருமேனியாவுக்கும் ஹங்கேரியாவுக்கும் ஏற்கனவே வளர்ந்து கொண்டிருக்கும் நட்பும் இத்தாலிக்குத் துணை செய்யுமெனவும் நம்பப்படுகிறது.

பால்கன் நாடுகளும் துருக்கி தேசமும் ஒன்றுசேர்ந்து "ஆதன்ஸ்" (Athens) நகரத்தில் கூடிய மகா நாட்டின் பலனால், ஒரு காலத்தில் மிகுந்த இக் கட்டுகளுக்குள்ளாயிருந்த இந் நாடுகள் யாவும் ஒற்றுமைப் பட யேதுவானது, ஐரோப்பிய நாடுகளின் தற்கால நிலைமையைப் பொறுத்தவளவில் ஓர் நற்குறியே யாகும். இதில் மிகவும் முக்கியமாக நெடுங்காலந் தொட்டுப் பகைவர்களா யிருந்து வந்த கிரீசும் துருக்கியும் தமது உறவைப் பலப்படுத்துவான் வேண்டித் தம்மில் ஓர் உடன்படிக்கையைச் செய்து கொண்டதும் அறியத் தக்கது.

சிறிது மேல் நோக்கி நாம் செல்லும்போது உள் நாட்டு நிலைகளைச் சரிபடுத்த யியலாது தவிக்கும் ஆஸ்திரியா தேசமும் ஒரு பக்கம் கலக்கத்தை யளிப்பதாகத் தெரிகிறது. சென்ற மகா யுத்தத்தின் சமாதான உடன்படிக்கையின்படி ஆஸ்திரியா தேசமே பெரும் சேதத்தை ஏற்றுக்கொண்டது. தன்து நாட்டின் மூன்றில் இரண்டு பாகத்தையும் 30 லக்ஷம் ஹங்கேரியா மக்களையும் இழந்து இப்பொழுது மிகச் சிறிய தேசமாக விளங்குகிறது, என்றாலும் சமீப காலத்தில் அத் தேசம் சகலவிதத் துறைகளிலும் முன்னேற்றமடைந்து பொருளாதார நிலைமையை ஒரு விதம் சரிப்படுத்தி விட்டாலும் அரசாங்க முறையை அனுசரியாத இரண்டுவித இராணுவக் கூட்டத்தார்களால் உள் நாட்டில் அபாயம் விளையுமோ வெனக் கருதப்பட்டு வருகிறது. எவ்விதமாயினும் இத்தாலி ஆஸ்திரியா சம்பந்தம் ஆஸ்திரேயாவின் அந்நிய நாட்டு மந்திரியான டாக்டர் "ஷோபர்" (Dr. Schober) ரோமாபுரியில் சமீபத்தில் முஸோலினியோடு செய்து கொண்ட உடன்படிக்கையினால் முன்னிருந்ததைவிட அதிகமான நட்புப் பாராட்டும் நிலைமையை எய்தி யிருக்கிறது.

## முடிவு என்னகும்?

எனவே தற்போது ஐரோப்பிய நாடுகள் யாவும் ஒன்றை யொன்று சார்ந்து நிற்பது நன்கு புலனாகின்றது. இதனால் கருத்து வேற்றுமையை வளர்க்கும் நாடுகளின் இரு பெரும் வகுப்புக்கள் தோற்றுவிக்குமென்பது கூறாமலே விளங்கும். சமாதான வுடன்படிக்கையில் திருப்தியடையாத ஜெர்மனி, இத்தாலி, ஹங்கேரி, ரொமேனியா, பல்கேரியா, ஆஸ்திரேயா, துருக்கி ஆகியவைகள் ஒரு கூட்டமும் பாரிஸ் உடன்படிக்கையை மாற்றுவதற்குச் சிறிதேனும் மனமில்லாத பிரான்சு, போலந்து, யூகோஸ்லேவியா ஆகியவைகள் மற்றொரு கூட்டமாகவும் பிளவு பட்டு நிற்பது கண்கூடு. இதுவரை உலகமெங்கும் நடுக்கத்தை யுண்டுபண்ணி வரும் ருஷியாவைப் பற்றி நாம் ஒன்றுமே கூறவில்லை. ருஷியாவும் இந் நாடுகளின் வேற்றுமை உணர்ச்சிகளில் பங்கு பெறாதென்று சொல்ல இயலாது. இதுபற்றி 'நைன்டீந்த் செஞ்சுறி' என்னும் பத்திரிகை (The Nineteenth Century. Nov. 1930. Page 588.) கூறுவதாவது:—

"ருஷியா தேசம் தற்போதைய நிலைமையில் சமீபத்திலோ அல்லது சற்று பின்னாலோ உலகத்திலேயே சிறந்ததோர் வல்லரசாக விளங்கிவிடும் என்று சொல்வதில் நாம் கண்மூடித்தனமாக இருக்க முடியாது. அந் நாட்டின் நெருக்கடியான நிலைமையும் இக் கூட்டத்தில் தகுந்ததோர் வலிமை பெற்று நிற்கும். போலந்து தகராறுகளை யிட்டு ஜெர்மனியும் ருஷியாவும் தகுந்ததோர் சமாதானத்தை அடைவதற்கான அறிகுறிகள் இப்பொழுதே காணப்பட்டு வருகின்றன. எனவே ...தான உடன்படிக்கையை மாற்றி யமைக்கும் பொருட்டாக ஏற்கெனவே திருப்தி இல்லாதிருக்கும் இந் நாடுகளை ருஷியா வற்புறுத்தவும் கூடுமென அரசியல் ஞானிகளுக் கிடையில் நம்பிக்கை பிறந்து வருகிறது."

இவ்வாறு மிகச் சுருக்கமாக விவரிக்கப்பட்டிருக்கும் இந் நாடுகளின் நிலைமைகளி லிருந்து ஒரு பொதுவான முடிவுக்கு நாம் வரக் கூடும். தற்கால நிலையில் ஐரோப்பாவிலுள்ள வல்லரசுகளும் சிற்றரசுகளும் ஒன்றோடொன்று செய்து கொண்ட தனிப்பட்ட உறவுகளிலேயே தமது உள் நாட்டு வெளி நாட்டு விஷயங்களைப் பாதுகாத்து வருகின்றன. பல நாடுகள் சர்வ தேச சங்கத்தின் நிபந்தனைகளுக்கும் பாரிஸ் உடன்படிக்கைகளுக்கும் கட்டுப்பட்டிருக்கின்றன. வேறு சில நாடுகளோ அந் நிபந்தனைகளைப் பேரளவில் கைக்கொண்டு தம் தம் மட்டில் சில சிற்றரசுகளோடு தனிப்பட்ட உடன்படிக்கைகள் செய்து உறவு கொண்டாடி வருகின்றன. இத்தகையதான இருவிதப் பிரிவினையில் எப்போதாவது இரண்டு நாடுகளுக்குள் தகராறுகள் ஏற்படுமாயின் புதிதான கூட்டுறவு கொண்டாடி வரும் இந் நாடுகளின் கூட்டங்கள் எந்த நிபந்தனைகளின்படி நடந்து கொள்ளுமென்பதே நமது சந்தேகமாகும். இந் நிலையில் இரு பெருங் கூட்டங்களாகப் பிரிவு பட்டு நிற்கும் ஐரோப்பிய நாடுகள் பெரும்பாலும் தன் தன் பாதுகாப்பிற்குத் தனது கூட்டத்தையே முற்றிலும் நம்பி யிருக்க நேரிடுமாதலால், பகைமையும் போட்டியும் பலமாக வளர்வதற்கு ஏதுவாகி போர்க் கருவிகளின் பெருக்கமும் அபாயத்தின் நெருக்கமும் அதிகப்பட்டு, ஐரோப்பிய நாடுகள் யாவும் திரும்பவும் ஓர் பயங்கரமான மகா யுத்தத்திற் குள்ளாகி உலக தேசங்களும் அதனின்று தப்பி விடுவதற்கு மார்க்கமின்றி யாவும் ஒன்றுபோல இரத்தப் பிரவாகத்தில் மூழ்கி அழிந்து விடும் காலம் சமீபித்து விடுமென நாம் சந்தேகமற எண்ணக்கூடும்.

---

# ஏல விவசாயிகளுக்கோர் எச்சரிக்கை.

ரா. சுப்ரமண்யம்.

THE REGISTR...
'14 MAR 1931
MADRAS

தமிழ் நாட்டிலே வாசனைப் பொருள்களில் பிரதானமான ஏலம் என்ற பரிமளச் சரக்கை விளைவித்து வருபவர்களில், மதுரை ஜில்லாவில் பெரியகுளம் தாலுகாவின் மேற்கு மலையின் கீழ்ப் பாங்கரிலுள்ள சில கிராமவாசிகளே பிரதானமானவர்கள்.

இவர்களால் திருவாங்கூர் சமஸ்தானத்திற்குச் சொந்தமான மலையிலும் பிரிட்டிஷாருக்கும் சில ஜமீன்களுக்கும் சொந்தமான அடிவாரத்திற்கு மேலுள்ள மரங்களடர்ந்த உன்னதமான பிரதேசங்களிலும் ஏலத்தை விளைவிக்கப்படுகிறது. இப் பக்கங்களன்றி ஆனைமலை, கொடைக்கானல் மலை, மைசூர், குடகு, இலங்கை, ஜாவா, சுமத்திரா, கீழ் திசைத் தீவுகள் (Eastern Archipelago), மடகஸ்கார், மேற்கு ஆப்பிரிக்கா முதலிய விடங்களிலும் பயிர் செய்யப்படுகின்றது. என்றாலும் திருவாங்கூர் மலையில் விளையும் ஏலத்திற்கு இவை யொன்றும் குணத்திலும் மதிப்பிலும் ஈடாகாது. உலகத்திலேயே சிறந்ததாகக் கருதப்பட்டு வருகிறது. இவ்விதம் மிகவும் உலகோரால் மதிக்கத் தகும் ஓர் ஒப்பற்ற பொருளை விளைவிக்கும் விவசாயிகளின் எண்ணிக்கையும் அதிக மில்லை யென்பதையும், கூடியது 2500 முதல் 3000 பேர்களே இங்கு ஏல விவசாயிகளா யிருக்கின்றார்களென்பதையும் அறிவது அவஸ்யமாகும்.

ஏல விவசாயிகளிற் சிலர் நமது "பாரதி"யின் போஷகர்களென்பதையும் பலர் மிதமிஞ்சிய அபிமானிகளென்பதையும் நாமும் ஓர் ஏல விவசாயி என்பதையும் கருத்திற் கொள்ள வேண்டுகின்றோம். தேசியப் பத்திரிகையாகிய "பாரதி"யில், ஏல விவசாயிகளுக்கு இடங் கொடுப்பது பற்றி ஒரு சாரார் தவறாக நினைக்கக் கூடுமென்பதற்காகவே நிலைமையை விவரிக்க நேர்ந்தது. "பாரதி"யின் போஷகர்களில் மட்டும் 15 கனவான்கள் ஏல விவசாயிகளா யிருந்தால், அவர்களின் நாட்டுப் பற்றும், தயாள சிந்தையும், பத்திரிகாபிமானமும் நன்கு அறியக் கிடக்கின்றதன்றோ! மேலும் "பாரதி"யின் வளர்ச்சி பெரும்பாலும் ஏல விவசாயக் கனவான்களையே சார்ந்திருக்கின்றதென்றே சொல்லல் வேண்டும். நாளுக்கு நாள் போஷகராகவும் அபிமானிகளாகவும் முன் வந்துகொண்டிருப்பதொன்றே இதற்குச் சான்றாகும். இவ்வாறாக, நாம் ஏல விவசாயிகளுக்காகப் "பாரதி"யில் இடங் கொடுப்பதுவும் அவர்கள் அபிவிருத்தி கருதி தொண்டாற்றுவதும் குற்றமாகக் கருதாது, அதுவும் தேசத்தொண்டே யென மதிக்கக்கூடுமெனவே யெண்ணி மேற் செல்கின்றோம்.



ஏல விவசாயக் கனவான்களே,

ஏலத்தின் விலை தற்போது மிக மிகக் குறைந்து விட்டதினால், நம்மனோரின் கஷ்ட நிலைமையைப் பற்றிச் சொல்லிக் கொள்ள வேண்டிய அவஸ்யமே யில்லை. இதுபோது ஏல விவசாயிகளில் பெரும் பணக்காரர் முதல் சாதாரண ஏழை ஈறாகப் பணக் கஷ்டத்தில் தத்தளித்து நிலை கலங்கித் தடுமாறி யிருப்பது அனுபவ சித்தாந்தமாக ஒவ்வொருவரும் கண்ட உண்மையாகும்.

ஓர் காலத்தில் நாமனைவரும் விளைவையே பிரதானமாகக் கருதி வந்தோம். அவ் வமயம் நமது போக்குக்குத் தடையின்றி; விலையும் குறைவின்றி, தேவையும் அதிகரித்திருந்தது. உலகில் நாகரீகம் பெருகப் பெருக எல்லாவற்றிலும் மாற்றமே தோன்றி வருவதால், விளைவை மட்டும் கருதிக்கொண் டிருப்பது சாத்தியமில்லை யென்பதை யுணர்ந்து கொள்ள வேண்டிய கட்டாய நிலைமையை யடைய நேரிட்டதென்பதை நன்கு அறியக் கூடும். நாளுக்கு நாள் உலகில் புதுப் புது மாறுபாடு தோன்றி நம்மையும் அதில் சம்பந்தப் படும்படி செய்தது நமக்குப் பெரும் இலாபமே யென்பதை இன்னும் பலருணராதிருப்பதற்கே வருந்த வேண்டியிருக்கின்றது. காலத்திற் கேற்ற விதம் மாற்றமடைவதில் நஷ்டமின்றி இலாபமே சம்பவிப்பதைக் கூட, அறியாமையால் ஒதுக்கின் அஃது நமது குற்றமே யன்றிப் பிறிதொன்றாலல்ல வென்பதை உணரும்போதே, எதிர் பார்க்கும் க்ஷேமமடைய முடியுமெனச் சிந்தையில் பதியவைத்துக் கொள்வது அவஸ்யமாம்.

பயங்கரமான கொடிய மிருகங்களும் விஷ ஜெந்துக்களும் நிறைந்த மலையில் அரும் பாடுபட்டு விளைவு விளைவித்த ஏலத்தைச் சென்ற 10, 15 வருடங்களுக்கு முன்னர் எம் முறையில் விற்று வந்தோமென்பதை இதற்குள் மறந்துவிட முடியாது. கொடிய பல கஷ்டங்களுக்கும் துன்பங்களுக்கும் இலக்காகி ஏல விவசாயமே அழிந்து ஒழிந்து போகுமென மதிக்கத் தகுந் தறுவாயில், ஞானோதயம் உண்டாகி துன்பத்தையும் கஷ்ட நஷ்டங்களையும் நீக்க நம்மில் பல பெரியார்கள் ஒருங்கு கூடி முயன்றிராவிட்டால்,

நிலைமை யின்று எவ்வளவு கேவலமானதாக மாற்றமடைந்திருக்கும்! ஐரோப்பா யுத்தத்தின் போது, நாம் பட்ட சிறுமை இன்றும் நம்மைப் பயங்கொள்ளச் செய்கிறதா யிருக்கின்றது. இவ்வித பயங்கர நிலைமை யெல்லாம் பின் வரும் நன்மையின் அறிகுறி யென்பதை நாமப்போது நன்கு தெரிந்துகொள்ளச் சக்தி யற்றவர்களாக விருந்தோம். துன்பம் தோன்றத் தோன்ற இன்பத்திற்கும் வழியுண்டாகிக் கொண்டே யிருக்கு மாகையினால், அதனை யடைய வேண்டியவர்களாகவே நின்றோம். பின்பு, நமது எண்ணங்கள் உருப்பெற்று வளர்ந்து விரிந்து பலன் தரவும் ஆரம்பமானதைக் கவனிப்போம்.

உலகில் பெரும்பாலான விவசாயிகளும் வியாபாரிகளும் எவ்வெம் முறையில் தங்கள் தங்கள் விளை பொருள்களையும் வியாபாரத்தையும் திறம்பட நடத்தி இலாபமும் க்ஷேமமும் பெறுகிறார்களோ, அதனைப் பின் பற்றினாலன்றி நமக்குக் கதி மோக்ஷ மில்லை யென்று கண்ட ஏல விவசாயப் பெரியார்கள், ஒற்றுமையில் விருப்புற்று, நமக்கு மிகப் புதுமையான நலந் தரும் ஸ்தாபனமொன்றை நிறுவி, அதற்குத் திருவாங்கூர் ஏல விவசாயிகளின் சங்கம் என்று பெயர் சூட்டி, அதன் கீழ் கிளைச் சங்கங்களையும் கண்டு, யாவரும் ஓர் முகமாகச் சாதகமும் சந்தோஷமு மடையச் செய்ததை யாரே மறக்க முடியும். இச் சங்கங்கள் ஸ்தாபித்து செம்முறையில் வேலை நடந்தேறி வந்ததினாலேயே விலையும் நாளுக்கு நாள் உயரவும், விவசாயிகளின் கஷ்டங்கள் தினத்திற்குத் தினம் மிகுதியாகக் குறையவும் நேர்ந்த தென்பது இன்றும் ஒவ்வொருவர் மனத்திலும் நன்கு பதிந்திருக்கின்ற தென்பதிற் சந்தேகமில்லை. அக்காலை சங்கத்தைப் பற்றி யெண்ணும் போதெல்லாம் ஒவ்வொருவரும் காரணமின்றிக் கூட ஆனந்த முறுபவரா யிருந்தா ரென்பதில் அதிசயமொன்று மில்லை. அளவுக்கு மிஞ்சிய பணக் கஷ்டத்தால் வாடி வதங்கி மிக நொந்து வாழ்வில் வெறுப்புற்றிருக்கும் சமயத்தில், சமய சஞ்சீவி போன்று தங்கள் துன்பமனைத்தும் ஒழிய—தங்கள் வாழ்வு பெரு வாழ்வாகிப் பெருகிப் போராறுதலை நல்க, சங்கம் காரணமா யிருப்பதால் அதனைப் போற்



றியும் வளர்த்தும் வரவேண்டியது ஏல விவசாயிகள் ஒவ்வொருவரின் தனிக் கடமையாக விருந்தது. அன்று சங்கமே ஏல விவசாயிகளின் உயிராயிருந்த தென்றால் போதுமானதாகும்.

ஏல விவசாயிகளின் சங்கம் வளர்பிறை யொப்ப வளர்ந்து வரவே, ஜாதி மத வித்தியாசமின்றி கற்றார் மற்றார் ஏறத் தாழ்வின்றி ஏழை செல்வர் மனக் கசப்பின்றி சமத்வமாகவும் சகோதரத்வமாகவும், கொண்ட கொள்கையில் சுதந்திரப் புத்தியுடனும் நடந்து, சங்கத்திற்கு மிகப் பொருத்தமான அங்கத்தினர்களென மதிக்கத் தக்கவர்களாயும், சிலவாண்டில் பெரும் தந்திரிகளாயும் அரும் நிர்மாணிகளாயும் சங்கத்தை அலங்கரித்துத் தொண்டாற்றி வந்ததால், தமிழ் நாட்டின் கவனம் இங்குச் சென்றதில் ஆச்சரியமுற வேண்டியதில்லை.

தமிழ் நாட்டிலே அதுவும் தமிழர்களில் ஒரு சிலர் கூடி பெரும் ஸ்தானத்தை ஸ்தாபித்து பெருமிதமாக இலாபமும் க்ஷேமமும் பெறுவதென்றால் யாருக்குத்தான் மகிழ்ச்சி யிருக்கா திருக்க முடியும்?

சங்கம் ஸ்தாபிதமான காலமுதல் அதன் போக்கையும், அதற்காக உழைக்கும் தயாள சிந்தை படைத்தோரையும், மாதவாரியாக சங்கத்தின் கூட்ட நடைமுறைகளையும், ஒற்றுமையுடன் சாதிக்கும் காரியங்களையும் கவனித்து வந்தவர்களுக்கே அதன் உயர்வும் இயல்பும் அறியமுடியு மென்றாலும், ஏல விவசாயிகளானோரனைவருக்கும் நன்கு தெரிய முடிந்ததே யாகும். பூரண சுதந்திரமாகக் குடியரசு நடாத்தும் தேசம், எல்லா இயல்புகளையும் நலன்களையும் பெற்றிருந்தது போன்றே, திருவாங்கூர் ஏல விவசாயிகளின் சங்கமும் தன்னளவில் க்ஷேமமும் பிறவும் பெற்றுத் தனியாகப் பிரகாசித்துக் கொண்டிருந்த தெனச் சொல்வது மிகப் பொருத்தமாகும்.

இவ்வாறு நாட்டுக்கே ஓர் உதாரணமாக—ஐந்தாண்டு செவ்வனே நடைபெற்று க்ஷேமத்தையும் இலாபத்தையுமே ஒருங்கே கொடுத்து விளங்கிய சங்கமானது, தமிழ் நாட்டின் துரதிர்ஷ்டத்தாலோ, தமிழர்களின் தனிச் சுதந்திர வேட்கையாலோ, ஏல

விவசாயிகளின் பாக்கியக் குறைவாலோ, தங்களுக்குள் நம்பகமிழந்த தோஷத்தாலோ, நாளுக்கு நாள், தனது கௌரவத்தை இழக்கவும் சீர் குலையவும் மறைந் தொழியவு மாயினதை நினைக்கும்போது வருந்தா திருக்கக் கூடவில்லை. இன்று ஏல விவசாயிகள் படும் அல்லல்கட் கெல்லாம் சங்கம் உருக்குலைந்ததே காரணமென்று கூசாமற் கூறலாம். ஒற்றுமை குறையவும் மனக்கசப்பு நிறையவும் விரோத உணர்ச்சி பெருகவு மானால், இன்னும் எத்தனை வருடங்களுக்குத்தான் ஏலம் தன்னுயர்வை இழக்கா திருக்கும்? எல்லாம் ஒற்றுமையினாற்றா னிருக்கின்ற தென்பதைத் தெரியாததிற்கு யாரை நோவது! ஏலத்தை விளைவிப்போரின் நிலை தினந் தினம் க்ஷீணதிசை யடைந்துவர ஏலத்தின் மதிப்பு மட்டும் மங்காதிருந்துவர முடியுமோ?

“தமிழர் காணாத ஒற்றுமையையே ஏல விவசாயிகள் அடைந்திருக்கிறார்கள். சங்கத்தால் பெரும் பயன் மிகப் பெற்றுத் தங்கள் தாழ்வுகளை யெல்லாம் சம்பூரணமாக நீக்கிவிட்டார்கள். அவர்கள் செயலால்—போக்கால்—க்ஷேமத்தால் நாட்டுக்கு நற்பெயரும் பெருங் கௌரவமும் கிடைப்பதா யிருக்கின்றது” தென்று சொல்லிய பெரியார்களின் சொல்லெல்லாம் இன்று எங்கே? “ஓர் சின்னஞ் சிறு கூட்டத்தார்; பிறர் உதவி கருதாது, சகோதரத்துவத்துடன் க்ஷேமத்திற்காகவே பாடு படுகிறார்கள். அவர்களுக்காகவே தனியாக ஓர் மாஸிகையையும் நடத்தி உண்மையான ஒற்றுமையைப் பலப்படுத்தி எந்நாளும்கூடி க்ஷேமமாக வாழ முனைந்திருக்கின்றார்கள். அந்த ‘ஏல விவசாயி’ என்ற மாஸிகை ஒவ்வொரு ஏல விவசாயியின் கரத்தே மிளிர்ந்து, தனது பிரதான நோக்கத்தைப் பலப்படுத்தி வருவதா யிருக்கின்றது” தென்று, அன்று கண்டு சொல்லிய அறிஞர்கள் வாக்குக ளெல்லாம் எங்கே? மறைந்தனவோ! ஒழிந்தனவோ!! அந்தோ!!! பரிதாபம்!!!! பரிதாபம்!!!!!

சில வருடங்களில் ஏல விவசாயிகள் பெருங் கஷ்டங்களடைய நேரிட்டுவிட்டது. கஷ்டங்களெல்லாம் தங்களுக்காகவே படைக்கப்பட்டனவோ என வெண்ணும் நிலைமைக்குக் கூட இவர்கள் வந்துவிட்டார்க ளென்றே சொல்லவேண்டும். ஆனால், [illegible]



யெல்லாம் என் வந்தது? எதற்காக வரவேண்டும்? என்பதை மட்டும் எண்ணுவதில்லை. சிலர் எண்ணினும் அதனைப் பரிகரிக்க முயலுவதில்லை. சலன சித்தமே குடி கொண்டவர்களாக விருக்க நேர்ந்துவிட்டது. எவ்வாறிருப்பினும், ஒன்று மட்டும் இவ் வமயம் கவனிக்க வேண்டியது அவஸ்யமும் அவசரமு மாகும்.

ஏல விவசாயிகள் கஷ்டப்படுவதற்கு, சரக்கின் விலை குறைவுதான் காரணமெனப் பலர் எண்ணி யிருக்கின்றனர். இது பெருந் தவறென்பதை நன்கு அறிந்தாலன்றி ஒற்றுமைக்கு வழியில்லை. ஓர் காலம் விலை குறையலாம். பின்னொரு காலம் விலை யேறலாம். இது சகஜம். தற்போது உலகில் எங்கும் விளை பொருள்கள் அபரிமிதமாக விளைந்து மலையெனக் குவிந்து எல்லா வியாபாரத்தையும் ஸ்தம்பிக்கச் செய்து விட்டதினால் தான் ஏலமும் விலை மிகக் குறைய நேர்ந்தது. பணப் பழக்கம் குறையவே யாவும் சீர்குலைய வேண்டியதுதானே. என்றாலும் புத்திசாலித்தனமாகவும் நிதானத்துடனும் நடந்து கொண்டவர்கள் ஒருவாறு இக் கஷ்டங்களுக்கு இலக்காகாதே நிற்கிறார்க ளென்று நிச்சயமாகக் கூறலாம். இம் முறையைப் பின்பற்றிப் பயனடைய நாம் ஏன் முயலக்கூடாது? நிற்க.

நாளுக்கு நாள் ஏலத்தின் விளைவும் குறைந்து வருகின்றது. காரணம் பலவாறாகக் கூறுவர். எதுவாகிலும் அதனைக் கண்டு நீக்கப் பிரயாசைப்பட வேண்டியது அவஸ்யமாகும். இதுவன்றி புதிய ஆபத்துக்களும் சமீபத்தில் ஏல விவசாயிகளைப் பற்றுவதா யிருக்கின்றதற்கே மிகுதியும் அச்சப்பட வேண்டி யிருக்கின்றது. அதனை ஏல விவசாயிக ளனைவரும் சேர்ந்து எதிர்த்து நீக்க முயன்றாலன்றிச் சாத்தியமாகக் கூடியதா யில்லை யென்பதை அறிவது மிக மிக உசிதமாகும்.

பிரிட்டிஷ் பிரதேசத்தி லிருக்கும் நாம், திருவாங்கூர் சமஸ்தானத்தில் வரும்படியை யடைந்து வருவதைப் பற்றி, அச் சமஸ்தானத்தின் பிரதான அதிகாரிகள் மனதில் புதிய ஆசை யுண்டாகி மலையிலிருந் திறக்குமதியாகும் ஏலத்தின் அளவை யெல்லாம் கணக்

கெடுத்துக்கொண்டிருக்கிறதாகத் தெரிகிறது. இந்த 4, 5 வருடங்களாக இவ்விதம் கணக்கெடுத்து வருகிறார்களென்றே அறிகிறோம். இதனால், மிக நொந்து கஷ்டப்படும் நிலைமையிலுள்ள ஏல விவசாயிகள் என்ன நினைப்பதற்கிருக்கிறதென்பதைச் சொல்லவும் வேண்டுமோ! திருவாங்கூர் சர்க்கார், ஏலத்தைக் கணக்கெடுக்கும் செயலால் ஏதேனும் புதிய (இறக்குமதிக்காக) வரி விதிக்கப்படலாமெனவே பெரும்பாலோர் நினைப்பில் தோன்றி வருத்தி வருகின்றது. இப்பொழுதோ, ஏலத்திற்குப் பிரிட்டிஷ் இந்தியாவில் வருமான வரி கணக்கின்றிக் கொடுத்துவரவும் வேண்டியிருக்கின்றது. இத்துடன் அச் சர்க்கார் வரியும் சேர்ந்தால் சொல்ல வேண்டியதேயில்லை. புண்ணில் கோல் கொண்டு கிளரியதொப்பவேயிருக்குமென்று சொல்வது தவறாகாது.

புண்ணியவான் திவான் V. P. மாதவராவ் அவர்களால் ஏல விவசாயிகளுக்குச் செய்த ஒப்பற்ற உதவி என்றும் மறக்க முடியாததாகும். தங்கள் உடல் பொருள் ஆவி யனைத்தையும் ஈந்து ஏலத் தோட்டமே கதியென விருந்தபோதுங்கூட, க்ஷேமத்திற்கு வழியில்லாது அக்காலத் திட்டப்படி ஏக்கர் 1-க்கு $6\frac{1}{4}$ ரூ. தீர்வை கொடுக்க இயலாது வருந்தியவரின் தொகை யனந்தம். எத்தனை பேர் அரும் பாடுபட்டுத், தங்கள் உடைமையை யெல்லாம் மலையில் கொட்டி, மேலும் மேலும் கிஸ்தி கட்டுவதற்குச் சக்தியற்றவர்களாக—அக்கால வரும்படியும் மிக மோசமானதாக விருந்ததினால், தம் தம் தோட்டங்களில் நூற்றுக் கணக்கான ஏக்கரை விட்டுவிட்டுத், தப்பியது சிலாக்கியமென விலக நேர்ந்தது நம்மனோர் அறிந்த விஷயமேயாகும். ஏல விவசாயிகளின் கஷ்டங்களையும், அவர்களின் உழைப்பையும், போக்கையும், ராஜாங்க விசுவாசத்தையு மறிந்த மேற்கண்ட திவான்ஜி அவர்கள் ஏக்கர் வீதம் பூரண சகாயம் செய்ததுபற்றி அவரை அக்கால முதல் நாளிதுவரை—என்றும் போற்றாமல் ஏல விவசாயிகளால் இருக்க முடியாது. இன்றிருக்கும் ஏலத் தோட்டங்கள் அவராலேயே அளிக்கப்பட்டதென்றே ஓரே வார்த்தையில் சுருங்கச் சொல்லிவிடுவதே பொருத்தமாகுமென்பதை யாவரும் ஒப்புக்கொள்வர்.



திவான் மாதவராவ் அவர்களால் விதிக்கப்பெற்ற சாதகமான தீர்வைக்குச் சமீபத்தில் காலாவதியாகப் போகின்றதென்பதைப் பலர் அறியார். இன்னும் 4 வருடங்களில் ரீ-செட்டில்மெண்டு நடந்தேற வேண்டியிருக்கிறது. அது சமயம் நிலைமை என்னவாகுமென்று சொல்வதற்கில்லை. எதற்கும் தனி பலமிருந்தால் ஐயங்கொள்ள வேண்டிய அவஸ்யமில்லை. ஒருவர் கருணையாகவிருக்கலாம், ஒருவர் கடுமையாக நடக்கலாம். எல்லாவற்றிற்கும் சட்டம் இடங்கொடுப்பதாகவே இருக்கிறதென்பதை நடைமுறைகளைக் கவனித்து வந்தோர் அறிவர். ஆகையினால் இவ்வெச்சரிக்கையை ஏல விவசாயிகள் சாமான்யமானதெனக் கருதிவிடக்கூடாதெனவே வேண்டிக் கொள்ளுகின்றோம்.

சங்கம் கலைந்த பின்னர் ஏல விவசாயிகளை ஒன்றன்பின்னொன்றாகக் கஷ்டங்கள் பற்றி வருகின்றன. அதனை அறிந்து சுத்திகரிக்கத் தற்போதிருந்தே முந்தாவிடில், நாட் பல கடந்தால் பேராபத்தாகவே முடியுமென எச்சரிக்காதிருக்க முடியவில்லை.

ஏல விவசாயிகளில் பலவித கருத்துக் கொண்டோர் முன்பிருந்ததாகவே மதிக்க வேண்டும். விரோத குரோத மிருப்பினும் சமுகப் பெரு வாழ்வு கோரி, யாவற்றையும் துறந்துவிட வேண்டிய தவஸ்யமாகும். ஏல விவசாயிகள் யாவரும் ஓர் வீட்டினர் போன்று ஒருங்கு சேர்ந்து, வருங்காலத் துன்பத்தை நீக்க முயன்றாலன்றி சாத்தியமாகக் கூடியதாயில்லை. காலத்திற் கேற்ற மாற்றத்தைப் பெறுவதே—கொள்வதே சாலச் சிறந்ததும் முறையுமாகும். இன்னும் கவலையீனமாக இருந்தால், அஃது நமது கஷ்டத்தையும் ஏலத்தின் நாசத்தையுமே குறித்து நிற்கும்.

இனியொரு சந்தர்ப்பம் வாய்ப்பதரிது. பொன் போன்ற சமயமாகு மிதனைப் பயன்படுத்திக் கொள்வதே அறிவுடைச் செயலாம். ஏல விவசாயிகளனைவரும் ஒருங்கு கூடுங்கள். மனம் விட்டுத் தங்கள் தங்கள் கலக்கத்தைத் தீர்த்து முன் மாதிரியாக தீரத்துடனும் உற்சாகத்துடனும் ஓர் நல் வழியைக் கண்டு பிடித்து ஸ்தாபிதம் செய்யுங்கள். மறைந்தவைகளை யனைத்தையும் புதுப்

பித்து உயிர்ப்பித்து இடையூருக நிற்கு மனைத்தையும் அடியுடன் அழிக்க முன் வாருங்கள். தாராளப் போக்கும் விசால எண்ணமும் கொண்டு யார் பதவி வகிக்கினும், யார் சிரமமுறினும் ஒவ்வொரு ஏல விவசாயியும் தானனுபவிப்பதாகவே பாவிக்கும் பெருந் தன்மை யான குணத்தால்தான் இன்று க்ஷேமத்தின் நிலைமையைப் பெற முடியுமென்பதை நன்கு ஞாபகத்தில் வைத்து, ஒற்றுமை யடைய வும், நல்வழி காணவும், சங்கம் நிறுவவும், பயன் மிகப் பெற வும் முனைவோமாக. நமது நன் முயற்சிக்குப் பல இடையூறுகள் தோன்றலாம். ஆனால் அது கண்டு பின்னடையாமல் முன்னேறு வோமாகில் அடுத்தபடியாக நமது முயற்சியே வெற்றி யடையும்; ஜெயம் பெறுவோம் என்பதை எண்ணிக், காரியத்தில் முயலுவோ மாக.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்?"

என்ற பாரதியின் திருவாக்கை யறிந்தும்,

"ஒன்றே செய்யவும் வேண்டும்; ஒன்றும்
நன்றே செய்யவும் வேண்டும்; நன்றும்
இன்றே செய்யவும் வேண்டும்; இன்றும்
இன்னே செய்யவும் வேண்டும்."

என்ற கபிலர் பெருமானாரின் நல் வாக்கின்படியும் தளராது தாழாது நன்றாகிய இக் காரியத்தைச் செய்ய உடனே பிரவேசிப்போமாக.

"முயற்சி திருவினையாக்கும் முயற்சி யின்மை
இன்மை புகுத்திவிடும்."

"தெய்வத்தால் ஆகா தெனினும் முயற்சி தன்
மெய்வருத்தக் கூலிதரும்."—குறள்.

# தேசியக் கல்வி.

திரு. K. கணேசன் அவர்கள்.

எத்துறையிலும் தேசிய மணங் கமழும் இக் காலத்தில், நாட்டின் நிர்மாணத் துறைகளில் முக்கியமானதா யிருக்கும் "தேசியக் கல்வி" யைப் பற்றிச் சற்றே ஆராய்வது நலமே யாகும்.

மானிட வர்க்கத்துக்கு, உணவு உடை இவற்றிற்குப் பின்னர், இன்றியமையாததா யிருப்பது கல்விதான். தொன்று தொட்டு ஓர் தேயத்தின் வாழ்க்கையில் கல்விக்குள்ள ஓர் உயர் நிலையைச் சான்றோர்களறிந்து அதற்கான பாடும் பட்டு வந்திருக்கின்றனர். செல்வம், அழகு இவற்றால் எவ்வளவு சிறப் போங்கி யிருப்பினும், கல்வி யழகில்லாத மனிதன் மணமற்ற மலரை யொத்திருக்கிறான்.

"தேசியக் கல்வி"யி னவசியத்தை யிங்கே சொல்லுவதி லிருந்து, தற்காலம் நாட்டில் நிலவுவது தேசியக் கல்வி யல்ல வென்பது புலனாகிறது. இச் சமயம் அன்னியக் கல்வி முறையே பாரத நாட்டிடைத் தாண்டவ மாடுகிறது. "அன்னிய" வென்றால் அன்னிய நாட்டாருடைய தென்பது மட்டுமல்ல; இந்தியரின் இயற்கைக்கும், நோக்கங்களுக்கும் அறவே அன்னியமான தென் பதும் அர்த்தம்.

பண்டைக்கால முதல் பாரத நாட்டுக் கல்வி முறையின் இலட் சியம், "எளிய வாழ்வு வாழ்ந்து, உயர் நோக்கங் கொள்வது" என் பதே யாகும். மனிதனைக் கேவலம் மிருகத்தன்மையி னின்று விடுத்து, தெய்வத் தன்மை[illegible]வதே உண்மைக் கல்வி யின் உன்னத லட்சி[illegible]றையின் லட்சியமோ, இந்தியா சம்பந்தப்பட்ட வரையில் ஏதோ வயிற்றுப் பிழைப்புக்

[illegible] கல்வி [illegible]

காக 30, 40 ரூபாய் வருமானம் கொடுக்கக்கூடிய உத்தியோகங்களை யடைவது என்பதேதான். இந்த நோக்கத்துடன் கல்வி கற்குங்கால் செலவாகும் தொகைக்குத் தக்கபடி பிரதி பலன் கிட்டுமோ வென்பதும், ஏதாவது உத்தியோகம்தான் நிச்சயமாய்க் கிடைக்குமோ வென்பதும் வல்லமை மிகுந்த ஜோதிடர்களும் சொல்ல வியலாததா யிருக்கிறது. "உயர் (டாம்பீக) வாழ்க்கையும், கேவல நோக்கமும்"தான் இக் கல்வி முறையினாலான பயனெனலாம்.

இந்தியாவின் பல்வேறு நகரங்களில் ஏராளமான பள்ளிக் கூடங்களும், கலாசாலைகளு மிருக்கின்றன. ஆண்டு தோறும் ஆயிரக் கணக்கான மாணவர்கள் சர்வ கலாசாலைகளினின்று பட்டம் பெற்று வெளியேறுகிறார்கள். இவற்றைக் கண்ட பின்பும் நம் நாட்டில் கல்விக் குறைவு என்று சொல்லலாமா வென ஐயமுறக் கூடும். வெளிப் பகட்டும் டாம்பீக வாழ்வும் கல்விக் கறிகுறியாயின், நம் நாடு கல்வியில் முன்னேற்ற மடைந்து விட்டதென்றே சொல்லலாம். ஆனால், இந்தியா வென்பது முக்கியமான சில நகரங்களி லில்லை; நாடெங்கும் காணப்படும் எண்ணிறந்த கிராமங்களில் தான் பாரத தேச மிருக்கிற தென்று மஹாத்மா காந்தி போன்ற நுண்ணறிவாளர்களின் வார்த்தையை ஒப்புக்கொள்வோமாகில், நம் நாடு கல்வியில் கொஞ்சங்கூட அபிவிருத்தி யடையவில்லை யென்பதை அறியலாம்.

தற்சமயம் கிராமங்களின் நிலைமையை நோக்குங்கால் இருதயம் வெடித்துப் போகும் பரிதாபக் காட்சியே புலனாகிறது. பஞ்சமும், நோயும் கிராமங்களைத் தம் வயமாக்கிக் கொண்டன. அகராதியில் வறுமை யென்ற பதத்திற்கு இந்தியக் கிராமவாசியின் நிலைமை யென்று அருத்தம் செய்யலாம். இயற்கை யரசியின் கருணை கடாட்சத்திற்குக் காத்திருந்து வம்பாடு பட்டு வேளாண்மை செய்கிற குடியானவனை வரிப்பளு ஒரு புறமும் வியாதிகள் மறு புறமுமாக வாட்டுகின்றன. இக் கஷ்டம் தாங்காது குடியானவன் தன்னம்பிக்கை யிழந்து, ஊக்கம் குன்றி, நடை பிணமென வாழ்க்கை நடத்துகிறான்.



இப்படிப்பட்ட நிலைமையில், தற்காலம் நிலவி வரும் பகட்டுப் படிப்பை அவன் கற்பதென்பது எவ்வாறு இயலு மென்று தோன்றவில்லை. உண்மைக் கல்வி யொளி வீசாது அறியாமை யென்னும் காரிருளில் தவிக்கும் இக் கிராமவாசிகளுக்கு எண்ணு மெழுத்தும் தந்து, வாழ்க்கையி லொரு திருப்தியையும் மனோ திடத்தையும் உண்டாக்குவதுதான் "தேசீயக் கல்வி" யென்று என் சிற்றறிவுக் கெட்டுகிறது.

முதலாவது, கிராமவாசியின் உடல் நலத்தைக் கவனித்தல் வேண்டும். கிராமங்களின் சுகாதார நிலை மிகவும் கேவலமா யிருக்கிறது. வறுமைதான் இதற்குக் காரண மென்று முழுமையும் சொல்ல முடியாது. பணச் செலவின்றி, சிரத்தை யெடுத்துக் கொள்வதின் மூலமாகவே கிராமங்களை அழகுபெறச் செய்யலாம். ஆண்டு தோறும் ஆயிரக் கணக்கான கிராமவாசிகளைக் கொள்ளை கொள்ளும் நோய்களால் கிராமங்கள் அருள் குன்றி அவலக்ஷணத்துடன் கிடக்கின்றன. இந்த நோய்களைத் தடுக்கக் கிராமங்களிலுள்ள வீடுகளின் உட் புறங்களையும், வெளி யிடங்களையும் சுத்தமாய் வைத்துக் கொள்ளும்படி செய்ய வேண்டும். இதற்குப் பணச் செலவு தேவையே யில்லை. சொல்வதை விட அனுஷ்டானத்திலே காண்பிப்பது சிறந்த தாகையால், ஊக்கமுடைய இளைஞர்கள் இவ் வேலையைச் செய்து காட்ட முன்வர வேண்டும். இவ்வாறு அவர்கள் செய்வார்களாயின், கிராமவாசிகளுக்கு அவர்களிடத்தில் அன்பும் நம்பிக்கையும் மேலிட்டு, பின்னர் அவர்கள் சொல்லக்கூடிய சீர் திருத்தங்களை ஊக்கத்துடன் நிறைவேற்றுவார்கள்.

சுகாதாரத்திற்குப் பிறகு, கிராமவாசிகளின் ஒழுக்கத்தைக் கவனித்தல் வேண்டும். கள்ளரக்கன் தாண்டவம் தலை சிறந்து விளங்கும் கிராமங்களில் ஜாதிக் கட்டு முதலிய முறைகளால் அவர்களை அவன் கையினின்று விடுவிக்க வேண்டும். கடன் வாங்கி அதைத் திரும்பக் கொடுக்க வியலாது தங்களது சொற்ப நில பலன்களையு மிழப்பது, நம் கிராமத்தார்களி னியற்கையாய் விட்டது. இதைத் தடுக்கச் சிக்கன வாழ்க்கையின் நலங்களைச் சொல்லிச்

சொற்ப வட்டியில் கடன் கொடுக்க ஐக்கிய நாணயச் சங்கங்களை ஸ்தாபிக்க வேண்டும். நிலத்தினின்றும் கிடைக்கும் வருமானம் சொற்பமே யாதலின், அவ் வருமானத்துடன் கூடச் சிறிது லாபம் கிடைக்கக்கூடிய குடிசைத் தொழில் (Cottage Industry), நூல் நூற்றல், நெசவு, தச்சு வேலை முதலிய வற்றையும் வளர்க்க முயற்சிக்க வேண்டும்.

அவற்றைக் கவனித்த பின்னர்த்தான் கல்வியைப் பற்றி யோசிக்க வேண்டும். பட்டினி கிடந்து நோய்களால் வருந்தும் கிராமவாசிகளுக்குக் கல்வி கொடுக்க முயல்வது, விழலுக் கிறைத்த நீராகவே முடியும். இவற்றை நிவர்த்தி செய்ய வியலாது, கல்வித் திட்டத்தைப் போடுவோமாயின் ஒரு நாளும் அது பலிக்கவே பலிக்காது.

கிராமவாசிகளின் வாழ்க்கைக்கும், அவர்களது நிலைமை முன்னேற்ற மடைவதற்கும் தகுதியாயுள்ள கல்வியையே நாம் பரப்ப வேண்டும். இங்குக் கல்வி புகட்டக் கட்டிடங்களும், நகரப் பள்ளிக் கூடங்களை யொப்ப தளவாடங்களு மவசியமில்லை. குடியானவர்களின் நிலைமையில் அனுதாபமும், அவர்களது சுக துக்கங்களைத் தனதெனப் பாராட்டும் சுபாவமுமுள்ள ஓர் ஆசான் இருந்தாலே போதும். வாழ்க்கையின் உன்னத லட்சியங்களை யறிவிக்கக் கூடிய பண்டைக் காலச் சரிதங்களையும், பாரத நாட்டு வீரசிகாமணிகளின் ஜீவிய சரித்திரங்களையும், தற்காலக் கிராமவாசிகளின் நிலைமையையும், அந் நிலைமைக்குக் காரணங்களையும், இக் கேவல நிலையினின்று விடுபடும் மார்க்கத்தையும் அவர்களுக்குச் செவ்வனே புகட்ட வேண்டும். இவ்வாறு அவர்களது நிலைமையை நன்கு விளக்கி, அவர்கள்தான் தேசத்திற்கு ஆணி வேர் போன்றவர்களென்பதையும், இவர்கள் சீர்குலைந்தால் தேசமும் சீர்குலையு மென்பதையும் அவர்களுக் குணர்த்துவோமானால், தற்சமய மிருக்கும் பரிதாபகரமான நிலைமையி னின்றும் விடுபட்டுத் தைரியத்தையும், வாழ்க்கையில் உற்சாகத்தையு மடைவார்கள்.

ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள ஆண், பெண் அனைவரும் எழுதவும், படிக்கவும் சக்தியுள்ளவர்களா யிருக்க வேண்டும். தங்க



ளது வருமானத்திற்குத் தகுந்தவாறு வாழ்க்கை நடத்தக் கணிதமும் அறிந்தவர்களா யிருக்க வேண்டும். இவ்வளவாவது நாம் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்து விட்டால், அவரவர்களது ஊக்கத்துக்குத் தக்கபடியும், அவகாசத்திற்குத் தக்கபடியும் அறிவை வளர்த்து நாட்டுக்குப் பெரும் உபகாரிகளா யிருப்பார்கள்.

இவ்விதமாக நமது கிராமங்களில் தேசியக் கல்வி பரப்புதலை விட மேலானதோர் தேச சேவை வேறொன்றும் கிடையாது. இந்தப் புண்ணியத்தைவிட மேலானதோர் புண்ணியமும் இல்லையென்றே சொல்லலாம். இதையே பாரதியார்:—

"இன்ன றுங் கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைக ளியற்றல்
அன்ன சத்திர மாயிரம் வைத்தல்
ஆலயம் பதி னாயிரம் நாட்டல்
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோ ரேழைக் கெழுத் தறிவித்தல்"

என்ற பொன் மொழிகளில் புகன்றிருக்கிறார். கிராமங்களி லுள்ள வீடுகள் தோறும் கல்வி மணம் வீசுமாறு நம் மிளைஞர்கள் வேலை செய்ய முன்வர வேண்டும். அவர்களது முயற்சிக்குத் தங்களாலான உதவி செய்ய செல்வர்களும் தயாரா யிருக்க வேண்டும். கல்வி விஷயத்தில் உலகின் ஏனைய நாடுகளி லெல்லாம் நம் நாடே கீழ்த்தரமான நிலைமையி லிருப்பதன் காரணம் சுதந்திர மில்லாததினா லென்பது உண்மையே யாயினும், அச் சுதந்திரத்தை யடையும் முயற்சியில் தேசியக் கல்வியைக் கிராமங்களில் பரப்பும் முயற்சியும் சேர்ந்தால் இரு விதத்திலும் மிக அனுகூலமாகவே இருக்கும். ஏனெனில் கிராமங்கள் விழித்து ஊக்கங் கொண்டால் தேச விடுதலைப் போர் விரைவில் விரும்பியவாறு வெற்றி யடையு மென்பது திண்ணம்.

# பத்திரிகை உலகம்.

## ருஷியாவின் உண்மை நிலைமை

பிரிட்டிஷ் மும்மாத வெளியீடான "றவுண் டேபிள்" என்னும் பிரபலம் பொருந்திய பத்திரிகையில் "ருஷியா தேசத்தின் உண்மைகள்" என்பதாக ஓர் கட்டுரை காணப்படுகிறது. கட்டுரையின் ஆசிரியர் தற்கால ருஷியாவில் சுற்றுப் பிரயாணம் செய்து தாம் கண்டவற்றையும் கேட்டவற்றையும் அப்படியே விவரித்துக் கொண்டு போவதால் கட்டுரையின் பெரும் பாகமும் சம்பாஷணை நடையில் மிக அழகாக அமைத்திருக்கிறது. அதில் ஓர் பகுதி அடியில் வருமாறு:—

அவள் போனதும், கூன் வளைந்த முதுகும் காடி மயிர் போன்று கறுத்த தாடியும் முயல் முகமோ வெனச் சொல்லத் தகும்படியான நீண்ட நாசியும் கொண்ட ஒரு சிறு மனிதன் புரையினுள் புகுந்து ஜன்னலினருகில் நின்ற யாவர்களையும் நெருக்கித் தள்ளி, அத் தபால் உத்தியோகஸ்தர் முன்னிலையில் வந்தான். உடனே அவனை ஒழுங்காக வரிசைப் பிரகாரம் நிற்கும்படி கோபத்துடன் அவ் வுத்தியோகஸ்தர் அவனைப் பார்த்துச் சப்தமிட்டார். ஆனால் அவன் அசையவே யில்லை.

"நான் 'ஸேவிங்ஸ் பாங்கில்' பணம் போடுவதற்காகப் பணம் கொண்டு வந்திருக்கும் போது நீங்கள் ஏன் கோபிக்கிறீர்கள்" என அவனும் சத்தமிட்டான். அதுவும் ஓர் நல்ல காரணந்தான. அதனைக் கேட்டு ஒருவரும் ஒன்றுமே பேசவில்லை. ஆனால் ஒரு மனிதன் மட்டும் தனக்குள், "பணம் எடுக்கிறதானாலும் அல்லது போடுகிறதானாலும் ஜனங்களில் சிலருக்கு மட்டும் எதற்காகத் தனி வசதிகள் கொடுக்க வேண்டும். அவர்கள் அதை வீடுகளில் வைத்துக் கொள்வதுதானே" என்றான் "இந்த எல்லாப் பணங்களையுமா" யெனச் சிரித்துக் கொண்டே பதிலளித்தான்.

"இந்தச் சங்கடமான சில்லரைத் துட்டுகளைத்தான்."

மற்றவன் சிறிது வருத்தமுற்று "ஆமாம், சங்கடமான இந்தத் துட்டுகள் சில இயந்திரங்களையும் கலப்பைகளையுங் கூட வாங்கக் கூடும். ஐந்து வருடத் திட்டத்தில் இது மிகவும் உபயோகமா யிருக்கும். அப்படியல்லவா?"

அந்த மனிதன் ஏதோ முணுமுணுத்துக் கொண்டு பேச்சை நிறுத்திவிட்டான். தபால் உத்தியோகஸ்தர் ஒன்றும் சொல்லாது அவர்களுக்கு வேண்டுவன வற்றைச் செய்து கொடுத்துக் கொண்டே யிருந்தார். ஜனங்களும் அதிகமான தொந்திரவுகளின்றி உற்சாகமாக விருந்தனர். ஆனால் அடுத்தாப்போல் அவ் வுத்தியோகஸ்தனின் முரட்டுச் சத்தம் திரும்பவும் காதைத் துளைத்தது. "உனது கடிதத்தில் உன்னுடைய விலாசத்தை நீ



எழுதவில்லையே" என அவர் ஒரு கடிதத்தை "றெஜிஸ்டர்" செய்ய வந்த ஓர் வாலிபனிடம் கூறினார்.

"அப்படியானால் அதை எழுதிக் கொள்ளுங்கள்; "கிராமம், பீ......... தாலூகா, டீ......... மாகாணம், ஒ........." என்றான் அவ் வாலிபன்.

"நீயே எழுதிக் கொடு. இந்த ஜனங்க ளெல்லாம் காத்து நிற்பதை நீ காணவில்லையா?" என அவ் வுத்தியோகஸ்தர் கூறினார்.

வாலிபன் உடனே மெதுவாக "ஐயா, எனக்கு எழுதத் தெரியாது, நான் அதைக் கற்றுக் கொள்ளவில்லை" என்றான்.

அங்கு நின்ற கூனன் அது கேட்டு "உனக்கா" எனக் குலுங்கச் சிரித்து, "நீ மிகவும் சிறு வயதுள்ளவனாயிற்றே? நீ யார்? நகரவாசியா, நாட்டுப்புரத்தானா?" என்றான்.

"கிராமவாசி."

"நீ பள்ளிக்கூடத்திற்குப் போனதில்லையா?"

"இல்லை."

"உனக்குக் கொஞ்சமேனும் வெட்கமில்லையா? நமது அரசாங்கம் ஜனங்களுக்குக் கல்வி கற்றுக்கொடுப்பதில், அதிலும் இளைஞர்களுக்கு எழுதவும் வாசிக்கவும் கற்றுக் கொடுப்பதில் பெருத்த வேலை செய்து வரும்போது?"

"ஆனால் என்னை ஏன் குறை கூற வேண்டும்? என் தந்தை எப்பொழுதும் இடம் விட்டு இடம் அலைந்துகொண் டிருந்தார். கடைசியாக அவர் நிலைத்திருந்த கிராமத்தில் ஒரு பள்ளிக்கூடமு மில்லை" யென அவ் வாலிபன் பதிலளித்தான்.

"நீ எந்த ஊரிலிருந்து வருகிறாய்?" "வடக்கே யிருந்து, வெகு தூரத்திலிருக்கும் 'மர்மர்ன்ஸ்கி' லிருந்து (**Murmansk**). அங்கு அரசாங்கத்தார்கள் இந்த நகரத்தைப் போன்று எண்ணிறந்த கலாசாலைகளை இன்னும் கட்டவே யில்லை. நகரவாசிகள் எப்பொழுதும் நல்லவைகளையே பெறுகிறார்கள்."

இந்தக் கடைசி அபிப்பிராயம் யாவரையும் விழிக்கச் செய்தது.

உடனே ஓர் பெண் பிள்ளை திடீரென கோபத்துடன் "நாட்டுப்புரத்தார்களாகிய உங்களுக்கு நல்லவைகள் ஒன்றும் கிடைப்பதில்லையா? உங்களுக்கு இப்பொழுதே யெல்லாம் கிடைக்கிறதே—இறைச்சி, பாற்கட்டி, வெண்ணை, முட்டை, பால்."

"யாரா யிருந்தாலும், நீங்கள் நகர வாசிகளாகிய எங்களிடம் ஏன் ஒளித்துவைக்கப் பார்க்கிறீர்கள்!" என வேறொரு பெண் பிள்ளை சிறிது வருத்தத்துடன் கூறினாள்.

மற்றவர்களும் இதில் சேர்ந்துகொண்டார்கள். ஒவ்வொருவரின் உணர்ச்சிகளும் அதிகப்பட்டு தபால் உத்தியோதஸ்தர் ஆர்டர்களுக்காக ஜன்னலின் வெளியில் தலையை நீட்டிக் கெஞ்சினாலும் கவனிப்பாரற்று அனைவர்களும் விவகாரத்தில் கலந்துகொண்டார்கள். ஆனால் அவரும்

அவர்களை வற்புறுத்தவில்லை. அதற்குப் பதிலாகச் சுருட்டைப் பற்ற வைத்துக் கொண்டிருந்தார்.

"ஒரு ரூத்தல் வெண்ணெய்க்கு 7, 8 ரூபிள்ஸ் (ஒரு ரூபிள்ஸ்-1 ரூபாய் 7 அணுவாகும்). நாட்டுப்புறத்தான்கள் இப்படித்தான் விலை கேட்கிறார்கள்.

"பத்து முட்டைகளுக்கு மூன்று ரூபிள்ஸ்."

"என்னுடைய அண்டை வீட்டுக்காரன் 25 ரூபிள்ஸ் கொடுத்து ஒரு மிருகம் வாங்கி வந்தான். வீடு வந்ததும் அது இறந்துவிட்டது."

"அவர்கள் இடை போடுவதிலும் விட்டுக்கொடுப்பதில்லை."

"அவர்கள் பாலில் தண்ணீரைச் சேர்க்கிறார்கள்."

"வஞ்சகர்கள்! வஞ்சகர்கள்!"

"பாதுகாப்புப் படை இதற்கு ஏதாவது செய்துதான் ஆகவேண்டும்! இந்தப் பயல்களைச் சிறைப்படுத்துங்கள்."

"பாதுகாப்புப் படையா! அவர்கள் தமக்குக் கிடைத்திருக்கும் புதிய சப்பாத்துக்களைப் பார்த்து அதிசயித்துக் கொண்டிருக்கிறார்கள்."

அந்த வாலியன் வேட்டையி லகப்பட்ட மிருகம் போன்று பயந்து பாக்கப் பாக்க விழித்து நின்றான். ஒரு வார்த்தை கூடச் சொல்ல முடியாது நடுங்கி ஆடிவிட்டான். அவர்கள் கொண்ட ஆத்திரம் ஒருவாறு அடங்கியதும் அவன் சும்மா நிற்கவில்லை.

"நீங்கள் ஒன்றையும் நன்றாக அறியவில்லை" என மெதுவாக அவன் கூற ஆரம்பித்து, "நான் வசிக்கும் வட தேசத்தில் விஷயங்களெல்லாம் வேறானது. எங்களுக்குப் போதுமான ரொட்டிகூடக் கிடைப்பதில்லை. இந்தப் பக்கங்களில் வளருவதுபோல் ஒன்றும் அங்கு உண்டாவதில்லை. எங்களுக்குக் கிடைப்பதெல்லாம் மீன்களும் மீன்களும் மீன்களும்தான்."

வேறொரு வாலிபன் உடனேயே, "நல்லது நாட்டை எல்லாம் ஒன்று சேர்த்தபின் பிறகு நகரத்து ரொட்டி மட்டுமல்ல, எந்தச் சாமான்களானாலும் எல்லாப் பேர்களுக்கும் எந்த விடத்திலும் 'மர்மன்ன்'இல் கூட மிகவும் குறைந்த விலைக்கு அகப்படும் என்றான்.

இதனைக் கேட்டு நின்ற ஒரு பெரிய மனிதர் அவ் வார்த்தைகளை வரவேற்று உரத்த குரலில் சரி வைத்தார். உடனே அவரை யாவரும் ஒன்றுபோல் உற்று நோக்கினார்கள். அவரைப் பார்த்ததும் அவர் ஓர் பெரிய மனிதர் போன்று காணப்பட்டார்.

அக் கூட்டத்தில் அது பரியந்தம் நின்றுகொண்டிருந்த அந்தக் கூனன், "நல்லது உன்னுடைய கடிதத்தை இங்கே கொடு. உனக்காக நான் உன்னுடைய விலாசத்தை எழுதுகிறேன். ஆனால் நீ பள்ளிக்கூடத்திற்குப் போகவேண்டும். இந்தக் காலத்தில் உன்னைப் போன்றவர்கள் எழுதவாசிக்கத் தெரியாம லிருப்பது மிகவும் வெட்கமாகும். நீ இந்த நகரத்தில் வசிக்கிறதா யிருந்தால் எனது பக்கங்களி லிருக்கும் கல்வி அபிவிருத்திக் கழகத்திற்கு வா. நாங்கள் உன்னைப் பார்த்துக் கொள்ளுகிறோம்." என அவ் வாலிபனைப் பார்த்துக் கூறினார்.



நான் தபாலாபீஸை விட்டு தெருக்களி லிறங்கிச் சுற்றிப் பார்க்க வெளி வந்தேன். சூரியனும் உச்சி மறைந்து உஷ்ணத்தைக் கொடுத்துக்கொண்டிருந்தான்.

The "Round Table," London.

## அமெரிக்கா அடையும் பெருமை

அமெரிக்கா தேசம் அன்னிய நாடுகளின் அபிவிருத்தி விஷயங்களில் விசேஷ கவனம் வைத்து அவ்வப்போது கடனூற்றி வந்திருப்பதை யிட்டு 'தேயிலர், பல்கலைக் கழகத்தின் தலைவரான 'டாக்டர் ஜான்பால்' என்பார் டிசம்பர் மாத "நாஷனல் றிப்பப்ளிக்கன் மாகஸீன்," என்னும் பத்திரிகையில் மிகப் பெருமை பாராட்டி எழுதுவது காண்க:—

உலக தேசங்களில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் பெற்றுவரும் புகழுக்கு அமெரிக்காவின் தேசீயம் காரணமாகாது. அதனுடைய செல்வப் பெருக்கும் தொழிலாளர்களுக்கு அது கொடுத்துவரும் உயரிய சம்பளங்களும் அதன் சாதாரண மக்களின் சுக வாழ்வுகளும் சில வேளைகளில் பொறாமையையே யளித்திருக்கும். அவை மனித சுபாவங்களுக்கு மாறானவைகளே.

ஐரோப்பாவி லிருந்தும் அமெரிக்க யாத்ரீகர்களை அகற்றிவிடுங்கள்; மனித சமூகத்தில் ஒடுக்கப்பட்டிருக்கும் சமுதாய மக்களினிடையி லிருந்து அமெரிக்கன் மிஷனெரிகளை யகற்றிவிடுங்கள்; கீழ் தேசங்களில் பொறுப்பு மிக்க அரசாங்கங்களி லிடப்பட்டிருக்கும் அமெரிக்காவின் மூலதனங்களையும் கடன்களையும் அகற்றிவிடுங்கள்; தென் அமெரிக்காவின் சரித்திரத்தி லிருந்து அமெரிக்காவின் "மன்-ரோ" கொள்கை செய்து முடித்த பலாபலன்களையும் அகற்றிவிடுங்கள்; இரத்த ஆறு பெருக்கெடுத்தோடிய சீனாவி லிருந்து அமெரிக்காவின் தாராள நன்கொடையை யகற்றிவிடுங்கள்; பத்தொன்பதாவது நூற்றாண்டு ஜப்பானிலிருந்து அமெரிக்கா அளித்துவந்த முயற்சிகளையு மகற்றிவிடுங்கள்; பிலிப்பைன் தீவுகளி லிருந்து அமெரிக்கா செய்து முடித்திருக்கும் சீர்திருத்தங்களையும் அகற்றிவிடுங்கள்; இன்று ருஷியாவில் நம்மை இழிந்துரைத்து நாசம் பண்ணிவரும் புரட்சிக்காரர்களின் கைகளிலிருந்து தப்பித்துக்கொள்ளும் பொருட்டு நேற்று பாதுகாவலளித்ததையும் ருஷியாவி லிருந்து அகற்றிவிடுங்கள்; ஸ்காண்டிநேவியா, இத்தாலி, பால்கன் தேசங்களின் முற்கால மக்களுக்கு அளித்த அரசியல் சந்தர்ப்பங்களையும் அகற்றி விடுங்கள்; இந்நாடுகளில் நிறைந்திருந்த சிவந்த மக்களுக்கும் கருப்பு மக்களுக்கும் கொடுத்து வந்த அமெரிக்கன் பாதுகாப்புகளையும் அம் மக்களின் சரித்திரங்களி லிருந்து அகற்றிவிடுங்கள்—இவைகளை யெல்லாம் அகற்றி வைத்து எங்கள் தவறுதல்களையும் சிலப்போது கொண்ட எங்கள் அகங்காரங்களையும், சட்ட ரீதியற்ற நடப்புகளையும் எதிர் மாறான எண்ணங்களையும் நீங்கள் குற்றமெனக் கொண்டு, நாங்கள் அளித்து வந்திருக்கும் அரசியல் ஞானிகள், நியாய சாஸ்திரிகள், ஆசிரியர்கள் விஞ்ஞானப் பண்டிதர்கள், சித்திரக் கலைஞர்கள் ஆகிய யாவர்களையும், நீங்கள் புறக்கணித்துத் தள்ளி

விடுவீர்களாயின், தரித்திரம் நிறைந்த ஓர் உலக சித்திரத்தையே நீங்கள் பெறுவீர்கள்.

The "National Republican Magazine," Washingtone,

## அமெரிக்காவின் செல்வ மதிப்பும் கலாசாலைகளின் செலவும்

அமெரிக்காவின் தேசீயக் கல்விச் சங்கத்தின் ஆராய்ச்சிக் குழுவினர், அமெரிக்காவி லுள்ள சகல கல்விச் சாலைகளின் செலவையும் சொத்து மதிப்பையும் நிச்சயம் செய்து "அமெரிக்கன் ஸிட்டி மாகஸீன்" என்னும் பத்திரிகையில் வெளியிட்டிருப்பதாவது:—

பொது நலன்களுக்கும் சிறப்பாகப் பள்ளிக்கூடங்களுக்கும் தேச மக்களது வருமானத்தில் பெருவாரியான பணம் செலவாகி வருகிறதென நம்பியிருக்கும் பல்லோர்களது அச்சத்தை யொழிப்பதற்காகவும், அமெரிக்க ஐக்கிய நாடுகள் தமது கலாசாலை விஷயங்களில் எவ்வளவு செலவு செய்யக் கூடுமென்பதை அறிவதற்காகவும் தேசீயக் கல்விச் சங்கத்தின் ஆராய்ச்சி யிலாகா, ஆராய்ந்து அறிந்த திட்டம் தற்போது தயாராக யிருக்கின்றது. அமெரிக்கா முழுமைக்கும் தனித்தனி மாகாணங்களுக்கும் அந்நிய தேசங்களுக்கு முள்ள தொகைகள் யாவும் பலவித சூசிகைகள் மூலம் விளக்கப் பட்டிருக்கின்றன.

1928-ம் வருடத்தில் அமெரிக்க மக்களின் மொத்த வருமானம் கூலிகள் சம்பளங்கள் வியாபார லாபங்கள் மூலதனங்களின் வட்டியாகிய யாவும் உட்பட 89,41,90,00,000 டாலர்கள் (ஒரு டாலர்—3 ரூபாயாகும்) என மதிக்கப்பட் டிருக்கிறது. இந்த வருமானத்தில் 2,44,86,33,561 டாலர்கள், அதாவது 100-க்கு $2\frac{3}{4}$ வீதம் பொது ஜனப் பள்ளிக்கூடங்களுக்காக அமெரிக்கா தேசம் செலவு செய்திருக்கிறது. அதாவது அரசாங்க உதவி பெற்ற ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் மத்திய கலாசாலைகள் கல்லூரிகள் ஆகியவைகளுக்கே யாகும். ஒவ்வொரு நூறு டாலர் வருமானத்தில் $2\frac{1}{2}$ டாலர் ஆரம்பப் பள்ளிக்கூடங்களுக்காகவும் மத்திய கலாசாலை களுக்காகவும் செலவு செய்து வந்ததுபோக, $\frac{1}{4}$ டாலர் மட்டுமே கல்லூரிகளுக்கும் பல்கலைக் கழகங்களுக்கும் செலவாகி யிருக்கின்றன.

அமெரிக்காவின் மொத்த செல்வ மதிப்போடு பொது ஜனக் கலாசாலைகளின் சொத்துக்களை ஒப்பிட்டுப் பார்க்கையில் ஆராய்ச்சி யிலாகா கலாசாலைகளின் மொத்த சொத்துக்கள், தேசத்தின் பூரா சொத்துக்களில் 100-க்கு 2 பங்கே யென அனுமானித்திருக்கிறது. அதாவது 1928-ல் அமெரிக்காவின் எல்லா தாபர வஸ்துக்களின் மொத்த விலை 3,53,52,00,00,000 டாலர்களாகவும் அதில் கலாசாலை சொத்துக்கள் 6,33,38,38,588 டாலர்களாகவும் கணக்கிட்டிருக்கிறது.

1928-ம் வருடத்தில் அமெரிக்கா தேசத்தின் கலாசாலைச் செலவாகிய 2,44,86,33,561 டாலர்கள், இதரபோக பாக்கியங்களுக்காகச் செலவு செய்த



பணத்திலும் மிகக் குறைவே யாகும். அதே வருடம் அமெரிக்கா தேசம் சுக போக வஸ்துக்களாகிய புகையிலை, குளிர் பானங்கள் விளையாட்டுகள், ஆபரணங்கள் முதலியவைகளுக்காக 6,40,16,50,000 டாலர்களும் கட்டட வேலைகளுக்காக 7,06,50,00,000 டாலர்களும், மோட்டார் வாகனங்களுக்காக 1,25,00,000 டாலர்களும் செலவு செய்தது. அமெரிக்க மக்களின் சராசரி வருட வருமானம் 742 டாலர்களா யிருந்தும்—இங்கிலாந்தில் 427 டாலர்கள்—அமெரிக்க ஐக்கிய நாடுகள் பொது ஜன நன்மைகளுக்காகத் தனது தேச மக்களின் வருமானத்தில் செலவு செய்துவரும் பணம் உலகத்திலுள்ள எல்லா தேசங்களையும் விட மிகக் குறைந்ததாகும்.

The "American City Magazine," New York.

## பாரசீகப் பெண்கள் சங்கம்

முஸ்லிம் நாடாகிய பாரசீகத்தில் பெண் மக்கள் அடைந்து வரும் சீர்திருத்தங்களைப் பற்றி மிர். ஜதீந்திர மோகன் சாட்டர்ஜீ என்பார், இம்மாத "மார்டன் ரெவ்யூ" பத்திரிகையில் ஓர் கட்டுரை வரைந்துள்ளனர். அதில் பாரசீகப் பெண்களின் பரோபகாரச் சங்கம் என்பதுபற்றி அவர் அறிவிப்பதாவது:—

ஒருவிதம் நிலை நிறுத்தப்பெற்று தற்போது வேலைசெய்து வருகின்ற இச் சங்கம் முல்லாக்களின் பலமான எதிர்ப்புகளுக்கு விரோதமாக நின்ற சீர்திருத்தக் காரர்களது முயற்சிகளுக்குப் பெரிதும் கடமைப்பட் டுள்ளது. பாரசீகப் பெண்களின் எழுச்சிக்கு உயிர் கொடுத்த இச் சங்கத்தின் ஆதி வரலாற்றையும் வளர்ச்சியையும் பற்றிக் கூறுவதற்கு முன்னால், அதன் கொள்கைகளையும் நோக்கங்களையும் எடுத்தியம்புவது நன்றாகும். சங்கத்தின் தலைவர்களிட மிருந்தும் காரியதரிகளிட மிருந்தும் சமீபத்தில் கிடைத்த கடிதத்தில் குறிப்பிட் டிருக்கிறபடி அவைகள் யாவற்றையும் ஆறாகப் பாகுபடுத்தப்பட் டிருக்கிறது.

1. பெண்கள் சுதந்திரம்; முகங்களில் அணியப்பட்டு வரும் திரைகளை யகற்றுதல்.

2. சமூக அரசியல் விஷயங்களில் அவர்களது உரிமை ஸ்தாபித்தல்.

3. பதினாறு வயதிற்குக் கீழ்ப்பட்ட பெண்களின் விவாகங்களை ஒழித்தல்.

4. பலதார மணத்தைத் தவிர்த்தல்.

5. விவாகரத்துக்களில் புருடரிட மிருந்து பணமாகவோ அல்லது வேறு விதமாகவோ சீதனப் பொருளைத் திரும்பப் பெறுவதற்கான சட்ட திட்டங்கள் ஏற்படுத்துதல்.

6. பெண்கள் தாராளமாகக் கலந்துகொள்ளுதல்; அவர்களின் உரிமைகளை எதிராளிகளுடன் விவாதம் செய்து நிலைநிறுத்தல்.

நாம் இங்குக் குறிப்பிட்டிருக்கிற அவர்களது ஒவ்வொரு நோக்கங்களும் இஸ்லாமிய தர்மத்திற்கு விரோதமானதும் இம் மக்களிடை நிலை நாட்டி வைத்திருக்கும் முஸ்லீம் கொள்கைகளை எதிர்த்து அடியோடு பிறழ வைத்துவிடக் கூடியதுமாகும்.

The "Modern Review," Calcutta.

## ஜப்பானில் மருத்துவத் தொழில்

செஞ்சிலுவைக் கழகங்களின் தலைச் சங்கத்தின் ஆதரவில் பிரசுரிக்கப்பட்டு வரும் 'ரெவ்யூ ஆன்ட் இன்பர்மேஷன் புல்லற்றின்' என்னும் ஜனவரி மாத வெளியீட்டில் ஸ்ரீமதி என் ஜிஞோபி, என்னும் ஓர் ஜப்பானிய மாது 'ஜப்பானில் மருத்துவத் தொழில்' என்பதுபற்றி எழுதுவதாவது:—

ஆதி காலத்தில் ஜப்பானில் மருத்துவத் தொழிலானது அமெரிக்கா ஐரோப்பா நாடுகளில் இருந்தது போன்று மதத்தினூடேயே சம்பந்தப்பட்டிருந்தது. சற்றேறக்குறைய 1300 வருடங்களுக்கு முன்னால் சமயப் பற்றும் சன்மார்க்க சிந்தனையும் கொண்ட மகாராணி "கோமியோ" என்பவர்களே 'ஹிடனின்' என்னும் ஓர் தர்ம வைத்தியசாலையை ஆதரவின்றித் தவிக்கும் அனாதைகளுக்கும் ஏழைகளுக்கும் உதவுமாறு ஸ்தாபனம் செய்து அதன் நிர்வாக காரியங்களைத் தானே மேற்பார்வையிட்டு வந்தனர். அவருக்குப் பின் தோன்றிய அரச பெருமான்களும் அரச பெருமாட்டிகளும் அவர்கள் செய்துவந்த கைங்கரியத்தில் அதிகமான உற்சாகமும் காண்பித்து நோயாளிகளின் கஷ்டங்களையும் ஏழைகளின் துன்பங்களையும் கவலையுடன் கவனித்து யாவர்களையும் பராமரித்து வந்தனர். இத்தகையதான உற்சாகங்களுக்குப் பெரும்பான்மையும் புத்த மதக் குருக்களின் தூண்டுதல்களே காரணமாக இருந்திருக்குமென்பதில் சந்தேகமே யில்லை

உத்தியோக சம்பந்தமாக மருத்துவப் பெண்கள் அக்காலத்தில் இருந்து வந்தார்களென்பதற்கு ஒருவிதமான ஆதாரங்களும் கிடைக்கவில்லை. ஏனென்றால் பூர்வீக காலத்தில் பெண்கள் சுதந்திரமுடன் வாழ்ந்து வருவதற்கு அனுமதிக்கப் படவேயில்லை. ஆதலாலேயே அரசாங்க சம்பளத்திலமர்ந்திருந்த மருத்துவச்சிகளும் அக் காலங்களி லில்லை. உண்மையில் மருத்துவத் தொழில் ஜப்பான் தேசத்தில் மெதுவாக மேலோங்கி வளர்ந்தது புதிய ஜப்பான் உதயத்திற்குப் பின்னாலேயே யாகும்.

புதிய ஜப்பான் மேல் நாட்டு நாகரீகங்களைப் பின்பற்ற ஆரம்பித்ததின் பிறகே ஹாலந்து இங்கிலாந்து ஜெர்மனி ஆகிய தேசங்களது மருத்துவ சாஸ்திரத்தை அங்கு உள் நுழைக்கப்பட்டது. அதற்கு முன்னால் ஜப்பான் தேசத்தில் சீனாவின் வைத்திய முறைகளே எங்கணும் பார்த்து வைத்திய சிகிச்சைகளுக்குத் துணையாக விருந்தது. இப்பொழுது மருந்துவகைகளும் சிகிச்சை முறைகளும் மேல் நாட்டு வழிகளில் ஒன்றுபோல் மேலோங்கி வளர்ந்துவிட்டது.

The "Review & Information Bulletin)" Paris.

# ஆசிரியர் குறிப்புகள்.

## இலங்கை செல்லும் நமது பிரதிநிதி

இலங்கை வாழ் அன்பர்களே!

சென்ற வருட டிசம்பர் மணியில் அறிவித்திருந்த வண்ணம், 'நவீன பாரதி'க்குச் சந்தா சேர்ப்பதற்கும் விளம்பரம் சேகரிப்பதற்குமாக நம் கெழுதகை நண்பரும் 'பாரதி'யின் உழுவலன்பருமான திருமிகு கு. ஆறுமுகம் பிள்ளை அவர்களை இதுபோது அனுப்பியுள்ளோம்

தேச சேவையே தெய்வ சேவை யெனக் கொண்டு, தாய் நாட்டுச் சேவையும் தமிழ் நாட்டுச் சேவையும் ஒருங்கே யாற்றி, தமிழர்களுக்கு அன்பும் ஆதரவும் ஆனந்தமும் நல்க ஓர் காரணமாக இருந்து வருகிற தென்றுப் பல அறிஞர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட 'பாரதி'க்கு, இலங்கையிலுள்ள தமிழர்களும் ஈழ நாட்டின் தமிழ்ச் சோதர சோதரிகளும் முன்னினும் பன் மடங்காக, வேண்டிய உதவி யனைத்தையும் நல்க வேண்டுகின்றும்.

பத்திரிகையின் அபிவிருத்தி கருதியே இப் பிரதிநிதியை அனுப்பி யுள்ளோமாகையினால், ஆங்காங்குள்ள சந்தா நேயர்களும் பிற நண்பர்களும் இன்னவருக்கு வேண்டிய சகாயம் செய்வது தமது கடமையெனக் கொண்டு, எமது விருப்பத்தைப் பூர்த்தி செய்வார்களாக.

## "பாரதி"யின் புதிய போஷகர்

'பாரதி'யின் போஷகராக இம் மாதம் முதல் சேர்ந்து கொண்ட கோம்பை திருவாளர்களான V. S. ராமலிங்கம் செட்டியார் சகோதரர்களைப் பற்றி இங்குச் சிறிது குறிப்பிடாதிருக்க முடியவில்லை.

தந்தையார் (வானவாசி திருவாளர் ஸ்ரீராமன் செட்டியார் அவர்கள்) தம் கொள்கையின்படி, அவர் கொடுத்துக் காத்து வந்தது போலவே இவர்களும் அதனைப் பின்பற்றி நற் காரியந்தோறும் தவறாது விரும்புவோர்க் குதவிவருவது, இப் பகுதியி லுள்ளோர் யாவருக்கும் அறியக்கூடியதே யாகும்.

இதுபோது நாட்டில் பணக் கஷ்டம் நாளுக்கு நாள் அதிகமாகி யாவரையும் ஸ்தம்பிக்கச் செய்து வந்தாலும், தங்களது தந்தையாரின் உத்தம கொடைத் தன்மையைக் கைக்கொண்ட இவர்கள், 'பாரதி'யையும் தங்கள் தாராளப் போக்கினின்றும் ஒதுக்கிவிடாது, மனமுவந்து போஷகராகச் சேர்ந்து உதவி யளித்தது போற்றற்குரியதாகும்.

தமிழ் நாட்டில் உயர்ந்த முறையில் ஓர் மாஸிகையை நடத்த வெண்ணி 'பாரதி'யை ஆரம்பித்தோம். வருடம் 2 முடிவுற்று 3-ம் ஆண்டும் பிறந்து 2-ம் மணியும் வெளியேறி விட்டது. இதுவரை 'பாரதி'யினிடம் பிரத்தியேக அன்பு செலுத்தி ஆதரவு நல்கி வளர்த்தோரின் தொகை மிக மிகக் கொஞ்சமாகும். இதற்குப், பத்திரிகையின் போக்கும் நிலையும் சரிவர இன்னும் நாட்டினர் அறியாக் குறையே யெனச் சொல்லப்படுகிறது. அறிந்த அளவிலேனும் போஷிப்புண்டா வெனக் கேட்கின்றோம். ஓர் 2 ரூ. சந்தாவுக்குப் பல கடிதங்கள்—பல கஷ்டங்கள் படவும் நேர்கின்றது இலாபங் கருதா பத்திரிகையின்—அதுவும் தேசத்தொண்டே நோக்கமாகக் கொண்ட பத்திரிகையின் நிலைமையே இவ்விதமாயின் மற்றவைகளின் கதியைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ?

'பாரதி' நாட்டுத் தொண்டாற்றவே பிறந்தது, 'பாரதி' நாட்டுத் தொண்டாற்றவே வளர்ந்தது; 'பாரதி' நாட்டுத் தொண்டாற்றவே செழிப்புற வேண்டும் என்று, இன்று முதல் ஒவ்வொரு தமிழ்ச் சோதரரும் சோதரியும் கொண்டு, தங்கள் தங்களாலான உதவியை நல்க வேண்டுகின்றோம். பத்திரிகாபிமானிகளா யுள்ளோர் அபரிமிதமாக இதன் வளர்ச்சியில் கவலை கொண்டு, 'பாரதி'யின் வளர்ச்சி தங்கள் கையினிடத்தே யிருக்கின்ற தென்பதை யறிந்தவர்களாகி அனேக சந்தா நேயர்களைச் சேர்த்துதவுமாறு விரும்புகின்றோம். பணமிக்க செல்வர்களின் கடமை இங்குப் பிரதானமாகும். செல்வர்களின் கொடையாலேயே 'பாரதி' தனது 80 பக்கங்களுடனும் அரும் பெரும் விஷயங்களுடனும், பொருத்தமான படங்களுடனும், உயர்ந்த நேர்த்தியான கடிதத்தில் அழகாக அச்சிட்டுத் தாராளமாகப் பிரசுரிக்கப்படுகிற தென்பதை யறிவது அவஸ்யமாகும். குறைந்த சந்தாவிலே இத் தன்மையாகத் தமிழ் நாட்டில் வெளி வரும் மாஸிகை யொன்றுமில்லை யென்பதே இதற்குச் சான்றாகும். ஆகையினால் பத்திரிகைச் செழிப்புற, காலமும் கஷ்டமும் கவனியாது மனமுவந்து தாராளமாக இந்தத் தேசியப் பத்திரிகைக்குப் போஷகர்களாகிய கோம்பை திருவாளர்களான V. S. ராமலிங்கம் செட்டியார் சகோதரர்களைப் பின்பற்றி, தமிழ் நாட்டுப் பிரபுக்கள்—சீமான்கள்—செல்வர்கள், போஷகர்களாக முன்வந்து "பாரதி"யை நன்கு பலப்படுத்தி மேலும் பல பக்கங்களுடனும் அரிய விஷயங்களுடனும் பல படங்களுடனும் வெளியிட உதவுமாறு வேண்டிக் கொள்ளுகின்றோம்.



நன்மை செய்வோருக்கு நேரமும் இடமும் நிலைமையும் இலக்ஷியமில்லை யென்பதைச் செயலிற் காட்டி 'பாரதி'யின் பணிக்கு உறுதுணையாக என்றும் நின்று நிலவத் துணிந்து, அதன் போஷகராக மனமுவந்து சேர்ந்துகொண்ட கனவான்கள் V. S. ராமலிங்கம் செட்டியார் சகோதரர்களின் தாராள நோக்கத்தையும் பத்திரிகாபிமானத்தையும் பற்றி எண்ணும்போது மிகவும் மகிழ்சி யடைகின்றோம். அவர்களது தாராள சிந்தைக் கேற்றவாறே, க்ஷேமமும் செல்வமும் மென்மேலும் வளர்ந்தோங்கி நிலவி, மேலும் மேலும் ஒப்பற்ற நற்காரியங்களுக்கு உதவி பல புரிக தேவி பாரதியாம் அன்னை அருள் புரிய இறைஞ்சுகின்றோம்.

## மகாத்மா—வைசிராய் ராஜிப் பேச்சு

மிகவும் புத்திசாலித்தனமாக நடக்கும் இந்த ராஜி முறையை, இன்று உலகமே கவனித்துக் கொண்டிருக்கிற தெனச் சொல்லலாம். ஒரு பக்கம் அஹிம்ஸைக்கும் மறு பக்கம் ஹிம்சைக்கும் இராஜி நிகழப் போகின்ற ஆச்சரியத்தைப் பற்றி எண்ணாதாவ ரிலர். தேசீயத் தலைவர் காந்தி யடிகளார்க்கும் அரசாங்கத் தலைவர் லார்ட் இர்வினுக்கும் நடந்துவரும் சமாதானப் பேச்சைத் தற்போது விபரமாக அறிய முடியாவிட்டாலும், நம்பிக்கைக்கு இடமில்லலாம லில்லை. என்றாலும் விஷயத்தை விளக்கமாக அறியாது மதிப்பிடுவது இவ்வித சந்தர்ப்பத்தில் தகுதியெனத் தெரியவில்லை. மகாத்மாவே இதுபோது "விஷயங்கள் வானத்தில் தொங்கிக்கொண் டிருக்கின்றன" வெனச் செப்பியுள்ளார். மகாத்மாவின் மனதிலுள்ளதை அறிவது கடினமாகையினாலும் விஷயங்கள் முற்றுமறிய முடியாததினாலும் சற்று பொருத்திருப்போம்.

## புதிய தபால் விதியும் பத்திரிகைகளின் கஷ்டமும்

இந்தியாவுக்குப் பிரிட்டீஷாரால் வளங்கியவற்றுள் தபாலிலாக்கா போன்று சர்வ ஜனங்களுக்கும் பயன் தருவதானது பிறிதொன்றுமில்லை. என்றாலும் சுதந்திர மற்ற இந்தியாவில் அந்நியரின் ஆட்சியின் கீழ் நாட்டினரின் நியாயமான விருப்பம் நிறைவேறக் கூடியதாயிருக்கா தென்பதற்குத், தபால் இலாக்காக்கூட ஜனங்களின் வெறுப்புக் காரணமாகிவிட்ட தென்றால் அதிகம் சொல்லவா வேண்டும். நினைத்த போதெல்லாம் சட்டத்தைத் தங்கள் ஆட்சிக்கு உசிதம் போல் மாற்றி வரும் இந்திய அரசாங்கத்தினர் தபால் விதியையும் மாற்றியது ஆச்சரியமாகாது.

சில வருடங்களுக்கு முன் காலணாவாக இருந்த கார்டு அரையணாவாக இரட்டிக்கப்பட்டது. ½ அணாவாக யிருந்த விகிதம் ஓரணாவானது. இது போலவே யாவும் இரண்டத்தனை யானது. ஏழை இந்தியாவுக்குக் குறைவான கட்டண மிருந்து வந்தது கேவலமெனக் கருதிய அரசாங்கம், தனது கருணையால் இரட்டிப் பாக்கியதே பாக்கியமென வெண்ணி யிருந்தோம். மேலும் இவ் வருட ஆரம்பமுதல் புதிய விதியொன்றும் அமுலுக்கு வந்துவிட்டது. மூன்று நாட்களுக்குமேல் வி. பி களை தபாலாபீசில் வைத்திருக்க மாட்டார்கள். மேலும் விரும்பினால் 10 நாள் வரைக்கும் இருத்தலாம். ஆனால் இதில் எத்தனை நாள் வைத்திருக்க வேண்டுமோ அத்தனை நாளுக்கும் நாள் 1-க்கு 2-அணா ஸ்டாம்பு வீதம் முன்னாடியே ஒட்டிக் கொடுத்து விண்ணப்பித்துக் கொள்ளுதலும் அவஸ்யமாம். இச் சகாய முறையைப் பின் பற்றுவோர் பூச்சியமாகவே யிருப்பாரென்றே சொல்லி விடலாம்.

இந்தப் புதிய தபால் விதியால் பெரிதும் பத்திரிகைகளுக்கே கஷ்டம் அதிகப்படுகிறது. இந்தியாவில் தற்போது பல கஷ்ட நஷ்டங்களுக் கிடையிற்றான் சுதேச பாஷைகளிற் பத்திரிகையை நடத்திவர வேண்டி யிருக்கின்றது. இந் நிலைமையில் போதாக் குறைக்கு அவசர அச்சுச் சட்டமும் ஓர் பக்கம் அச்சத்தை விளைவிப்பதா யிருக்கின்றது. இதனை யெல்லாம் கடந்து ஒருவாறாகச் சமாளித்துக் கொண்டாலும், மாஸிகைகளை இப் புது விதியானது அதோகதியாக்கும் உண்மையை அறியாத தபாலதிகாரியின் போக்கைப் பற்றி எண்ணும் போதே மிகவும் வருந்தவேண்டி யிருக்கின்றது.

அறிவு தருவதற்காகவே மாஸிகைகள் நடந்து வருகின்றன. வாரம், தினசரி ஆகியவைகள் தினசரி—வார வர்த்தமானங்களையும் தந்து, இயக்கங்கள் பலவற்றையும் நடப்பித்து ஜனங்களுக்குச் சௌகரியத்தைக் கொடுத்து வருவதா யிருக்கின்றன. வாரம், தினசரி ஆகிய பத்திரிகைகளுக்கு ஓர் குறிப்பிட்ட காலமில்லை; என்றும் எப்பொழுதும் தருவிக்கலாம். மாதப் பத்திரிகைகளுக்கோ அவ்வாறில்லை யென்பது அறிந்ததே யாகும். எச் சமயத்தில் விரும்பினும் வருட ஆரம்பத்தி லிருந்தே அனுப்பப்படுவதா யிருக்கிறது. வருட முடிவில் மறுபடியும் பணமனுப்பாத அனைவருக்கும் ஒரே முறையில் ஆயிரக் கணக்கானவர்க ளாயினும் வி. பி யில் அனுப்பப்படுகிறது. எத்தனை பேர் 3 நாட்களுக்குள் பெற்றுக் கொள்ள முடியும்? தபாலில் வி. பி. வந்த நாளைத் தெரியாமலே கிராமாந்தரங்களுக்குச் சென்று 3-ம் நாள் மாலையில் வந்தால் வி. பி திரும்பி விடுகிறது. யாருக்கு வி. பி. அனுப்பப்பட்டதோ அவர் விஷயத்தை யுணரவும் முடிகிறதில்லை. ஆகையினால் பத்திராதிபர்களே நஷ்டத்தைப் பொருத்துக் கொள்ள



வேண்டும். இவ்விதமாக எத்தனையோ பேர் வி. பி. வந்ததையும் 3 நாளிருந்ததையும் அறியாமலே போய்விடலாம். இப் புது விதியால் 100-க்கு 30 வி. பி. பெற்றுக் கொள்வது அபூர்வமா யிருக்கின்றது. இது இவ் வருடம் நாமனுப்பிய வி. பி. களில் கண்ட அனுபவமாகும். நிற்க,

ஒன்று முன்பிருந்த மாதிரி 7 நாளாக விருக்க வேண்டும் அல்லது வி. பி. அனுப்பும் முறை யொழிய வேண்டும். பத்திரிகைகள் கடுமையாக நடந்துகொள்ள முடியாததினால் 3 நாளான இப் புதிய விதியை விடுத்து முந்திய 7 நாள் விதியையே அமுலி லிருக்கச் செய்யுமாறு தபாலதிகாரிகளைக் கேட்டுக் கொள்ளப் பத்திராதிபர்க ளனைவரும் முயல வேண்டும். இதனைச் செய்யப் பத்திராதிபர்கள் சங்க மிருப்பின் சிலாக்கியமாகும். பத்திரிகைகளுக்கு வரும் இன்னல்களை யொழிக்கச் சங்க மிருந்தாலன்றோ ஒருவாறு முயலலாம்; சிறிதாகவேனும் பலன் பெறலாம். தமிழ் நாட்டில் பத்திராதிபர்களின் சங்கம் ஸ்தாபிக்க முயலுவார்களா? பத்திரிகைகளுக்கு வரும் பொதுக் கஷ்டங்கள் நீங்கக்கூடுமா? எதிர் பார்க்கலாமா?

## பண்டிதரைத் தோற்றோம்

பாரத தேவியின் அருந் தவப் புதல்வர்—இந்தியாவின் செல்வச் சீமான்—அறிஞர்க் கறிஞர்—அதி மிக ராஜ தந்திரி—தியாகமே உருப்பெற்ற பண்டிதரை—இந்தியருக்குப் பண்டிதரை—பண்டித மோதிலால் நேருவைப் பிரிந்தோம். அந்தோ, பரிதாபம்! பரிதாபம்!!

அரசியற் போராட்டத்தில் எத்தனையோ பெருந் தலைவர்களை யிழந்துவிட்டோம். இப் பத்தாண்டில் பல அரிய திறம் படைத்த தியாகத் தலைவர்களைப் பிரிந்து வருந்தி வரும் இந்தியருக்குச் சமீபத்தில் மௌலானா முகமதலியின் பிரிவும் ஓர் பெருந் துக்கமாகும். இத் துக்க நிலை மாறுதபோது பின்னும் பேரிடிக் கொப்ப, பண்டித மோதிலால் நேரு காலஞ் சென்றா ரென்றால் இந்தியாவின் துரதிர்ஷ்டத்தைப் பற்றி என்ன சொல்லுவது! என்ன எண்ணுவது!!

பண்டித மோதிலால் நேரு தமது திறமையால் செல்வம் பெற்று அறிவாலும் ஆற்றலாலும் புகழ் பெற்றவர். தமது வக்கீல் தொழிலிலே ஆயிரமாயிரமாகச் சம்பாதிக்கப் பெற்றுக் குபேர சம்பத்தை யடைந்து, செல்வத்தால் சுகிக்கும் எல்லைக் கரையைக் கண்ட பெரியவராகும்.

பண்டித நேருவுக்கு இதுபோது வயது எழுபதாகும். வயதில் மிக்காரும் அறிவிலும் ஆற்றலிலும் ஒப்பாரும் பண்டிதருக்கு நிகர் நம் தாதாபாய் நௌரோஜியே யாகும். பண்டிதர் தள்ளாத வ்தி

லும் தேசியத் தொண்டில் வாலிபராகவே யிருந்தார். இந்தப் பத்து வருடங்களாக ஓயாது தேசிய வேலையி லீடுபட்டுத் தம்மையும் தமது அருமைத் தனிக் குமாரன் ஜவகர்லால் நேருவுடன் குடும்பத்தாரனைவரையும் தேசப் பணிக்கு அர்ப்பணம் செய்து, அளவற்ற செல்வத்தை தம்மைச் சூழ்ந்தோர்க் கீந்து தேசப் பணியே தெய்வப் பணி யெனக் கொண்டு ஆற்றிய கருமங்கள் அனந்தம்; அனந்தம்.

பண்டிதர் பஞ்சாப் படுகொலை நிகழ்ந்த பின்னரே தேசியத்தில் மிக மிக அதிகமாகச் சம்பந்தப்பட் டுழைத்தார். பஞ்சாப் படுகொலையினால் அவர் மனம் பட்ட பாட்டை யெழுதி முடியாது. அது சம்பந்தமாக அவர் எடுத்துக் கொண்ட உழைப்பு புகழத் தக்கதாகும். நாட்டு மக்களை நலமறியாக் கயவன் சுட்டு வீழ்த்தித் தலை யரசாங்கத்திலும் தனிப் பரிசு பெற்ற பின்னரே, பெரும் மிதவாதியான நேரு பண்டிதர் அமிதவாதியாகி அருந் தொண்டாற்றினார்.

1920ல் நாகப்பூரிலே கூடிய அகில இந்தியக் காங்கிரஸ் மகா சபையில் மகாத்மா காந்தியடிகளால் கொண்டு வரப்பெற்ற ஒத்துழையாத் தீர்மானம் நிறைவேறவும், அதன் வழி நின்று தொண்டாற்றிச் சிறை வாழ்வை முதலாவதாகப் பெற்றுப் புகழ் படைத்தார். அரசர் தம் அரண்மனையினும் சிறந்த—அருஞ் சிற்பிகளால் நிர்மாணிக்கப் பெற்ற ஆனந்த பவன மென்ற மாளிகையிலே, பன்னூறு பணியாள் வேண்டிய ஏவல் செய்யக் காத்திருந்து, அரச போகத்தைச் சுகித்த நமது பண்டிதர் சிறை வாழ்வை எவ்விதம் அனுபவித்தாரோ! தேச விடுதலையின்பாற் சென்றபின்னர் அவரது செல்வக் களியாட்டங்கள் அனைத்தும் ஒழிந்து சாதாரண எளிய வாழ்வே கொண்டாரென்றே சுருங்கச் சொல்லிவிடலாம்.

இந்தியாவின் தலையெழுத்தைத் திட்டமிட வெள்ளையான சைமன் கமிஷனில் இந்தியர்களுக்கு இடமில்லை யென்று கண்ட பின்னர் தமது சகாக்களுடன் சட்ட சபையை விட்டு நீங்கி, இந்தியாவின் மானத்தைக் காத்தார். இந்தியாவின் தலை யெழுத்தைத் தீர்மானிக்க பார்லிமெண்டால், வெள்ளையர்களாகவே நியமிக்கப் பெற்ற சைமன் கமிஷனை இந்தியர்கள் எவ்வளவு தூரம் வெறுப்புடனும் அதிருப்தியுடனும் வரவேற்கிறார்களென்று உலகுக் கறிவிக்கவும் எதிரிகள் நாணமடையவும் கூடிய கூட்டந் தோறும் தமது மனக் கிடக்கையை வெளியிட்டு, இந்தியரின் நியாயமான விருப்பத்தை யாவரும் அறியப் பறை சாற்றினார்.

இந்தியர்களால் தங்கள் தேசத்தை அரசாட்சி செய்ய முடியாது; திறமை பொருந்திய ஆட்களு மில்லை; அரசாங்கம் நடத்த ஓர் திட்டம்



வகுக்கக்கூடச் சக்தி யில்லாதவர்களென்று ஏளனம் செய்த குறுகிய நோக்குடைய ஆங்கிலேயர்களின் அறியாமைக்கு ஈடு செய்வான் வேண்டி, நேரு அறிக்கையைத் தயாரித்து யாவரும் பிரமிப்படையும்படி செய்தார். இதனைக் கண்ட வெள்ளையர் வாயிலாதவர்களானாலும் என்றும்போல வீண் கூச்சலுக்குப் பின்வாங்காதவர்களாகவே யிருந்தார்கள்.

பண்டித நேரு கல்கத்தா காங்கிரஸில் 2-ம் முறையாகத் தலைமை வகித்த பின்னர் ஓர் பெரும் மாற்றமே தேசத்தில் நிகழ்ந்தது. சில வருடம் அரசியலிற் கலந்துகொள்ளா திருந்த மகாத்மாவும் இங்குக் கலந்துகொண்டார். இதிலிருந்தே, இப்போது நடந்தேறி வரும் தேசியப் போராட்டத்திற்கு அஸ்திவாரம் நாட்டப்பட்டது. தேசத்தினரது அதி வேகத்தையும் அரசினரது பழம் பல்லவியையுங் கண்ட பெரியாரனைவரும், மகாத்மாவின் அஹிம்சை வழி பற்றிப் போர் துவக்கத் தயாராகினர். மகாத்மாவும் இது சமயம் உப்புப் போரை ஆரம்பிக்கவே எங்கும் போராட்டமாக முடிந்தது. இப் போரின் பயனாக மறு முறையும் பண்டிதர் சிறைக் கோட்டம் புகும் பாக்கிய பெற்றார்.

இம் முறை சிறையில் பண்டிதர் சௌக்கியத்துட னிருக்கவில்லை. வயதோ மிக அதிகம், அதிக சௌக்கியத்துட னிருக்கவேண்டியபோது, சிறைவாழ் வேற்பதாயின் நோய்கொள்ளா திருக்க முடியுமோ? பண்டிதர் சிறையில் நோயால் கஷ்டமுற்றார். இதன் காரணமாக இந்தியர் அதிகம் கவலைப்பட நேர்ந்தது. தள்ளாத பிராயத்தில் சிறை வாழ்வு—அதிலும் நோய் வாழ்க்கை யென்றால் எவ்வாறிருந்திருக்கும். அவரது நிலை கண்ட அரசாங்கம் நைநி சிறையினின்றும் விடுதலை செய்தது. சிறையிற் பலநாள் வசதியின்றி நோயுடன் சிரம முற்றதினால், விடுதலை பெற்றும் இலகுவில் குணம்பெற முடியவில்லை. பெரும் பெரும் வைத்திய சிகாமணிகளெல்லாம் முயன்றும் முடிவில் இந்தியாவின் துரதிர்ஷ்டத்தை மெய்ப்பிக்க நாளிது பிப்ரவரி மீ 6உ வெள்ளிக்கிழமை காலை 6½ மணிக்கு, மகாத்மா காந்தியுடன் இந்தியாவின் தலைவர்களானோர் உடனிருக்க, தம்மருங் குமாரரும் உற்றாரும் மற்றாரும் அருகிருக்கத் தேச விடுதலையே எண்ணமாக, தற்போது நடந்துவரும் சமாதானத்தில் கலந்துகொள்ளவும்—அபிப்பிராயமேனும் நல்கவு முடியாது, ஒவ்வொரு சோதர சோதரிகள், இமயமே ஆரம்பமாகக் குமரியே யெல்லையாகவன்றி இந்தியர் உறையும் நாடெல்லாம் கண்ணீரும் கம்பலையுமாகக் கலங்கவிட்டுக் காலமானார். இவரது பிரிவு சமாதானப் பேச்சு ஆரம்பித்திருக்கும் இது சமயத்தில் நிகழ்ந்தது பெரிதும் வருந்துதற்குரியதுடன் அளவற்ற நஷ்டமேயாகும்.

இந்திய தேசீய மண்டலத்திலே உயர் செல்வராய்—அறிஞராய்—தீரராய்—வீரராய்த்—தியாகியாய்க்—குபேர சம்பத்தைத் துறந்து—ஆனந்த பவனத்தைத் தேசீய சபைக்கு நல்கி—அதனைச் சுயராஜ்ய பவனமாக்கி மங்காத புகழைப் பாரில் நிலை நாட்டிய பண்டிதரை இன்று உலகமே புகழ்ந்து போற்றுவதா யிருக்கின்றது. அவரது பூதவுடல் மறைந்ததாயினும் புகழுடம்பால் இந்தியர்கள் யாவரும் தேசப் பணியில் தீரர்களாவார்க ளெனவே நம்புகிறோம்.

ஆனந்த பவனம் இன்று துக்கத்தில் மூழ்கித் தவித்துக்கொண் டிருக்கின்றது. அன்னையாம் பாரத தேவியும் தனது ஒப்புவமை யற்ற ஓர் மைந்தனைப் பிரிந்த துக்கத்தால் வாட்டமிகக் கொண்டு சோர்வானாள். நாட்டினரும் நண்பரும் விரோதிகளும் துக்கத்திலே ஆழ்ந்துள்ளார்கள். அந்தோ! பாரத நாடே!! அடிமை யுற்றது போதாதோ!!! அருந் தலைவர்களையும், பெரும் அறிஞர்களையும், சுத்த வீரர்களையும், சிறந்த பெரியார்களையும், அரிய தியாகி களையும், உத்தம பக்தர்களையும் உவமை யற்ற நிபுணர்களையும் இழந்து வருவதை யெண்ணில் உனது துர்ப் பாக்கியத்தை என்னென்போம். சுதந்திர மிழந்தோம்; துன்பமுற்றோம், வறுமைக் காளானோம். போதாக் குறைக்கு இவ்விதமாகப் பேரிடி யெல்லாம் சுமக்கவுமா உன்னிடத்தே தோன்றினோம்! அன்னையாகப் போற்றித் துதிக்கின்றோம்!! தேவி! உனது மக்களைப் பார்; அவர் தம் அழுங் குரல் கேள்; உனது ஒப்பற்ற பீடத்தைப் பெறவேண்டியே போராட்டம் நிகழ்கின்றது. நீ மட்டும் ஏனோ மறந்து மறைந்திருக்கின்றாய்? சஞ்சலத்தை யகற்றி உற்சாகத்தை ஊட்டி தளர்ச்சியைப் போக்கி சாந்தியை நல்கத் தயை புரிவாயா.

---

அடுத்த மாதம் வெளிவரும் விஷயங்களிற் சில.

1. பண்டித மோதிலால் நேருவின் சரிதை (படத்துடன்)
2. சுதந்திர அயர்லாந்த்
3. வேளாண்மையில் மின்சாரம்
4. குறைவற்ற செல்வம்
5. இந்தியர்களின் வறுமை.

198534


## என்

## "நவீன பாரதி"யில்

## விளம்பரஞ் செய்ய வேண்டும்?

தமிழ் நாட்டில் எல்லாக் கக்ஷியினராலும் ஒப்புக்
கொண்டு ஆதரிக்கப்பெற்று வருவதினால்

தமிழ் நாட்டிலன்றி வெளி நாட்டிலும்
தமிழர்களால் விசேஷமாக மதிக்கப்பெற்று
ஆதரிக்கப்பெற்று வருவதினால்

நாட்டுக்கு வேண்டும் நலமிக்க தொண்டு
நாட்டமுடன் செய்யும் நன் முயற்சியினால்

பனிரெண்டு மாதங்களிலும் பல்லோராலும் தருவித்து
ஆரம்ப மணியிலிருந்து வாசிக்கப்பெறுவதினால்

**விளம்பரஞ் செய்யின்**

**என்றும்**

## இலாபமுண்டு; க்ஷேமமுண்டு.

**உடனே விளம்பரஞ் செய்யுங்கள்.**

# புதிய சந்தா நேயர்கட் கோர் நல் விருந்து

சென்ற 1930-ம் வருஷத்தின் "பாரதி" & "நவீன பாரதி" யாகிய இரு பத்திரிகைகளின் பைண்ட் வால்யம் தயாராக இருக்கிறது.

இதில் இந்திய தேசாபிமானிகளின் படங்களுடன் பெரியாரின் படங்களும் அவர்தம் விரிவான சரிதைகளும் அடங்கி யுள்ளது.

இதுவுமன்றி பத்திராசிரியர்களால் வரையப்பெற்ற அவஸ்யமானதும் காலத்திற்கு வேண்டப் படுவதுமாகிய கட்டுரைகளுடன் அறிஞர்களாலும், சிறந்த ஆசிரியர்களாலும், பிரபல நியாயவாதிகளாலும் அறிவு தருவதாய், ஆனந்தம் நல்குவதாய், செல்வம் ஈவதாய் நவம் நவமாக எழுதப்பெற்ற அற்புதமான வியாசங்களைப் பெற்று 800 பக்கம் கொண்டதா யிருக்கின்றது. பத்திரிகையின் விஷயப் போக்குக்கும் அச்சுக்கும் ஏற்ற விதமாக உறுதியாக பைண்ட் செய்து, நேர்த்தியான காலிகோவினால் அழகு செய்விக்கப்பெற்று, தங்க மசியில் காலிகோவின் மேலும் அச்சிடப்பட் டிருக்கிறது.

இவ் வால்யம் தமிழராவோர் ஒவ்வொருவரிடமும் அவஸ்யம் இருக்க வேண்டிய இலக்கியப் பொக்கிஷங்களின் முதன்மையானதாகும்.

**பிரதி 1-க்கு விலை ரூ 2—8—0.**

தபாற் செலவு பிரத்தியேகம்.

மானேஜர், "நவீன பாரதி."



# 'Bharati' Directory—'பாரதி'ப் பேரேடு.

## வியாபாரிகளே!

உங்கள்

விலாசங்களை உலகத்திற்குத்

தெரியப்படுத்துங்கள்.

வர்த்தகர் உங்களை யார் என்று

என்ன வியாபாரிகளென்று,

எதை விற்கிறவர்கள்-

எதை வாங்குகிறவர்களென்று

முதலில் அறியட்டும்.

**இதோ —☛**

**வலதுபுறம் பாருங்கள்;**

ஆறு கட்டங்களிருக்கின்றன.

கட்டம் ஒன்றுக்கு

விளம்பர விகிதம்

**ஒரே ரூபாய்**

ஆயிரக் கணக்கான

பிரதிகள் அச்சிடப்படும்.

லக்ஷக் கணக்கான மக்க

ளால் வாசிக்கப்படும்.

கோடிக் கணக்கான

மக்களால் பார்வை

செய்யப்படும்.

**உடனே எழுதுங்கள்.**

**1000** பக்கங்கள் கொண்ட

**"பாரதி"**

ஒரு நூறு ஆசிரியர்களால்

எழுதப்படுவது

தமிழராகப் பிறந்தோர் தம்

மனத்தைக் கொள்ளைகொண்டு

அவர் தம் பூர்ண ஆதரவு பெற்று

வளர்ந்து வருவது

ராஜாக்களையும், மந்திரிகளையும்,

பெரும் பெரும் தனவந்தர்களையும்

சந்தாதாரராக வுடையது

உள் நாட்டிலும் வெளி நாட்டிலும்

தமிழரிடையிற் பரவி அவர் தமக்கு

ஆனந்தம் நல்குவதா யிருப்பது

விவசாயிகளும் வியாபாரிகளும்

விரும்பி பெற்று அதன் உயர்

வில் கருத்தைச் செலுத்தப்

பாக்கியம் பெற்றதா யிருப்பது

தேசியச் செல்வத்தை

வளர்த்து-காத்து,

யாவரையும்

சரிநிகர் சமானமாகக் கொள்ள

முயன்றுகொண் டிருப்பது

உத்தமபாளையம்

## ஆனந்தா பிரஸில்

செய்யப்பெறும் வேலைகளெல்லாம் நேர்த்தியாகவும் உயர்தரமாகவும் இருக்கின்றன வென்பதை அறியவேண்டும்.

அறியாதிருப்பின் பரீக்ஷைக் கேனும் பாருங்கள்.

---

தேவை.

பைண்டிங் சம்பந்தமான வேலைகளில் திறமை வாய்ந்த பைண்டர் தேவை.

மற்ற விபரத்திற்கு எழுதவும்.

---

இரண்டே ரூபாய்

ஒரு 100 விசிட்டிங் கார்டுகள்

உயர்ந்த ஐவரி கார்டில் நேர்த்தியான எழுத்துக்களால் அச்சிட்டுத் தபால் செலவின்றி அனுப்பப்படுகிறது.

---

நூறு லெட்டர் பேப்பர் கொண்ட பேட் 1-க்கு ரூ. 1½ தான்.

விரும்பிய விதமாக விலாசத்தை அச்சிட்டு அனுப்பப்படுகிறது.

தபாற் செலவு இனம்.

---

இங்கு

நாவல்களோ, பிற உயர்ந்த புத்தகங்களோ, பத்திரிகைகளோ, எதுவானு சரியே; பிழையின்றியும் கண் கவரும் விதத்திலும் அச்சிட்டுத் தரப்படுகிறது.

---

கஷ்ட நஷ்டமேன்!

ஒற்றுமை யுற்றிடில் ஒழியாதிருக்குமோ?

சேருங்கள்! ஒன்று கூடுங்கள்!!

திருவாங்கூர் ஏல விவசாயிகளின் சங்கத்தை உயிர்ப்பித்தாக்க முயலுங்கள்.

---

"கலா நிலயம்"

ஓர் உயர்தர இலக்கியப் பத்திரிகை.

வருட சந்தா உள்நாடு ரூ. 7–8–0

,, ,, வெளிநாடு ரூ. 9–0–0

மானேஜர், 11, வேளாளர் தெரு. புரசைப்பாக்கம், சென்னை.

---

க்ஷேமமும் இலாபமும் ஒருங்கே பெறலாம்.

T. C. P. A. ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனியில் பங்காளிகளா? அன்றேல் இன்றே சேருங்கள்.

---

தேவை.

நகரங்கள் தோறும் பத்திரிகையை விற்பனை செய்ய ஏஜெண்டுகள் தேவை.

நல்ல கமிஷன் கொடுக்கப்படும்.

மானேஜர், "நவீன பாரதி."

---

கல்கத்தாவிலும் பம்பாயிலும் "நவீன பாரதி"க்கு விளம்பரம் சேகரிக்க ஏஜண்டுகள் தேவை.

தமிழராகவே இருக்கவேண்டும்.

தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

---

ஆனந்தமடையலாம்

2-ம் வருஷ பைண்டு வால்யம்

ஒன்றை வாங்கினால் உங்கள் விருப்பம் நிறைவேறும்.

மானேஜர், "நவீன பாரதி."

---

கிரேட் ஈஸ்டர்ன் ஆப் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்டில் பதிவு செய்துகொள்ளுங்கள்.

(ஸ்டிரெயிட் செட்டில்மெண்டில் இணைக்கப்பட்டது.) (இங்கிலாந்தில் பதிவு செய்யப்பட்டது.)

உயர்ந்த தன்மை வாய்ந்த பாலிசிகளையுடையது. பாலிசி பணம் கட்டாததற்காக, பாலிசி பறிமுதல் செய்ய முடியாததற்கான விதிகளும், சாசுவதமாகவே பணம் கட்ட இயலாமல் நோயுற்று விட்டாலும் சரி அல்லது அபாயம் நேர்ந்துவிட்டாலும் சரி அவற்றிற்கும் சௌகர்யமான விதிகளுடனும் கூடியது.

மூன்று வருஷங்களுக்கொரு முறை போனஸ்! உத்திரவாதமுள்ள போனஸ் திட்டங்கள்!!

இந்தியாவிலே பணம் முதலீடு செய்யப்பட்டது. லாபகரமான நிபந்தனைகளின் கீழ் வேலை செய்ய ஏஜெண்டுகள் தேவை.

மற்ற விபரங்களுக்கு எழுதவும்:—

1. எம். வி. மர்ச்சண்ட், பிராஞ்சு மானேஜர், 50–52 சர்ச் கேட்டு தெரு, பம்பாய்.
2. சி. பி. கிருஷ்ண ராவ், சீப் ஏஜெண்டு, (மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி முதலிய ஜில்லாக்களுக்கு) 102, புதுத் தெரு, மதுரை.

---

## இனிக் கஷ்டமில்லை!

வியாபாரிகளுக்குப் புதிய சகாயம்

'பாரதி'ப் பேரேடு என்ற விளம்பரப் பக்கங்கள்

வியாபாரிகளின் சௌகரியத்தை யுத்தேசித்தே பிரசுரித்தே வருகின்றோம்.

ஓர் கலத்திற்கு விளம்பர விகிதம் ஓர் முறைக்கு ரூ. 1.

நேரமும் இடமும் பொருந்தி யிருக்கிறபோது சிறிது பணம் செலவிட்டு ஏன் இலாப மடையக்கூடாது?

## 'பாரதி'யின் பைண்ட் வால்யம்

# 1930-ம் வருட
# "பாரதி" & "நவீன பாரதி"

சஞ்சிகைகளனைத்தையும் அழகிய காலிகோ துணியால்
நேர்த்தியாகவும் உறுதியாகவும்
கில்ட் பிரிண்ட் செய்யப்பெற்றுத் தாப்படுகிறது.

## பைண்டிங் சார்ஜ் மட்டும் ரூ 1.

## ரூபாய் ஒன்றே தான்.

தூரத்திலுள்ள நண்பர்களின் சௌகரியத்தை யுத்தேசித்து
கண் கவர் காலிகோவில் கில்ட் பிரிண்ட் செய்த
மேல் அட்டையினை மட்டும்
தபாற் செலவின்றி
அணா **12**-க்கு
ரெஜிஸ்டர் செய்து
அனுப்பி வைக்கப் படுகிறது.
விரும்புவோர் முன் பணம் அனுப்பவும்.

மானேஜர்,
**ஆனந்தா பிரஸ்,**
உத்தமபாளையம்,
தேனி, S. I. Ry.

# T. C. P. A. ஏலச்சரக்கு விற்பனைக் கம்பெனி Ltd., கோம்பை.

1913-ம் வருஷத்திய இந்தியன் கம்பெனி ஆக்டுப்படி ரிஜிஸ்டர் செய்யப்பெற்றது.

பங்கு 1-க்கு ரூ 3 வீதம் 900,000 பங்குகளின் பேரில்
2,700 000 ரூ முலதனம்.

1. ஏல விவசாயிகளைத் தவிர வேறு எவரையும் பங்காளிகளாக ஒப்புக்கொள்ளப்பட மாட்டாது.

2. ஏல விவசாயிகளின் ஐக்கியத்தையும் லாபத்தையும் பிரதானமாகக் கொண்டு பிரஸ்தாபக் கம்பெனி ஸ்தாபிக்கப் பெற்று, ஏலச் சரக்குகளைக் கொள்முதல் செய்தும் கம்பெனி மெம்பர்களிடம் கன்செயின்மெண்டில் சரக்குகளைச் சேர்த்தும் லண்டன், ஜெர்மனி, அமெரிக்கா முதலிய அந்நிய தேசங்களுக் கனுப்பிவைத்தும் பாம்பை, கல்கத்தா, கராச்சி, டில்லி, கான்பூர், அம்ரிட்ஸர், விருதுநகர் முதலிய துறைமுகங்களில் சொந்தக் கடைகளை நிர்மாணித்தும் விற்றுமுதல் செய்து வருவதோடு சக்கர், முல்டான், லாகூர், அலகாபாத், ஆக்ரா, ஆதரிஸ், சென்னை முதலிய இடங்களில் விற்பனை எஜண்டுகளைக் கொண்டும் விற்றுமுதல் செய்து வரப்படுகிறது.

3. நல்ல விலைக்கு விற்க விரும்பும் ஏல விவசாயிகளும், நல்ல ஏலச் சரக்கை வாங்க விரும்பும் வியாபாரிகளும் இக் கம்பெனியை ஆதரித்துத் தக்க லாபத்தையும் மிக்கப் புகழையு மடையும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

உ. ம. சே. முகையித்தீன்பிள்ளை ராவுத்தர்,
மானேஜிங் டைரெக்டர்,
T. C. P. A. ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனி,
(லிமிடெட்.)
கோம்பை, மதுரை ஜில்லா.

# "நவீன பாரதி"

## ஒரு தேசீய மாதப் பத்திரிகை.

சுதந்திரம் பொங்கி சமத்வம் ததும்பி சகோதரத்வம் ஜ்வலித்து
குறைந்த சந்தாவிலே நிறைந்த விஷயங்களால் உயர்ந்த
மாஸிகையாய் மத பேதமற்று ஜாதி பேதமற்றுக்
கட்சி பேதமற்று இந்தியரனைவரும் பாரத
மாதாவின் மக்களென்ற மேலான
கொள்கையுடன் தேசாபி
விருத்தியை முக்கிய
முதல் நோக்கமாகக்
கொண்டு

**தேச விடுதலைக்காக உழைக்கும்**
**தேசீய மணம் கமழும்**
**'நவீன பாரதி'க்கு**

உடனே சந்தாதாரர்களாய்ச் சேருங்கள் உங்கள்
நண்பர்களுக்கும் இதனைப்பற்றி அறிமுகம்
செய்து சந்தாதாரர்களாய்ச் சேர்த்துக்
கொடுங்கள்.

### சந்தா விபரம்.

உள்நாடுகளுக்கு வருடத்திற்கு ரூ **2—0—0**
வெளி நாடுகளுக்கு ,, ரூ **2—8—0**
அல்லது **4** ஷிலிங்

தனிப் (சாம்பிள் காப்பி) பிரதி விலை அணா 3. வேண்டுவோர்
ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

ஏஜெண்டுகளாக விரும்புவோர் எழுதவும்.

பொறுப்பாளர்,
**"நவீன பாரதி" ஆலயம்.**
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

Printed, Edited and Published by R. SUBRAMAN' AM,
at ANANDA PRESS, Uthamapalayam, Madura Dt., S. India.